பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி

# கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்

பகுதி - II

பட்டப்பின் ஆசிரியர் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

03202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சமூகவியல் அடிப்படை

அத்தியாயங்கள் 7 – 11

பட்டப் பின்
ஆசிரியர் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்

ஏழாம் அத்தியாயம்
பாடசாலையும் அயற் சமுதாயமும் ........................................ 3

எட்டாம் அத்தியாயம்
ஆசிரியரின் செயற்பங்கும் அவரது அந்தஸ்தும் ........................ 30

ஒன்பதாம் அத்தியாயம்
கல்வியும் சமூக வகுப்பும் ................................................ 65

பத்தாம் அத்தியாயம்
கல்வியும் சமூக மாற்றங்களும் ........................................ 71

பதினோராம் அத்தியாயம்
சமூகவியல் ஆராய்ச்சி முறைகள் ........................................ 85

© 1991 தேசிய கல்வி நிறுவகம்
பதிப்பு : 1 : 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் அத்தியாயம்
# பாடசாலையும் அயற் சமுதாயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 5 |
| 2.0 | சிறப்பு நோக்கங்கள் | 5 |
| 3.0 | முற்சோதனை | 6 |
| 4.0 | பாடசாலையும் அயற் சமுதாயமும் | 6 |
| 4.1 | பாடசாலை, சுற்றாடல், பாடசாலை அயற் சமுதாயம், சமுதாயம் | 6 |
| 4.2 | பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையில் தொடர்புகள் இருத்தல் வேண்டுமா? | 9 |
| 4.3 | அயற் சமுதாயத்தினால் பாடசாலையின் மீது ஏற்படுத்தப்படும் சாதகமான பாதகமான தாக்கங்கள் | 12 |
| 4.4 | பாடசாலைக்கும் அயற்சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் எவ்வாறானதாக இருத்தல் வேண்டும்? | 15 |
| 4.5 | பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பு களைக் கட்டியெழுப்புவதற்காகப் பிரயோகிக்கக் கூடிய வெவ்வேறு வழி முறைகள். | 17 |
| 4.6 | சமுதாயப் பாடசாலை எண்ணக்கரு | 21 |
| 4.7 | பாடசாலைக்கும் அயற் சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தமட்டில் அதிபரின் செயற்பங்கு | 22 |
| 4.8 | பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தமட்டில் ஆசிரியரின் செயற்பங்கு | 23 |
| 5.0 | சாராம்சம் | 25 |
| 6.0 | பிற்சோதனை | 25 |
| 7.0 | விடைகள் | 27 |
| 8.0 | ஒப்படைகள் | 27 |
| 9.0 | கலைச் சொற்றொகுதி | 28 |
| 10.0 | மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் | 28 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

பாடசாலை சமூகம் என்பன தொடர்பான, ஜோர்ஜ்விலாட் பிரேஸியர் என்பவர் தெரிவித்துள்ள பின்வரும் கருத்தின் மூலம் உங்களுக்கு எதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது எனக் கவனியுங்கள். "நீங்கள் கற்பிக்க ஆரம்பித்தது முதல், ஒரு சமுதாயத்தில் சேவையாற்றுகிறீர்கள்; நீங்கள் சமூதாயத்தின் ஊழியர்கள்; நீங்கள் கற்பிக்கும் பாடசாலையின் கட்டடங்கள். திட்டம் என்பன சமுதாயத்தினால் ஆக்கப்பட்டவையாகும். நீங்கள் ஊழியமாகப் பெறுவது சமுதாயத்தின் பணமாகும். சமுதாயத்தின் பிள்ளைகளுக்கே நீங்கள் கற்பிக்கின்றீர்கள். அவ்வாறாக நீங்கள் கற்பிக்கும் பிள்ளைகள் எதிர்காலப் பிரஜைகளாவர், அவர்கள் சமுதாயத்தின் பிரதிபம்பமாகும். அது சமுதாயத்துக்குத் தேவையான விதத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகும். சில ஆசிரியர்கள் சமுதாயத்தை மறந்து விடுகின்றனர். தாம் சமுதாயத்தின் ஒரு பகுதியாவோம் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். சமுதாயத்தின், நோக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும், வகுப்புக்களையும் நன்கு உணர்ந்து கொள்ளும் அளவுக்கே நீங்கள் சிறந்த ஆசிரியராக மாறமுடியும் .........."

மேற்படி கூற்றின் மூலம் நீங்கள் பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய ஓரளவு தெளிவான கருத்தைப் பெற்றிருப்பீர்கள். இவ்வத்தியாயத்தில், பாடசாலை, சமுதாயம் ஆகிய எண்ணக்கருக்கள் விளக்கப்படுவதோடு, பாடசாலைக்கும் சமுதாயத்திற்கும் இடையில் காணப்பட வேண்டிய தொடர்புகள், அதன் பங்களிப்புக்கள் என்பன தொடர்பான விடயங்களும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்தோடு, சமுதாயப்பாடசாலை எனும் எண்ணக்கருவை விளக்குகையில், பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளின் போது, அதிபரதும் ஆசிரியர்களதும் செயற்பங்கு எவ்வாறானதாக அமைதல் வேண்டும் என்பது தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. சுற்றாடல், சமுதாயம், பாடசாலை, அயற் சமுதாயம் ஆகிய எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கத்தைப் பெறல்.

2. பாடசாலையானது அயற் சமுதாயத்துடன் தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் எனும் மனப்பாங்கை வலியுறுத்தல்.

3. சமுதாயம் தொடர்பான தகவல்களைத் தேடியறியவும் அதன் வழியே மாணவரின் பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளவும், அப்பிரச்சினைகனைகள் தொடர்பாகச் சரியான பயனுடைய முடிவுகளை மேற்கொள்ளவும் வேண்டிய திறனைப் பெற்றுக் கொள்ளல்.

4. கற்றல் / கற்பித்தல் கருமத்தொடரின் வெற்றிக்காகச் சமுதாயத்திலிருந்து பாடசாலைக்கும், பாடசாலையிலிருந்து சமுதாயத்தின் அபிவிருத்திக்கும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மனித, பௌதீக வளங்கள் தொடர்பான விளக்கத்தையும் அவ்வளங்களைத் தேடிப்பெறக்கூடிய திறன்களையும் பெறல்.

5. பாடசாலையின் மூலம் சமுதாயத்துக்கும், சமூகத்தின் மூலம் பாடசாலைக்கும் உச்ச அளவு சேவை ஆற்றப்படும் விதத்தில் கருமங்களைத் திட்டமிடும் திறமையையும் அது தொடர்பான மனப்பாங்கையும் ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சமூகத்துள் காணப்படுகின்றவையும், பாடசாலையினதும், மாணவர்களதும் ஆளுமை வளர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவையுமான பண்புகளை இனங்காணவும், அவற்றை ஆராய்ந்து தேடியறியவும், அவற்றுக்கான தீர்வுகளைக் காணவும் வேண்டிய திறன்களைப் பெறல்.

7. சமுதாயத் தொடர்புகளைப் பொறுத்தமட்டில் அதிபரினதும், ஆசிரியர்களினதும் செயற்பங்கு பற்றிய விளக்கத்தைப் பெறல்.

# 3.0 முற்சோதனை

பின்வரும் கருத்துகளுள் சரியான கருத்தைத் தெரிவு செய்க.

1. கல்விக் கருமத்தில் ஈடுபடும் ஆசிரியர்கள்,

   1. பாடசாலை அயற் சமுதாயத்துடன் தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   11. பாடசாலைக்கு உதவிகள் தேவைப்படும் போது மாத்திரம் சமுதாயத்தின் துணையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

   111. பாடசாலை அயற் சமுதாயத்துடன் இடையறாத தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. பாடசாலையில் நீங்கள் சந்திக்கும் மாணவர்கள் தொடர்பான போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனின்,

   1. மாணவரிடம் வினாக்கள் வினாவுதல் வேண்டும்.
   11. அவர்களது அங்கம்வகிக்கும் சமுதாயம் தொடர்பான தகவல்களை ஆராய்தல் வேண்டும்.
   111. மாணவரது நடத்தையை அவதானித்தல் வேண்டும்.

3. பாடசாலையின் மீது பாதகமான விதத்தில் பங்களிப்புச் - செய்கின்ற சமுதாயத்தின் சில பண்புகளை நீக்குவதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான வழி.

   1. அது தொடர்பாகப் பொலிசாருக்கு அறிவித்தலாகும்.
   11. பாடசாலையின் கடுமையான சட்டதிட்டக் கோவையொன்றினைப் பின்பற்றுதலாகும்.
   111. பாடசாலையும் சமுதாயமும் கூட்டாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாகும்.

# 4.0 பாடசாலையும் அயற் சமுதாயமும்

## 4.1 பாடசாலை, கற்றாடல், பாடசாலையின் அயற்சமுதாயம், சமுதாயம்.

**பாடசாலை**

பாடசாலையானது பரந்து விரிந்த சமுதாயத்தினுள் இயங்குகின்றது எனவும் அதனைச் சமுதாயத்தின் ஓர் உப தொகுதி எனவும் குறிப்பிடலாம் என முன்னர் கற்ற அத்தியாயங்கள் மூலம் நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். பாடசாலையானது சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும், தேவைகளையும் நிறைவு செய்வதற்காகக் கருமமாற்றுகின்றதும், சமூகத்தின் இன்றியமையாததுமான ஒரு நிறுவனமாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுற்றாடல்**

எமது சுற்றுப் புறமே சுற்றாடல் என அழைக்கப்படுகின்றது. பாடசாலையின் சுற்றாடல் பிரதானமான இரு அம்சங்களைக் கொண்டது.

1. பாடசாலையின் அகச் சுற்றாடல்
2. பாடசாலையின் அயற் சுற்றாடல் என்பனவே அவையாகும்.

பாடசாலை எனும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் அப்பாடசாலை தனது சுற்றாடலுடன் தொடர்புகளைக் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பாடசாலையின் அகச்சுற்றாடலில், ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய ஊழியர்கள் ஆகியோர் அடங்குவர். பாடசாலையின் அயற் சுற்றாடல் அதன் அகச் சுற்றாடலை விட விரிவானதாகும். சமூக, பொருளாதார. அரசியல் துறைகளைச் சேர்ந்த பல்வேறு நிலைமைகளும் அவற்றைச் சேர்ந்த பல்வேறு தனியாள்களும் இதில் அடங்குகின்றனர்.

**சமுதாயம்**

சமுதாயம் என்பது முற்காலத்தைப் போலன்றித் தற்போது மிகப் பரந்த பொருளைத் தருகின்றது என மீரியம் கிளாஸ்பி (Meriam Clasby) என்பவர் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் **சமுதாயம்** என்பது குறித்த **வரைய றைக்குட்பட்ட ஒழுங்கமைப்பைக் கொண்ட மக்கட் தொகுதியினருக்காக பிரயோகிக்கப்பட்டது எனவும், அன்றாட வாழ்க்கையின் போது வழங்கப்படும் குறித்த வரையறைக்குட்பட்ட சில நிருவாக அலகு, அம்மக்கட் தொகுதியினரிடையே பரஸ்பர ரீதியில் காணப் பட்ட பிணைப்பு ஆகிய இரு பண்புகளையும் அச் சமுதாயம் கொண்டிருந்தது** எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தற்கால தொழினுட்பச் சமுதாயங்களில் மனிதரின் வாழ்க்கையானது பல்வேறு பிரதேசங்களுடன் தொடர்புடையதாக் விளங்குகின்றது. தொழிலுக்காகப் பல மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள தூரப் பிரதேசங்களுக்குச் செல்லல் சமயக் கடமைகள், பொழுது போக்கு போன்ற நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு தனியார்களுக்கிடையே இடைத் தொடர்புகள் ஏற்படும். எனவே **இன்று அனுபவங்கள் தனிப்பட்டவையாகும். பிணைப்பானது கருக் குடும்பத்தினுள்ளேயே காணப்படுகின்றது.** "அயற் சமுதாயம் என்பதும் அரசியல், பொருளாதார, சமூக அமைப்புக்களின் பங்களிப் புக்காரணமாக மாற்றம்டைந்துள்ளது" எனக்குறிப்பிடும் அவர் இவ்வேறு பாட்டில் தாக்கம் விளைவித்த பிரதானமான வரலாற்றுச் சக்திகள் மூன் றினை எடுத்துக்காட்டியுள்ளார்.

1. நகரமயமாக்கம் - (Urbanization)
2. தேசியமமயமாக்கம் - (Nationalization)
3. சருவதேசமயமாக்கம் - (Internationalization)

இவ்விடயங்களின் பங்களிப்புக் காரணமாக, இன்று உலக சமுதாயம் அதாவது பிரபஞ்ச சமுதாயம் ஒன்று தோன்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. "வரையறைக்குட்பட்ட நீர், வளி, கனியங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரே ஒரு கோளே இன்று எமக்கு உள்ளது. இவற்றை நிர்வகிக்கவோ, விரயஞ் செய்வதற்கோ போட்டியிடுவதால் ஏற்படும் உகப்பற்ற பெறுபேறுகளும் தெளிவாகத் தென்படுகின்றன. எனவே உலகம் அழியாது நிலவ வேண்டுமெனில் மேற்படி பொதுவளங்களை ஒற்றுமையுடன் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். இதற்கு அமைய இன்றைய சமுதாயம் என்பது முன்னர் போன்று வரையறைக்குட்பட்ட ஒரு சமுதாயமாக அன்றி மிகப் பரந்து விரிந்த பிரபஞ்சச் சமுதாயயமாக அமைதல் வேண்டும். பிரதேசச் சமுதாயம் (அயற் சமுதாயம்) தன்னிறைவு அடைவதற்குப் பதிலாக **அண்டச் சமுதாயம் – பிரபஞ்சச் சமுதாயம் தன்னிறைவு அடைய** வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" சமுதாயம் என்பதற்குப் புது வரைவிலக்கணமொன்றினைப் பிரயோகித்தல் வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் என்பதற்குரிய மற்றுமொரு பாகுபாட்டைப் பின்வருமாறு சமர்ப்பிக்கலாம்

1. **குடியிருப்புச் சமுதாயம்** (Residential Community)
   குடியிருப்புச் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கட்டொகுதியினரால் ஆக்கப் படும் சமுதாயமே இதுவாகும்.

2. **சமூகச் சமுதாயம்** (Social Community): வெவ்வேறு சமூகத் தொடர்புகள் காரணமாகப் பிணைப்புறும் மக்கள் தொகுதியினர் ஒன்று சேர்வதால் தோன்றும் சமுதாயமே இதுவாகும். உதாரணம் : வெவ்வேறு சமூக ஒழுங்கமைப்புக்கள் / நிறுவனங்கள்

3. **ஒழுக்க சமுதாயம்** (Moral Community)
   நம்பிக்கை, ஒரே விதமான அனுட்டானங்கள், ஒரே விதமான விழுமியங்கள் ஆகியவற்றின் அடிப்படை ஒன்றினையும் மக்கள் தொகுதியினரையும் அதாவது சமூகத்தையுமே இது குறிக்கின்றது.

உதாரணம்: வெவ்வேறு சமய ஒழுங்கமைப்புக்கள். இவ்வாறாகச் சமுதாயம் என்பது பல்வேறு கண்ணோட்டங்களில் நோக்கக் கூடியதாக பரந்த கருத்தைக் கொண்டதுமான ஒன்றாகும் என்பது இதிலிருந்த தெளிவாகின்றது.

**பாடசாலையின் அயற் சமுதாயம்**

மேலே குறிப்பிடப்பட்ட பாகுபாட்டில் முதலாவது வகையின் கீழ் அடங்கும் சமுதாயத்துக்கு இதனைச் சிறப்பாக உள்ளடக்கலாம். **அதாவது பாடசாலைச் சுற்றுப் புறத்தில் குறித்த பிரதேசமொன்றில் வாழும் மக்கள் தொகுதியினரை அயற் சமுதாயம் எனக் குறிப்பிடலாம்.** எனினும் இன்று பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கவனிக்கையில் இப்பிரிவில் விசேட கவனஞ் செலுத்த வேண்டியதோடு மேலே குறிப்பிட்ட சமுதாயம் தொடர்பான பரந்த கருத்திலும் சமுதாயம் பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

## செயற்பாடு : 1

1. உங்களது பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயம் தொடர்பான ஆய்வொன்றினை நடத்துக. (இதற்காக, வெவ்வேறு மட்டங்களைச் சேர்ந்த மாணவர் (மாதிரியைத்) தெரிவு செய்து அவர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கலாம்)

2. இவ்வாய்வின் போது

   (அ) கல்வியறிவு

   (ஆ) வாழும் பிரதேசம்

   (இ) புரியும் தொழில்

   (ஈ) சமயம்

போன்றவற்றுக்கு அமைய அவர்களை வகைப்படுத்தக் கூடிய விதத்தை ஆய்வு செய்க.

3. இவ்வாய்வின் ஊடாக அச் சமுதாயத்தில் தெளிவாக வெளிக்காட்டப்படும் இயல்புகள் யாவை எனக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையில் தொடர்புகள் இருத்தல் வேண்டுமா?

பாடசாலை என்பது சமுதாயம் எனும் தொகுதியின் ஓர் உப தொகுதியின் ஓர் உப தொகுதியாகும் என முன்னர் குறிப்பிடப்பட்டது. யாதேனும் தொகுதி நிலைத்திருக்க வேண்டுமெனின் அது அதன் அயற் சுற்றாடலுடன் பரஸ்பரத் தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே **பாடசாலை எனும் தொகுதி நிலைத்திருக்க வேண்டுமெனின் அது கட்டாயமாக அதன் அயற் சமுதாயத்துடன் தொடர்புகளைக் வைத்திருத்தல் வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.**

**பாடசாலைக்கு மாணவர்களை வழங்குவதும், பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்களைப் பொறுப்பேற்பதும் சமுதாயமாகும்.** பாடசாலைக்கு வரும் பிள்ளை தன்னுடன் தனது பெற்றோரையும் பாடசாலைக்குக் கொண்டுவருகின்றது என "ஒடாவே" குறிப்பிட்டுள்ளார். அதாவது பிள்ளை தான் வீட்டில் பெற்றுக் கொண்ட அறிவு, மனப்பாங்குகள் நடத்தைகள் ஆகியவற்றுடனேயே பாடசாலைக்கு வருகின்றது. பாடசாலையில் மாணவர்கள் கொண்டிருக்கும் மனப்பாங்குகள் பெரும்பாலும் வளர்ந்தோரின் மனப்பாங்குகளுக்கு அமையத் தோன்றியவையாகும். வீட்டில் பெற்றுக் கொள்பவற்றுக்கும் பாடசாலையில் கற்பிப்பதற்கும் இடையே மோதல் காணப்படின் அதுவே பிள்ளை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அடித்தளமாக அமையக்கூடும். அது அவனது நடத்தை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமையலாம். சிறப்பான ஆசிரியர் பெற்றார் தொடர்புகளின் மூலமட்டுமே வீட்டுச் சுற்றாடல் பிள்ளையின் மீது பங்களிப்புச் செய்யும் விதத்தை விளங்கிக்கொள்ள முடியும் என"ஒடாவே" குறிப்பிடுகின்றார்.

ஜோஜ் விலாட் பிரேஸியர் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பிள்ளைகள் அனைவரும் ஒரேவிதமானவர்களாக இருப்பின் கற்பித்தல் மிக இலகுவாணதாகும். ஆனால் பிள்லைகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமானவர்களாவர். சிலரது சுற்றாடல் வளமானது. அவ்வாறானோர் சாதகமான நிலமைகளுடன் வருகின்றனர். மற்றும் சிலரது சுற்றாடல்வறியது. அவர்கள் பாதகமான நிலைமைகளின் கீழ் வழிதவறிச் சென்றோராவர். நீங்கள் மாணவனது சுற்றாடலையும் அவன் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயத்தையும் அச்சமுதாயம் அவன் மீது தாக்கம் விளைவித்துள்ள விதத்தையும் விளங்கிக் கொள்ளும் வரையில் அம்மாணவனை நீங்கள் நன்கு விளங்கிக் கொள்ள முடியாது. ஒவ்வொரு சுற்றாடலும் பிள்ளைக்கு யாதேனையும் கற்பிக்கின்றது. சில சுற்றாடல்களில் நன்மை, அன்பு, வரவேற்பு என்பன காணப்படும். மற்றும் சில சுற்றாடல்களில் இவை காணப்படுவதில்லை, இவ்வாறான வெவ்வேறுபட்ட சுற்றாடல்களில் மாணவரின் நடத்தை பல்வேறு வகைப்பட்டதாகக் காணப்படும். அவர்கள் அச்சுற்றாடலின் மொழி, நடத்தை போன்றவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவர். பிள்ளைகள் சமுதாயத்தின் பிரதிபலிப்புக்களாகும். அத்தோடு பிள்ளைகள் பாடசாலை தொடர்பான தகவல்களையும் ஆசிரியர்கள் பற்றிய தகவல்களையும் சமுதாயத்தினுள் கொண்டு செல்கின்றனர்." பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பின் முக்கியத்துவம் அதன் அவசியம் என்பன இக்கூற்றின் மூலம் நன்கு தெளிவாகின்றன.

பாடசாலையிலிருந்து தோற்றுவிக்கப்படும் பிள்ளைகளை ஏற்றுக் கொள்வதற்காகச் சமுதாயம் தயாராக உள்ளது. இப்பிள்ளைகளே சமுதாயத்தின் எதிர்காலப் பங்காளிகளாவர். அவ்வாறெனின் பாடசாலையின் ஊடாகப் பிள்ளைகள் சமூகமயமாக்கப்படல் வேண்டும். எனவே சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் அப்பாடசாலை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். சிறப்பான சமுதாயத் தொடர்பின் மூலமே இவ்விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஹல்ஸி என்பவரும் பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையிலான தொடர்பு வளர்ச்சியடைய வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றார். பெற்றோரிடத்தே கல்வி தொடர்பான விளக்கமும், ஆசிரியரிடத்தே சமுதாயம் தொடர்பான உணர்வும் வளர்க்கப்பட வேண்டும் என்பதே இத்தொடர்புகளின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை சமுதாயத்திலிருந்து விலகிச் செல்வதால் சமுதாயத்துள் பாடசாலை பற்றிய நம்பிக்கை குறைவடைகின்றது எனவும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை நெருக்கமானதாக ஆக்குவதே இதற்கான தீர்வாகும் என பெகீ ஓடெல் கொண்டர் என்பவர் குறிப்பிடுகின்றார். "பாடசாலையின் வாயில்கள் சமுதாயத்திற்காகவும் திறந்திருத்தல் வேண்டும். தாம் கருதுவதைவிடக் கூடுதலான அளவுக்கு யாதேனும் பாடசாலையிலிருந்து சமுதாயத்துக்குக் கிடைக்கப்பெறுகின்றது என்பதையும், பாடசாலையானது நாம் கருதும் அளவுக்குத் தீயது அல்ல என்பதையும் அவர்கள் இதன் மூலம் உணர்ந்து கொள்வர். அத்தோடு அவர்களது வளங்கள் அவரினது ஒத்துழைப்பு, உதவி, ஒத்தாசை போன்றவற்றையும் பாடசாலைக்கு வழங்குவதற்கு அவர்கள் முற்படுவர், அவ்வாறெனின் பாடசாலையானது சமுதாயத்தினுள் ஒரு போதும் தனித்துவிடமாட்டாது" எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கல்வி தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தியோரும், பல்வேறு நாடுகளின் கல்வி தொடர்பான விடயங்களைத் ஆராய்ந்தறிந்து சிபார்சுகளைச் சமர்ப்பித்த குழுவினரும் கூட பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் காணப்படவேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறான சில கருத்துக்கள் வருமாறு.

மஸ்கிரேவ், ரேலர், பர்னஸ்ரன், பாப், கிரீன் என்போர் நடத்திய ஆய்வுகளின் போது, பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையே விசேடமாகப் பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையே மிகத் தொலைவான தொடர்பே காணப்பட்டது என்பது தெளிவாயுள்ளது. பாடசாலையானது சமுதாயத்திலிருந்து அப்பாற்பட்டு, பெற்றோர்கள் என்போர் வலுவிழந்த ஒரு தொகுதியினர் எனக் கருதவும்பட்டுள்ளர் என்பது அவர்களது ஆய்வின் மூலம் தெளிவாகியுள்ளது.

இங்கிலாந்தின் கல்வி தொடர்பாக அமைக்கப்பட்ட 1944 இன் கல்விச் சட்டமூலத்தின் (பட்லர் சட்டமூலம்) 76வது சரத்தில் தமது பெற்றோரின் விருப்புக்கு அமையவே பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்திலும், வேல்ஸிலும், ஆரம்ப, இடைநிலைக் கல்வி தொடர்பான பரிபாலிப்பு பாடசாலை முகாமைத்துவம், நிருவாகம் என்பன தொடர்பான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை நுணுகி ஆராய்வதற்காக, 1977 இல் நியமிக்கப்பட்ட ரேலர் குழு "முறைமைசார் கல்விக்கு அப்பாற்பட்டோரும் அவர்களது பிள்ளைகளது கல்வி தொடர்பாகப் பாரிய பங்களிப்பைச் செய்யலாம்" எனவும், "புதிய கல்விக் கருத்துக்கள், முறைகள் என்பன பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காகப் பாடசாலை நிருவாகக் குழுக்களுக்கும் இடமளித்தல் பொருத்தமானது" எனவும் சிபாரிசு செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோ நிறுவனத்தினால் 1970 இல் நியமிக்கப்பட்ட சருவதேச ஆணைக்குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள **"வாழ்க்கைக்காகக் கல்வி"** எனும் அறிக்கையை கூட்டுமொத்தமாகக் கவனிக்கையில் **உண்மையிலேயே பாடசாலையினுள் இடம்பெறும் முன்னேற்றமானது, பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான விருத்திப் பங்குகளைக் கொண்ட செயல்முறைத் தொடர்புகளுடனேயே நிகழ்வதாகும்"** எனக் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம், சமுதாயத் தொடர்புகளின் ஊடாகப் பாடசாலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் அவ்வறிக்கையில் தொடர்ந்தும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "எவ்வாறாயினும், இவ்வாறான தொடர்புகள் பெரும்பாலும் உடலுழைப்பு தொடர்பான விருப்பையும் மதிப்பையும் பிள்ளைகளிடத்தே ஏற்படுத்துவதற்கும் பாடசாலைக்கும் அயற் சுற்றாடலில் வாழும் பட்டடைக்காரர்களும் இடையில் அல்லது பண்ணைகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளவும் உதவும். பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பினால் பெறக் கூடிய பயன்களை இக்கூற்று தெளிவாக விளக்குகின்றது.

செயற்பாடு : 2

1. உங்களது பாடசாலை, அது அமைந்துள்ள பிரதேசம் என்பன தொடர்பாக நீங்கள் முன்னர் மேற்கொண்ட ஆய்வை மீண்டும் பரிசீலிக்க.

2. நீங்கள் கற்பிக்கும் வகுப்பு மாணவர்களை அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சமூதாயத்தின் இயல்புகளுக்கு அமைய வகைப்படுத்தி பின்னணிச் சமூதாயத்தின் வேறுபாடு காரணமாக மாணவரின் நடத்தை, பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், புற இயல்புகள் என்பன எவ்வாறாக மாற்றமடைகின்றன எனப் பகுப்பாய்வு செய்து நோக்குக.

3. இப்பகுப்பாய்வுக்கு அமைய நீங்கள் பின்வருவற்றுள் எம்முறையை மேற்கொள்வீர்கள்.

   * பிள்ளைகளின் மீது அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயம் பெருமளவுக்குத் தாக்கம் விளவிக்கின்றது என்பது தெளிவாகின்றது.

   * பிள்ளைகள் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயம் அவர்களின் மீது தாக்கம் புரிந்துள்ள அளவானது குறிப்பிடத்க்க அளவுக்கு மாற்றமடைந்திருப்பதாகத் தெரியவில்லை.

4. உங்களது முடிவுக்குக் காரணமாக அமைந்த காரணிகள் யாவை என நீங்கள் கருதுகின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 அயற் சமுதாயத்தினால் பாடசாலையின் மீது ஏற்படுத்தப்படும் சாதகமான பாதகமான தாக்கங்கள்

பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி ஆய்வு செய்கையில் அயற் சமுதாயத்தினால் பாடசாலையின் மீது பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்பது தெளிவாகின்றது. **பாடசாலையின் நடவடிக்கைகளை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்வதற்கும், அதன் ஊடாகப் பாடசாலையினதும் சமுதாயத்தினதும் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் அயற் சமுதாயம் பங்களிப்புச் செய்ய முடியும். அத்தோடு பாடசாலையினது தன்மையையும் கருமத்தொடரையும் மாற்றியமைத்து பாடசாலையினது நடவடிக்கைகளைக் குற்றுயிர் நிலைக்கு மாற்றக் கூடிய தன்மையையும் சமூதாயம் கொண்டுள்ளது.** பாடசாலையின் மீது ஏற்படுத்தப்படும் உகப்பான தாக்கங்களைச் சாதகமான (நேர்த்தன்மையுடைய) தாக்கங்கள் எனவும், உகப்பற்ற தாக்கங்களைப் பாதகமான (மறைத்தன்மையான) தாக்கங்கள் எனவும் குறிப்பிடலாம். இத்தொடர்புகள் எவ்வாறானவையாக இருப்பினும் அத்தொடர்புகளிலிருந்து விடுபட்டுத் தனித்துக் கரும்மாற்றுவது பாடசாலையைப் பொறுத்தமட்டில் மிகமிகக் கடினமான தொன்றாகும். **பாடசாலையின் மீது பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தும் பல குழுக்கள்** (Pressure Groups) தொடர்பாக "குறொஸ்" என்பவர் அவரது ஆய்வுகளின் குறிப்பிட்டுள்ள அதாவது பெற்றோர் பாடசாலை அயற் சுற்றாடலைச் சேர்ந்த வர்த்தகத் தாபனங்கள், வியாபார நிறுவனங்கள், புதினத்தாள்கள், வழிபாட்டுத்தலங்கள், அரசியற் குழுக்கள், ஏனைய தனிப்பட்டமட்டங்களைச் சேர்ந்த பங்களிப்புக் குழுக்கள் இவற்றுள் அடங்குகின்றன.

**ஆர், கிம்பர்,** ரிசட்ஸன் என்போர் பாடசாலையின் மீது தாக்கங்களை ஏற்படுத்தும் சில குழுக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

1. வெவ்வேறு பிரிவுகளுக்கு அமையத் தாக்கங்களை ஏற்படுத்தும் குழுக்கள் (Sectional Pressure Groups) இவ்வாறான குழுக்கள் அவற்றின் அங்கத்துவர்களது விருப்புகளையும் தேவைகளையும் பாதுகாப்பதற்காகப் பிரயோகிக்கப்படுவனவாகும். உதாரணம் : ஆசிரியர் சங்கங்கள்.

2. முன்னேற்றம் சார்ந்த தாக்கக் குழுக்கள். (Promotional Pressure Groups)

இக்குழுக்களின் தொழிற்பாடுகள் மூலம் அங்கத்தவர்கள் பெறும் பயனை ... க் கூடுதலான அளவு பயனை ஏனையோரே பெறுவர். உதாரணமாக : சமுதாய அபிவிருத்திச் சங்கமொன்று பாடசைலையை விட்டுச் சென்றோரைச் சுய தொழில்களை மேற்கொள்வதன்பால் ஈர்க்கும் பாட நெறிகளை நடத்துவதற்காகப் பாடசாலைக் கட்டடத்தைப் பயன் படுத்தல். **கோகன்** என்பவர் தாக்கம் விளைவிக்கக் கூடிய பிரதானமான இரண்டு குழுக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு.

1. தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டபூர்வமான குழுக்கள். (Legitimized Pressure Groups)
   சட்டரீதியில் சிலபல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள அமைப்புக்களே இவையாகும். உதாரணம் : பல்கலைக்கழகங்கள்.

2. தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சட்டபூர்வமற்ற குழுக்கள். (Non-legitimized Pressure Groups)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை, நிலவும் அதிகார, ஆதிக்கங்களுக்கும், நிறுவனங்களுக்கும், சவாலாக முன்வருபவையாகும். குறித்த நிறுவனங்களின் கொள்கைகள் போன்றனவற்றை மாற்றியமைக்கவே இவை முயற்சிக்கின்றன. எனவே பாடசாலையின் மீது தாக்கம் விளைவிக்கக்கூடிய பல்வேறு வகையான குழுக்கள் சமுதாயத்துள் காணப்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடலாகாது.

சில வேளைகளில் பாடசாலையின் மீது உகப்பற்ற விதத்தில் பங்களிப்புச் செய்யக்கூடிய பல்வேறு பண்புகளும், நடத்தைக் கோலங்களும், அயற் சமுதாயத்துள் காணப்படுகின்றன என்பதன் பால் பாடசாலையின் கவனம் ஈர்க்கப்படல் வேண்டும்.

அவற்றுள் சில வருமாறு :

1. மதுபானப் பயன்பாடு

2. போதைப் பொருட் பயன்பாடு

3. சாதி, குல மோதல்கள்

4. சேரிகள்

5. உல்லாசப் பிரயாணத்துறை

பாடசாலையின் பால் சமுதாயம் உகப்பான அல்லது உகப்பற்ற விதத்தில் பங்களிப்பு செய்யக் கூடிய பல்வேறு சந்தர்ப்பங்களும், ஏதுக்களும் பாடசாலையினுள்ளேயே தோன்ற முடியும் என்பதை உணர்ந்து கொள்வதன் மூலம் பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளலாம்.

## செயற்பாடு : 3

1. உங்களது பாடசாலையின் அயற் சுற்றாடலில் காணப்படுகின்ற பாடசாலையின் மீது பாதகமான விதத்தில் தாக்கம் விளைவிக்கின்ற அல்லது அவ்வாறாகத் தாக்கம் விளைவிக்கக்கூடிய பண்புகளை இனங்கண்டு கொள்க.

2. உங்களது பாடசாலையில் உள்ள பிரச்சினைகளைக் கொண்ட பிள்ளைகளையும், உகப்பற்ற நடத்தைக் கோலங்களைக் கொண்ட பிள்ளைகளையும் இனங்கண்டு கொள்க.

3. சமுதாயத்தின் இப்பண்புகளுக்கும் மாணவரது நடத்தைக் கோலங்களுக்கும் இடையே தொடர்புகளேதும் காணப்படுகின்றனவா என ஆராய்ந்தறிக.

இன்று பாடசாலையில் கற்கும், பிள்ளை, எதிர்காலத்தில் சமுதாயத்தின் பங்களிப்பாக மாறுகின்றது என முன்னர் குறிப்பிட்டோம். அவ்வாறாயின் **பாடசாலையில் மாணவன் பெறும் அனுபவங்களுக்கு அமைய அவனது வளர்ந்தோன் மனப்பாங்குகள் கட்டியெழுப்பப்படும்.** பாடசாலைக்கு உகந்த விதத்தில் கருமமாற்றுகின்ற, தமது அர்ப்பணிப்புடன் தமது தொழிலில் ஈடுபடுகின்ற, மாணவரின் மதிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய செயற்றிறனுடைய ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர் எதிர்காலத்தில் பாடசாலை தொடர்பாக உகப்பான மனப்பாங்குகளைக் கொண்டிருக்கக்கூடிய, பாடசாலைக்கு மதிப்பளிக்கக்கூடிய வளர்ந்தோராக மாறுவர். இவ்வாறானோரைக் கொண்ட சமுதாயத்தின் மூலம் எப்போதும் சுமூகமான தாக்கமே பாடசாலையின் மீது ஏற்படுத்தப்படும். அதாவது பாடசாலையின் முன்னேற்றத்துக்கு ஏதுவாகும் தாக்கங்களே இவற்றால் ஏற்படுத்தப்படும். அர்ப்பணிப்புடன் கருமமாற்றாத தமது பொறுப்புக்களைப் புறக்கணிக்கும் தன்மையுடைய ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்கள், பாடசாலையின் மீது **வைராக்கியம் கொண்ட உகப்பற்ற மனப்பாங்குகளைக் கொண்ட வளர்ந்தோராக மாறுவர். இவ்வாறானோர் அப்போதும் பாடசாலையின் மீது** உகப்பற்ற தாக்கங்களையே ஏற்படுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் நடவடிக்கைகள் தொடர்பாகப் பெற்றோருக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம், அவைபற்றி அவர்களுக்கு வழுங்கப்பட்டுள்ள அறிவித்தல் என்பனவற்றின் அளவின் மீதிலேயே பாடசாலையின் நடவடிக்கைகள் தங்கியுள்ளன என, மஸ்கிரேவ், ரேலர் என்போர் (1969 இல்) மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாயுள்ளது.

பாடசாலையினுள் இடம்பெறும் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் வரையறைப் பட்டதும் தனது நன்மையையும், வசதியையும் மாத்திரம் கவனத்திற் கொள்வதுமான பாடசாலை, சமுதாயத்திலிருந்து விலகிச் செல்லும். பண்டைய பதவி முறையையும், அதனுடன் தொடர்புடைய பண்டைய பாடவிதானத்தையும் பின்பற்றும் போது இவ்விடைவெளி மேன்மேலும் அதிகரிக்கின்றது. அவ்வாறே பண்டைய மனப்பாங்குகள் போன்றனவற்றில் ஆழ்ந்துள்ள பெற்றோருக்குப் பரிச்சயமற்ற வேறுபட்ட கல்வி முறைகள், கல்வி நடவடிக்கைகள் போன்றனவற்றை பாடசாலையினுள் அறிமுகப்படுத்துவதன் காரணமாக பாடசாலையானது சமுதாயத்திலிருந்து விலகிச் செல்லும். அது மட்டுமன்றி அந்நடவடிக்கைகள் தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக சமுதாயமானது பாடசாலையைத் தனக்கெதிரான ஒரு பயமுறுத்தலாகவும் கருதும் நிலை ஏற்படும்.

பாடசாலையினுள் கருமமாற்றுவோர், பெற்றோரையும் அயற் சமுதாயத்தினரையும் பாடசாலை நடவடிக்கைகளிலிருந்து அப்புறப்படுத்திவைத்தலானது, பாடசாலையினது நடவடிக்கைகளைக் இலகுவாக்கும் எனக் கருதுதலும், சமுதாயத்தைப் பாடசாலையிலிருந்து விலகிச் செல்லச் செய்வதொன்றாகும். இதன் காரணமாக அச்சமுதாயம் பாடசாலையின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்த வழியேற்படும்.

ஷாப், கிரீன் ஆகியோரால் (1975 இல்) நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் பொருளாதார ரீதியில் வளமிக்க பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக பாடசாலையின் மீது தாக்கம் விளைவிக்க முடியுமெனினும் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பெற்றோருக்குப் பாடசாலையின் மீது குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பது தெளிவாயுள்ளது. அவ்வாறே பெற்றோரின் கல்வியறிவு அதிகரிக்கையில் அவர்களது தொழில்சார் மட்டம் உயரும் போது பாடசாலையின் மீது தாக்கம் விளைவிக்கக்கூடிய தன்மையும் அதிகரிக்கின்றது என அவர்கள் குறிப்பிடுகின்றனர். பெற்றோரது வசிப்பிடம், அவர்களது வசிப்பிடத்தை மாற்றும் திறன் அவர்களது அரசியல் வலிமை போன்ற விடயங்களுக்கு அமையவும் அவர்களது பங்களிப்பின் தன்மை மாற்றமடைகின்றது என்பது தெளிவாகியுள்ளது. பாடசாலைக்கு வருகைதரும் மாணவரின் எண்ணிக்கை உறுதியானதாக இருக்கையில் பெற்றோர்கள் பாடசாலையின் மீது பங்களிப்புச் செய்வது கடினமானது எனவும் அதன் காரணமாக பாடசாலைப் நவீனமயமாக்கம் குறைகின்றது என்பதும் 1964 இல் கால்சன் நடத்திய ஆராய்ச்சின் மூலம் தெளிவாகியுள்ளன. பாடசாலையினது அயற் சமுதாயம் ஒரே இனத்தைச் சேர்ந்ததாக இருப்பின் பாடசாலையின் மீது சமுதாயத்தால் ஏற்படுத்தப்படும் தாக்கம் அதிகரிக்கின்றது எனவும் பாடசாலை அயற் சமுதாயம் பல்வேறு இனங்களைக் கொண்டதாக இருப்பின் அல்லது அச்சமுதாயம் பல பிரிவுகளாகக் கூறுபட்டிருப்பின் அச்சமுதாயத்தினால் பாடசாலையின் மீது ஏற்படுத்தப்படும் தாக்கம் குறைவடைகின்றது எனவும் ஒலிவ் பான்க் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

## செயற்பாடு : 4

1. பாடசாலை அயற் சமுதாயம் உங்களது பாடசாலை நடவடிக்கைகளில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திய சந்தர்ப்பங்களையும் அத்தாக்கங்களை ஏற்படுத்திய சமுதாயக் குழுக்களையும் கோவைப்படுத்துக.

2. அத்தாக்கங்களைப் பாடசாலைக்குச் சாதகமான தாக்கங்கள் பாடசாலைக்குப் பாதகமான தாக்கங்கள் எனவும் வகைப்படுத்துக.

3. அத்தாக்கத்தை ஏற்படுத்திய குழுக்களுக்கும் அத்தாக்கங்களின் தன்மைக்கும் இடையே எவ்வாறான தொடர்புகளைக் காணமுடிகின்றது என ஆய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4 பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் எவ்வாறானதாக இருத்தல் வேண்டும்?

பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் அவ்வப்போது வெவ்வேறு போக்குகளைக் காட்டியுள்ளமை தெளிவாகின்றது. இன்று பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் ஒரு புதுப் போக்கைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது தொண் டேவிஸ் என்பவரின் பின்வரும் கூற்றிலிருந்து தெளிவாகின்றது.

> "சமுதாயம் நலிவடைந்து செல்கின்றது. பாடசாலைகள் கடினமான பிரச்சினைகளுக்குள்ளாகிக் காணப்படுகின்றன. வளங்கள் வரையறைக் குட்பட்டுள்ளன. பண்டைய வரைவிலக்கணங்களும் சூத்திரங்களும் பொருளற்ற தன்மையைக் காட்டுகின்றன"

**இன்றைய பாடசாலைகளிடம் முன்னரை விடக் கூடுதலான அதாவது பாடசாலையால் தனித்து நின்று பூர்த்தி செய்ய முடியாத அளவு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன** என்பதை ஜோன் ஐ குட்லட் என்பவரும் குறிப்பிட்டுள்ளார். முன்பு குடும்பத்தினால் மேற்கொள்ளப்பட்ட, பிள்ளை பேணி வளர்த்தல், ஒழுக்கசீலம் மனப்பாங்குகள், விழுமியங்கள், தொழிற்றிறமைகள், ஆகியவற்றை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் இன்று பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனினும் பாடசாலைகள் இவ்வனைத்துக் கருமங்களையும் குடும்பம் வழிபாட்டுத் தலங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பு இன்றித் தனித்து நின்று மேற்கொள்கின்றன எனக் குறிப்பிடும் அவர் பாடசாலைகள் தனித்து நின்று அவற்றை மேற்கொள்வதற்கும் பதிலாக **கல்வியின் ஈடுபடும் ஒரு சமுதாயமே இன்று தேவையாக உள்ளது** எனவும் குறிப்பிடுகின்றார்.

நியூஸிலாந்து அறிக்கையொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக "ஆசிரியரது மாற்றமடைகின்ற நடிபங்கு" எனும் நூலில் தரப்பட்டுள்ளது.

> "பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான முனைப்பான நிறுவனவரையறைகள் நெகிழ்வுடையனவாக இருத்தல் வேண்டும். அதனூடாக வளங்களும். அனுபவங்களும் இரு புறமாகவும் பிரகாசித்துச் செல்லல் வேண்டும். இதற்காக இரு சாராரதும் மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டியன அவசியமாகும்."

அந்நூலில் இடம் பெற்றுள்ள மற்றுமொரு கூற்று வருமாறு: -

"பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையே சிறப்பான தனியாள் இடைத் தொடர்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டுமெனின் பாடசாலையின் நுழைவாசல்கள் சமுதாயத்தினருக்குத் திறந்து விடப்படல் வேண்டும். எனினும் மேற்கொள்ள வேண்டியது யாது என்பதைப் பாடசாலையே தீர்மானித்து அதனை வெளியே கொடுப்பின் குறித்த தொடர்பு ஏற்பட்டுவிடமாட்டாது. அவ்வாறெனின் **பாடசாலையானது சமுதாயத்திலிருந்து விடுபட்ட தனித்தொரு சிறிய சமுதாயமாக அன்றி சமுதாயத்தின் நன்மைக்கும் அதன் தொழிற்பாட்டுக்கும் உகந்த மிகச் செயற்றிறனுடைய முனைப்பான குறிக்கோள்களைக் கொண்டதொன்றாக மாற்றுவதற்காகச் சமுதாய அமைப்பினால் விருத்தி செய்யப்பட்ட விசாலிக்கப்பட்ட ஓர் அமைப்பாகும் எனவே கருதுதல் வேண்டும்.** அவ்வாறெனின் சமுதாயத்தின் வெவ்வேறு அம்சங்களது கூட்டான முயற்சியின் ஊடாகவே திட்டங்கள் முன்வைக்கப்படல் வேண்டும். பாடசாலையானது சமூகத்துள் விசாலிப்படைதல் வேண்டும். அது சமுதாயத்தைத் தேடிச் செல்ல வேண்டும். அது கட்டிடங்களின் ஊடாகவும் நெகிழ்ச்சியற்ற சம்பிரதாய பூர்வமான பாடநெறியிலிருந்து அப்பாற்பட்டு சமுதாயத்தின் தேவைகளைத் தேடிச் சென்றும் அதற்கு எவ்வாறு சேவைகளை ஆற்றுதல் வேண்டும். பாடசாலைக்கும் அயற் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்புகள் முன்னரைவிட விரிவான தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இதிலிருந்து தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றிய மற்றுமொரு அம்சம் குட்லாட் என்பவரின் பின்வரும் கருத்தினால் தெளிவாகின்றது.

**சமுதாயத்திற்காகப் பல்வேறு சேவைகளையும் கல்வியையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய நிறுவனங்களுடன் ஒற்றுமையுடன் கருமாற்றுதலே பாடசாலையினால் ஆற்றப்பட வேண்டிய கருமமாகும். மாறாக சகல கருமங்களையும் பாடசாலை தனியே பொறுப்பேற்று நடத்துவது பொருத்தமானதாக அமையாது. ஏனைய சேவைகளாலோ, நிறுவனங்களாலோ ஆற்றமுடியாத ஆனால் பாடசாலையினால் மட்டும் ஆற்றக்கூடிய "கல்வி" போன்ற கருமங்கள் மாத்திரம் பாடசாலையினால் ஆற்றப்படல் வேண்டும்.**

அயற் சமூகத்துடன் பாடசாலை கொண்டுள்ள தொடர்புகளை மற்றுமொரு கோணத்தில் பின்வருமாறு நோக்கலாம்.

அதாவது,

1. நிருவாகத் தொடர்புகள் :
   உதாரணம் :- மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோருடனான தொடர்புகள்.
2. அரசியல் தொடர்புகள் :-
   உதாரணம் :- பிரதேச மக்கள் பிரதிநிதி, உள்ளூராட்சி நிறுவனங்கள், அபிவிருத்திச் சபைகள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்புகள்.
3. சமூகத் தொடர்புகள் :-
   உதாரணம் :- பெற்றோர், வழிபாட்டுத் தலங்கள், நலன்புரிச் சங்கங்கள் போன்ற பல்வேறு சமூக நிறுவனங்களுடன் கொண்டுள்ள தொடர்புகள்.

இவ்வனைத்துத் தொடர்புகளின் மூலமும் பாடசாலைக்கும் அவ்வம்சங்களுக்கும் இடையே இரு வழியாகவும் பரஸ்பர ரீதியில் நன்மைகள் கிடைக்கப் பெறும்.

**செயற்பாடு : 5**

1. உங்களது பாடசாலை அதன் அயற் சமுதாயத்துடன் மேற்கொள்ளும் தொடர்புகளின் போது, பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த

   எவ்வெத் தனியாளர்களுடன் தொடர்புகளை மேற் கொள்கின்றது என வகைப்படுத்துக.

   1. நிருவாகம்
   2. அரசியல்
   3. சமயம்

2. அத்தொடர்புகளின் ஊடாகப் பாடசாலைக்குக் கிடைக்கப் பெறும் பயன்களையும் அந்நிறுவனங்களுக்கு அல்லது தனியாள்களுக்குக் கிடைக்கப் பெறும் நன்மைகளையும் பட்டியற்படுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காகப் பிரயோகிக்கக் கூடிய வெவ்வேறுவழிமுறைகள்

"வாழ்க்கைக்காகக் கல்வி" எனும் அறிக்கையில் "மேலும் பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையே இதனைவிட மிகத் திருப்திகரமான தொடர்புகளைக் கட்டியெழுப்பிக், கொள்வதற்காகக் மேற்குறிப்பிட்ட முறைகளைவிட முற்றிலும் வேறுபட்ட முறைகளைக் கையாளல் வேண்டும் ..........." எனக்குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காகப் பல்வேறு முறைகளைப் பிரயோகித்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. **பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையில் நற்றொடர்பு காணப்பட வேண்டுமெனின் பாடசாலையை உலகுக்காகத் திறந்துவிடல் வேண்டும்** என்பதும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. "பாடசாலையை உலகுக்குத் திறந்துவிடலானது இரு விதங்களில் செயற்படுகின்றது. இவற்றுள் முதாலாவது விதத்துக்கு அமைய பல் சேவைக் கலாசார நிலையமாகப் பாடசாலையை நோக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. பாடசாலை நூலகம், பொது நூலகமாகத் தொழிற்படுகின்றது பாடசாலையின் கூட்ட மண்டபம் பிரதேச நாட்டிய மேடையாகும். ஆய்கூடங்கள், செயற்கூடங்கள், விளையாட்டு வசதிகள், கட்புல செவிப்புல கூடங்கள், பதிவு கூடங்கள் போன்றவை குறைந்த பட்சம் பாடசாலையின் நேரத்தின் பின்னரோ, பாடசாலை விடுமுறைக் காலங்களிலோ சமுதாயத்தின் தேவைக்காகப் பயன்படுத்தப்படும். இவ்வாறாக அயற் சமுதாயம் பூரணமாகவும் வேரூன்றுவதற்கான வாய்ப்பைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாடசாலையை அதன் தனித்த நிலையிலிருந்து மீட்பதற்கும் கிராமியப் பாடசாலைகளில் மட்டுமன்றி நகர்பிரதேசங்களிலும், சமுதாயத்துக்கு ஏற்ற விதத்தில் பாடசாலையைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் முயற்சி மேற்கொள்ளப்படும் .........." இக் கூற்றுக்கு அமைய, பாடசாலையானது சமுதாயத்துள் பரந்து செல்லல் வேண்டும் அது சமுதாயத்தைத் தேடிச் செல்ல வேண்டும் என்பதே தெளிவாகின்றது. பாடசாலை அயலில் அமைந்துள்ள இடங்களைப் பார்வையிடுவதற்காக மாணவர்களைக் கூட்டிச் செல்லல், சமுதாயத்தில் மேற்கொள்ளப்படும் சிரமதானம் போன்ற நடவடிக்கைகளில் பாடசாலை மாணவரை ஈடுபடுத்தல், பாடசாலையில் காணப்படும் வளங்களைச் சமுதாயத்தின் நன்மைக்காகப் பிரயோகித்தல், பாடசாலையின் குறிக்கோள்கள், புதுச் செயற்றிட்டங்கள் என்பன பற்றிச் சமுதாயத்துக்கு விளக்கமளித்தல், சமுதாயத்தை வகுப்பறையாயும், ஆராய்ச்சிக் கூடமாயும் பயன்படுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பாடசாலையைச் சமுதாயத்துள் கொண்டு செல்லலாம். பாடசாலையானது தொழிற்பாடுகளைச் சமுதாயத்துடன் பரப்புதல் வேண்டும். சமுதாயத் தேவைகள் பாடசாலையினால் நிறைவு செய்யப்படல் வேண்டும். பாடசாலையானது, பாடசாலைக்கு வருகைதராத பெற்றோர்களைத் தேடிச் செல்லல் வேண்டும். அது மிக மிக அவசியமானதாகும்.

**செயற்பாடு : 6**

1. உங்களது பாடசாலையின் அயற் சமுதாயத்துக்கு ஏற்ற சமுதாய அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றினைச் சமர்ப்பிக்குக.

2. மேற்படி சமுதாய அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்காக உங்களது பாடசாலையில் காணப்படும், மனித, பௌதிக வளங்களைப் பிரயோகிக்கக் கூடிய விதம் பற்றிய திட்டமொன்றினைத் தயார்ப்படுத்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கைக்காகக் கற்றல்" எனும் அறிக்கையில் பின்வருமாறும் குறிப்பிடப் பட்டுள்ளது. "இவ்வாறாகவே பெற்றோரைப் பாடசாலை அமைப்புடன் நேரடியாக ஒன்று சேர்த்துக் கொள்வதற்கும் கல்வியினது பூரணமான திட்டத்தில் விசேடமாக சமுதாயப் பாடசாலைகளிலும், பெற்றோர் பாடசாலைகளிலும் அவர்களைப் பங்காளிகளாக ஆக்கிக் கொள்வதற்கும் குடும்ப மட்டத்திலும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது." இவ்வறிக்கையின் 19வது விதந்துரைப்பில். "ஏனைய தொழில்களில் ஈடுபட்டுள்ள நிபுணர்களையும், துணையாளர்களையும் (தொழிலாளிகள், நுட்பவியலாளர்கள், ஊழியர்கள், நிறைவேற்று அதிகாரிகள்) தொழில் ரீதியில் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் கூட்டாகக்கரும மாற்றுவதற்காக அழைத்தல் வேண்டும்" எனக் குறிப்பிடப் பட்டள்ளதோடு, அதன் விமர்சனத்தில் "......... கற்பிப்பதற்கான சுதந்திரத்தை ஆசிரியர்களுக்கு வழங்கி இத்துணையாளர்கள் கற்பித்தலைச் சேராத பொறுப்புக்களை இயன்ற அளவில் ஏற்றல் வேண்டும். அத்தோடு அவர்கள் தத்தமது அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, அவை மூலம் கற்பித்தற் பயிற்சிகளின் போது துணை புரிதல் வேண்டும். ........" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது** சமுதாயத்தைப் பாடசாலைக்குள்ளும் கொணருதல் வேண்டும் என்பதே இதிலிருந்து தெளிவாகும் விடயமாகும். அதாவது சமுதாய வாழ்க்கையானது பாடசாலை நடவடிக்கைளின் மையமாக அமைதல் வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

**இவ்வாறாகச் சமுதாயத்தைப் பாடசாலையுள் கொண்டுவருவதற்காகப் பின்பற்றக்கூடிய பல வழிவகைகள் உள்ளன.** சமுதாயம் தன்னகத்தே கொண்டுள்ள பல்வேறு வித அறிவு, திறன்கள், வளங்கள் ஆகியவற்றைப் பாடசாலைக்கும், மாணவருக்கும் பெற்றுக் கொடுக்கலாம். சமுதாயத்தில் மரபுரீதியான விழுமியங்களையும், மரபுரீதியான அறிவுப் பொக்கிசத்தையும் கொண்டுள்ள தனியாள்களை இனங்கண்டு அவர்களைப் பாடசாலையில் கற்கை நடவடிக்கைகளில் துணையாகப் பிரயோகித்துக் கொள்ள வேண்டும். வெவ்வேறு அம்சங்களில் திறமையைக் கொண்டுள்ள பேச்சாளர்கள் ......... பாடசாலையினால் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு விலையுயர்ந்த உபகரணங்கள் போன்றவற்றை இதன் மூலம் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க வழிகிடைக்கும். சமுதாயத்திலிருந்து துணையாசிரியர்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பாடசாலை ஆசிரியர்களின் வேலைப்பொறுப்பு குறைவடைகிறது. சமுதாயத்தின் ஊடாகச் செலவேதுமின்றி மாணவர்க்குப் பல்வேறு திறன்களைப் பெற்றுக் கொடுக்கலாம். சமுதாயத்தைப் பாடசாலையுள் கொண்டுவருவதன் மூலம் பல்வேறு நிறுவனங்களினதும், சேவைகளினதும் துணையையும் அப்பாடசாலையினால் பெற்றுக் கொள்ளலாம்.

சமுதாயம் மதிக்கும் கலாசாரப் பண்புகள், விழுமியங்கள், சமுதாயத்தின் உண்மையான வாழ்க்கையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், சமுதாய வளங்கள் போன்றவற்றின் அடிப்படையில் பாடசாலைப் பாடவிததானத்தைத் தயார்படுத்துதல் சமுதாயத்தைப் பாடசாலையுள் கொண்டுவரக்கூடிய மற்றுமொரு முறையாகும். அமெரிக்காவைச் சேர்ந்த உயர் பாடசாலையொன்றில் ஆதர் டேல் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் சமுதாயத் தேவைகளைப் பாடசாலை நடவடிக்கைகளில் புகுத்தியிருந்தார். உணவு வகைகளை நற்காப்புச் செய்தல், உடைகள் தைத்தல், தச்சு வேலை, விவசாயம், கட்டட நிர்மாணம் போன்ற நடவடிக்கைகளும் இவ் வேலைத்திட்டதில் புகுத்தப்பட்டிருந்தன.

இன்று மிக விரைவாக மாற்றமடைந்து வரும் உலகில், வளர்ந்தோர்களும் கற்போராக மாறுகின்றனர். வளந்தோருக்கு எழுத்தறிவு ஊட்டல், அவர்களது பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்ற நடவடிக்கைகள் மூலமும் சமுதாயத்தைப் பாடசாலையுள் கொண்டுவர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**செயற்பாடு : 7**

1. உங்கள் பாடசாலையினது கற்கைக் கருமத்தொடரில் அயற் சமுதாயத்துள் காணப்படும் வளங்களைப் பிரயோகிக்கக்கூடிய வித்தைத் தெரிவு செய்து கொண்ட சில உதாரணங்களைத் துணையாகக் கொண்டு திட்டமிடுக.

உதாரணம்: சமூகக்கல்விப் பாடம் தொடர்பான உள்ளூராட்சி, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற தலைப்புக்களைப் பொறுத்த மட்டில்,

| |
|---|
| சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், சமுதாயத்தின் அபிவிருத்திக்காகவும் சமுதாய வளங்களைப் பிரயோகிப்பதற்காக வழிகாட்டல் மூலமும், அதற்காக முன்வரல் மூலமும் பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்பலாம். |

மின்ஸே என்பவர் குறிப்பிடுவதற்கு ஏற்ப பாடசாலையானது சமுதாயப் பிரச்சினைகளையும் சமுதாய வளங்களையும் ஒன்றிணைக்கும் தரகராகக் கருமாற்றுதல்வேண்டும்.




இங்கு தரகர் என்ற வகையிற் பாடசாலையினால் ஆற்றப்பட வேண்டிய சில கருமங்களை அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

1. சமுதாயப் பிரச்சினைகளை இனங்காணல்
   சமுதாய வளங்களை இனங்காணல்.

2. குறித்த சமுதாய வளம், அப்பிரச்சினையை அறிந்து கொள்ளச் செய்தல் அதன் மூலம் அவ்வளம் அப்பிரச்சினையைத்தீர்க்க உதவுதல்.

3. பிரச்சினை இனங்காணப்படிருப்பினும் குறித்த நிறுவனங்கள், போன்றவற்றால் அது தீர்க்கப்பட்டிராவிடின், பாடசாலையானது குறித்த நிறுவனங்களுக்கு அப்பிரச்சினைகளை விளக்குதல் அவசியமாகும். அப்போது அந்நிறுவனங்கள் பிற நிறுவனங்களுடன் இணைந்து அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பிரச்சினைகள் இனங்காணப்பட்டிருப்பினும், அவற்றைத் தீர்க்கக்கூடிய நிறுவனங்கள் சமுதாயத்துள் காணப்பட்டிருந்திருக்கலாம். அவ்வாறான வேளைகளில் பாடசாலையின் வழிகாட்டலுடன் சமுதாயமானது அதன் சொந்த வேலைத்திட்டங்களின் மூலம் வசமுள்ள வளங்களைக் கொண்டும் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பல்வேறு வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

**இவ்வாறாகச் சமுதாய அபிவிருத்திக்காகச் சமுதாய வளங்களைப் பிரயோகிப்பதற்காகப் பாடசாலையே முன்வந்து கருமமாற்றுதல் வேண்டும். வெவ்வேறு சமுதாய அமைப்புக்களை அமைப்பதற்குத் தேவையான தலைமைத்துவம், பயிற்சி உதவிகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதும், குறித்த நிறுவனங்கள் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அவற்றுக்குரிய தீர்வுகளை மேற்கொள்வதற்கும் தேவையான அறிவையும் வலிமையையும் பெற்றுக் கொடுப்பதும் பாடசாலையினால் மேற்கொள்ளக் கூடியதாகும்.**

அத்தோடு வெவ்வேறு சமுதாயச் சேவைகளைப் பரப்புவோருக்கு அவற்றுக்கான மைய நிலையமாகப் பாடசாலையைப் பயன்படுத்த இடமளிப்பதன் மூலமும் சமுதாய வளங்களைச் சமுதாய அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். சமுதாயத்தின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் ஒரு நிலையமாகவே பாடசாலை கருமமாற்றுதல் வேண்டும். சமுதாயத்தின் கலாசார பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் முரண்பாடுகளைச் சமுகப்படுத்துவதற்கும் சமுதாய வளங்களைப் பிரயோகிப்பதற்காகப் பாடசாலையினால் கருமமாற்ற முடியும்.

**செயற்பாடு : 8**

1. உங்களது பாடசாலையில் காணப்படும் (மனித, பௌதிக) வளங்களை ஆய்க.

2. பாடசாலையின் அயற் சமுதாயத்தில் காணப்படும் (மனித, பௌதிக) வளங்களை ஆய்க.
   நீங்கள் ஆய்வு செய்யும் வெவ்வேறு அம்சங்கள் தொடர்பான திட்டமொன்றினைச் சமர்ப்பிக்குக.

3. பாடசாலையிலும், சமுதாயத்திலும் காணப்படும் இவ்வளங்களை,
   (அ) மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்காகவும்
   (ஆ) கற்றல் / கற்பித்தல் கருமத்தொடரின் வெற்றிக்காகவும்
   (இ) சமுதாய அபிவிருத்திக்காகவும்

எவ்வாறாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன என ஆராய்ந்தறிக.

4. மேலே குறிப்பிடப்பட்ட வெவ்வேறு அம்சங்களின் வளர்ச்சிக்காக, அவ்வளங்களைப் பிரயோகிக்கக்கூடிய வேறு வழிவகைகள் இருப்பின் அவற்றை விளக்குக.

**பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையே நற்றொடர்பைக் கட்டியெழுப்புகையில் கவனஞ் செலுத்த வேண்டிய சில விடயங்கள் வருமாறு.**

1. பாடசாலையின் நோக்கங்களும், சமுதாயத்தின் நோக்கங்களும் இணங்குபவையாக இருத்தல் வேண்டும்.
2. சமுதாயத் தொடர்புகளின் போது சமுதாயத்தின் மூலம் கிடைக்கப் பெறும் உதவிகள் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் போன்றவற்றையும் விமர்சனங்களையும் ஏற்றுக் கொள்வதற்குப் பாடசாலை தயாராக இருத்தல் வேண்டும்.
3. பாடசாலைக்கு உதவிகள் போன்றவை தேவைப்படும் சந்தர்ப்பங்களிலோ பிற சந்தர்ப்பங்களிலோ மாத்திரம் பரிகார நடவடிக்கையாகச் சமுதாயத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நற்சமுதாயத் தொடர்புகள் கட்டியெழுப்பப்படமாட்டாது. இதற்கான ஒழுங்கான, முறையான, இடையீடற்ற வேலைத்திட்டமொன்று காணப்பட வேண்டியது அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.6 சமுதாயப் பாடசாலை எண்ணக்கரு

பொதுப் பாடசாலைகளைச் சமுதாய நிலையங்களாகக் கருதும் எண்ணக் கரு புதிதாகத் தோன்றிய ஒரு கருத்தல்ல, 1898இல் நியூயோர்க் சட்ட சபை (New York City State Legislature) யினால் உறுதிப்படுத்தப்பட்ட சட்ட மூலத்தில் பொதுமக்களுக்கான கல்விக்கும், பொது போக்குகள், பொது மக்களின் நன்மைக்கு ஏதுவாகும் பிற நடவடிக்கைகள் ஆகியவற்றுக்காகவும் பாடசாலையினது வளங்களைப் பிரயோகித்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நாட்டின் பண்டைய கல்வியில் கல்வி நிறுவனமாக அமைந்திருந்த பன்னசாலையும் சமுதாய மத்திய நிலையமாகவே காணப்பட்டது. சமுதாய வாழ்க்கையின் பண்பு தொடர்பான உணர்வு ஏற்பட்டமை அமெரிக்காவின் 20வது நூற்றாண்டில் ஆரம்பித்தில் கல்வியில் ஏற்பட்ட ஒரு புதிய திருப்பமாகும். இதன் விளைவாக, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி ஆகியவற்றின் போது சமுதாயமையக் கல்வியின் முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜோன் டூயி என்பவரின் செய்திட்ட முறைக்கும் முற்போக்குக் கல்விச் சங்கமும், உறுதியான பாடவிதானத்தை மறுதலித்தமையும் செயல் ரீதியான கல்வியை அறிமுகஞ் செய்தமையும் பாடத்துடனிணைந்த தொழிற்பாடுகளில் கவனஞ் செலுத்தியமையும் போன்ற பல்வேறு விடயங்களும் பாடசாலைச் சமுதாயத் தொடர்பின் முக்கியத்துவத்தைத் தெளிவாக வெளிக்காட்டுவதற்குத் தூண்டு கோலாக அமைந்தனவாகும். 1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேடும் சமுதாய எண்ணக்கரு தோன்றுவதற்குத் தூண்டு கோலாக அமைந்தது.

**ஒல்ஸன் என்பவர் சமுதாயப் பாடசாலைகளுக்கு மூலதாரமாக அமையும் ஏழு எண்ணக்கருக்களைப்** பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

1. சமுதாயப் பாடசாலை தற்கால வாழ்க்கையின் பண்பை வளர்க்கின்றது.
2. சமுதாயமானது சமுதாயப் பாடசாலையைக் கற்கைக்குரிய ஆராய்ச்சிக் கூடமாக பிரயோகிக்கின்றது.
3. சமுதாயப் பாடசாலையின் பாடசாலைக் கட்டடங்கள் சமுதாயத்தின் மைய நிலையமாகும்.
4. சமுதாயப் பாடசாலையானது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் வாழ்க்கைக் கருமத் தொடரையும் ஒட்டியதாகப் பாடத்திட்டத்தை ஒழுங்கமைத்துக் கொள்ளும்.
5. சமுதாயப் பாடசாலையானது அதன் கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் திட்டமிடும் போது அதற்காகச் சமுதாயத்தைப் பிரயோகித்துக் கொள்ளும்.
6. சமுதாயப் பாடசாலைகள், சமுதாய இணைப்பாக்கத்தில் பிரதான இடத்தைப் பெறுகின்றன.
7. சமுதாயப் பாடசாலைகள், ஒவ்வொரு மனிதத் தொடர்பின் போதும் சனநாயகப் போக்கைக் கொண்டிருப்பதோடு அதனை விரிவுபடுத்துவதற்காகவும் கருமமாற்றுவனவாகும்.

இங்கிலாந்து, கேம்பிரிச்ஷயரின் கல்விச் செயலாளராயிருந்த, ஹென்றி மொருஸ் என்பவர் 1928இல் ஸோஸ்டன் இல் முதலாவது கிராமியச் சமுதாயப் பாடசாலையை அமைத்தார். இது முழுக் கிராமத்தையும் ஒரு மையத்தின் பால் ஈர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். இங்கு பகல் வேளையில் பிள்ளைகள் பாடசாலைக்கு வருகின்றனர். வளர்ந்தோர்கள் மாலைவேளைகளில் உரைகளைச் செவிமடுக்கின்றனர், இளைஞர்கள் நாடகம், விளையாட்டு, நடனம் போன்றனவற்றில் ஈடுபடுகின்றனர். யுவதிகள் மனையியல், சமையற்கலை போன்றவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றனர். முதியோர்கள் நூலகத்தில் வாசிக்கின்றனர். இதற்கு அமைய சமுதாயத்தின் ஒவ்வோர் அங்கத்தவரும் தத்தமது விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய வெவ்வேறு பொதுப்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கும் அதன் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளின் ஊடாகத் தோன்றிய "சமுதாயப் பாடசாலை எண்ணக்கரு" உலகின் பல்வேறு நாடுகளில் விசாலிப்படைந்துள்ள விதம் இவ்வுதாரணங்களின் மூலம் தெளிவாகின்றது.

**செயற்பாடு : 9**

1. உங்களது பாடசாலை அமைந்துள்ள சமுதாயம் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தறிக.
2. அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சமுதாய வளங்களைப் பிரயோகிக்கக்கூடிய விதத்தை ஆய்ந்தறிக.
3. அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இதுவரையில் பிரயோகிக்கப்படாத சமுதாய வளங்களை அதற்காகப் பிரயோகிப்பதற்காகப் பாடசாலையினால் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பை உள்ளடக்கிய வேலைத்திட்டமொன்றினைத் திட்டமிடுக.
4. சமுதாயத்தின் மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பாடசாலையினது வளங்களைப் பிரயோகிக்கக்கூடிய விதத்ததை விரிவாகக் குறிப்பிடுக.

## 4.7 பாடசாலைக்கும் அயற்சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தமட்டில் அதிபரின் செயற்பங்கு

**சிறந்த பாடசாலை / சமுதாயத்தொடர்பு வேலைத்திட்டமொன்றின் போது அதிபரால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புக்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.**

1. பாடசாலையின் அயற் சமுதாயத்தை நன்கு இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.
2. சமூகத் தொடர்புகளின் போது பாடசாலையின் செயற்பங்கு தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
3. தமது செயற்பங்கை இனங்கண்டு கொள்ள வேண்டியதோடு, தாம் கொண்டிருக்க வேண்டிய திறன்களையும், நிபுணத்துவங்களையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
4. சமுதாயத் தொடர்புகளைத் திட்டமிடும் பிரதானமான அடிப்படையான பொறுப்பு அதிபருக்குரியதாக அமைதல் வேண்டும்.
5. சமுதாயத் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு ஊடகங்கள் தொடர்பான / சிறப்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பாடசாலை, நிருவாகம், அரசியல், சமூகம் ஆகியன தொடர்பான பல்வேறு துறைகளுடனும் அத்துறைகளைச் சேர்ந்த பல்வேறு தனியாள்களுடனும் நிறுவனங்களுடனும் சிறப்பான கருத்துப் பரிமாற்ற அமைப்பைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் வேண்டும்.

7. பாடசாலையினதும் சமுதாயத்தினதும் வளங்கள் பற்றி ஆராய்ந்தறிந்து அவை பற்றிய போதிய விளக்கத்தைப் பெற்று அவ்வளங்களைப் பொருத்தப்பாடுடைய தாக்கி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 4.8 பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தமட்டில் ஆசிரியரின் செயற்பங்கு

**பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையே நற்றொடர்பு கட்டியெழுப்பப்படுவதற்கு ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய பல கருமங்கள் உள்ளன.** ஆசிரியர் எப்போதும் சமுதாயத் தொடர்பு வேலைத்திட்டத்தின் பங்காளியாக இருத்தல் வேண்டும்.

1975இல் நடத்தப்பட்ட கல்வி தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கு அறிக்கையில் பின்வருமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. "புதிய இராச்சியங்களைச் சேர்ந்த பொது மக்களால் மிகச் சிறப்பான வாழ்வை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் போராட்டத்தில் **ஆசிரியரும்** கட்டாய பங்காளியாக மாறுதல் வேண்டும். இதற்காக அவர் **மரபுரீதியான, தனித்த பாடசாலையிலிருந்து அப்பாற் சென்று பொது மக்களின் அன்றாட வாழ்க்கையையும் அவர்களது எதிர்பார்ப்புக்களையும் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்."** பாடசாலை / சமுதாயத் தொடர்புகளின் போது ஆசிரியரது செயற்பங்கின் ஓர் அம்சம் தெளிவாகின்றது. இதற்கு ஏற்ப பாடசாலையின் அயற் சமுதாயத்துடன் பொறுப்புடனும் விளக்கத்துடனும் பயன்மிகு இடைத்தொடர்புகளை அவர் மேற்கொள்ளல் வேண்டும். இங்கு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்பு சாதகமான நேர்த்தன்மையுடையதாகவே இருக்கும். "ஆசிரியரின் மாற்றமடையும் செயற்பங்கு" எனும் நூலிலும், ஆசிரியர் கல்வியியலாளர்களின் கருத்தையும் நோக்கங்களையும் சமுதாயத்துக்கு விளக்க வேண்டுமெனவும் அதன் மூலம், **சமுதாயம் தமது பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் புதிய வேறுபட்ட கருத்துக்கள், அறிவு ஆகியன தொடர்பாக அர்த்தங்களையோ தளம்பல் நிலையையோ ஏற்படுத்திக் கொள்ளாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.** அவ்வாறே புதிய மாற்றங்கள் தொடர்பாகச் சமுதாயம் சிந்திக்கும் விதத்தையும் ஆசிரியர் ஆய்வு செய்தல் வேண்டும். பிள்ளையின் சுற்றாடல் பற்றிக் கவனஞ் செலுத்தி அது தொடர்பாக அனுபவத்துடனும், புரிந்துணர்வுடனும் கற்பிப்பதற்கு இது துணையாக அமையும். புதிய செயற்றிட்டங்கள் தொடர்பாகச் சமுதாயம் காட்டும் ஆர்வம், எதிர்ப்பு, பயம் போன்றவற்றை நேரடியாக அவதானிக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் அவை காணப்படும் சந்தர்ப்பங்களும் இருக்கக்கூடும். அவ்வாறான வேளைகளில் அவர்களது சந்தேகங்களைப் போக்குவதற்கும் அவர்களிடத்தே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் மாற்று வகைகளைக்கையாண்டு கருமமாற்றுதல் வேண்டும் எனவும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோமஸ் லன்டர்ஸ், மியர்ஸ் என்போர், "அயலவர்களுடனும் சமுதாய ஒழுங்கமைப்புக்கள், பிற சமுதாய, நிறுவனங்கள் போன்றவற்றுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் மூலம் பாடசாலை ஒதுக்கீடுகளை வளர்த்துக் கொள்ள முடியும் எனக்குறிப்பிட்டுள்ளனர். இதற்கு ஏற்ப **சமுதாயத் தொடர்புகளைக் கட்டியெழுப்பும் கருமத்தில் ஆசிரியரது செயற்பங்கையும் அவர் பின்பற்ற வேண்டிய சில ஒழுக்கநெறிகளையும்** சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாடசாலையானது அதன் நோக்கங்கள், வேலைத்திட்டங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலும் அவ்வறிவை ஏனையோருக்குப் பெற்றுக் கொடுத்தலும்.

2. மாணவர்களைச் சமூகமயப்படுத்துதலும், தொழில் உலகுக்குத் தயார்ப் படுத்தலும் கற்பித்தலும், வளர்ந்தோருக்குக் கல்வி புகட்டுதலும்.

3. பாடசாலைக்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் மாணவர்களுக்கும் பங்கம் விளைவிக்கக் கூடியவற்றைக் கூறாதிருத்தலும், செய்யாதிருத்தலும்.

4. பாடசாலையில் கவனஞ் செலுத்தப்பட்டவையும் உறுதியாகத் தீர்மானிக் கப்படாதவையுமான புதுமையாக்கங்கள் தொடர்பான அரைகுறையான தகவல்களையும், விமர்சனங்களையும் சமுதாயத்துக்குச் சமர்ப்பிக்கா திருத்தல்.

5. பாடசாலை, பாடசாலைத் தலைவர், கொள்கைகள், ஆசிரியர்கள் போன்ற விடயங்கள் பற்றிச் சமுதாயத்தினருடன் விமர்சிக்காதிருத்தல்.

சமுதாயத்தில் நீங்கள் ஒரு சிறந்த ஆசிரியராக ஏற்றுக் கொள் ளப்பட வேண்டுமெனின் பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனஞ் செலுத்துதல் வேண்டும் என பிரேஸியர் என்பவர் குறிப்பிட்டுள் ளார்.

1. நீங்கள் உங்களது தொழில் தொடர்பாகப் பெருமிதங் கொள்ளல் வேண்டும். ஆசிரியர் தொழில் மிக உயர்வானதொரு தொழிலாகும் என நீங்கள் கருதுவதில்லையாயின் நீங்கள் ஆசிரியத் தொழிலை ஏற்றுக் கொள்ள வேண்டாம்

2. பாடசாலையை விமர்சிக்க வேண்டாம்.

3. மனித்தன்மையுடையவராக இருங்கள்.

4. சிறந்த ஆசிரியர், சமுதாயத்தை வகுப்பறையாகவும் ஆய்வுகூடமாகவும் பயன்படுத்திக் கொள்வர்.

5. நீங்கள் உங்களது சமுதாயத்தில் பரிவு காட்டுங்கள். நீங்கள் சமுதாயத் துடனிணைந்த ஓர் அம்சமாக மாறுதல் வேண்டும். சமுதாயம் தொடர் பான விளக்கத்தின் ஊடாகப் பிள்ளையைப் பற்றிய உணர்வைப் பெற் றுக் கொள்ளல்வேண்டும்.

6. பெற்றோருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. சமுதாயத்தின் வெவ்வேறு ஒழுங்கமைப்புக்களில் – நிறுவனங்களில் பங்கு கொள்வதன் மூலம் நீங்கள் சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறு தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தகவல்களுக்கு அமைய பாடசாலைக்கும் அயற் சமுதாய த்துக்கும் இடையே நற்றொடர்புகளைக் கட்டியெழுப்பவேண்டுமெனின் ஆசி ரியர் என்ற வகையில் உங்களது பொறுப்பு மிகப் பெரியது என்பது இதி லிருந்து தெளிவாகின்றதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

* பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் பண்டைக்காலம் தொட்டே நிலவிவருகின்றன.

* பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பு வெவ் வேறு தன்மைகளைக் கொண்டிருக்கலாம்.

* பாடசாலையானது சமுதாய மைய நிலையமாக அமைதல் வேண் டும் என்பதும், பாடசாலையானது சமுதாயப் பாடசாலையாக அமைதல் வேண்டும் என்பதும் தற்போது முழுஉலகினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஓர் எண்ணக்கருவாகும்.

* பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையேயான நற்றொடர்பின் ஊடாக பாடசாலையினதும் சமுதாயத்தினதும் அபிவிருத்தி ஏற்படும். அதேவேளை, சமுதாய வளங்களைப் பாடசாலைக்கும் பாடசாலை யின் வளங்களைச் சமுதாயத்திற்கும் சமுதாய வளங்களைச் சமுதா யத்துக்கும் சாதகமான விதத்தில் பிரயோகிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப்பெறும்.

* பாடசாலையில் ஒழுங்குமுறையாகத் திட்டமிடப்பட்ட சமுதாயத் தொடர்பு வேலைத்திட்டம் காணப்பட வேண்டும். பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளின் போது அதிபரதும் ஆசிரியரதும் செயற்பங்குகள் மிக முக்கியமானவையாகும்.

## 6.0 பிற்சோதனை

பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட் டுள்ள தேர்வுகளிலிருந்து தெரிவு செய்க.

1. பாடசாலையின் அகச் சுற்றாடலுள் அடங்குவோர்,

   1. ஆசிரியர், மாணவர், மற்றைய ஊழியர்கள் ஆகியோராவர்.
   2. சமூக, பொருளாதார, அரசியற் பிரிவுகளைச் சேர்ந்த தனியாளர்க ளாவர்.
   3. ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரை உள்ளடக்கிய சமுகத்தினரா வர்.
   4. கல்வியமைச்சும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுமாவர்.

2. 19944இல் வெளியிடப்பட்டு இங்கிலாந்து நாட்டின் பட்பலர் சட்டமூலத் தின் 76வது சரத்தில்,

   1. பிள்ளைகளின் திறன்களை உணர்ந்து அவர்களுக்கு கல்வி புகட்டு தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
   2. சமுதாயத்தின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு அமையக் கல்வி புகட்டப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
   3. சமுதாயத்தின் பொருளாதார மட்டத்துக்கு அமையக் கல்வி புகட்டு தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
   4. பெற்றோரின் விருப்புக்கு அமையவே பிள்ளைகளுக்குக் கல்வி கிடைக்கப்பெறல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "கிறொஸ்" என்பவர் குறிப்பிடுவதற்கு அமைய, புதினத்தாள்கள், வழி பாட்டுத்தலங்கள், அரசியற் குழுக்கள், வியாபார நிறுவனங்கள் போன்றன.

1. பாடசாலையின் மீது பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தும் குழு வகையில் அடங்குகின்றன.
2. பாடசாலையிலிருந்து உதவியை எதிர்பார்க்கும் குழு வகையில் அடங்குகின்றன.
3. பாடசாலையின் பௌதிக வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கும் குழு வகையில் அடங்குகின்றன.
4. மாணவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவ முன்வரும் குழு வகையைச் சேர்கின்றன.

4. பாடசாலையானது சமுதாயத்தின் தேவைகளைத் தேடிச் சென்று அதற்குத் தேவையான சேவைகளை ஆற்றுவதாக இருப்பின்,

1. அது சமுதாயத்திலிருந்து தனிப்பட்ட சிறியதொரு சமுதாயமாக ஒழுங்கமைதல் வேண்டும்.
2. அது ஏக போக உரிமை கொண்ட ஒரு நிறுவனமாக கருமாற்றுதல் வேண்டும்.
3. அது கட்டடங்களிலிருந்தும், மரபு ரீதியான பாடவிதானத்திலிருந்தும் அப்புறப்படுதல் வேண்டும்.
4. அது மரபுரீதியான பாடவிதானத்துக்கு அமையவே கருமாற்றுதல் வேண்டும்.

5. சமுதாயத்தை பாடசாலையுள் கொணருவதற்காகக் கையாள வேண்டிய பிரதானமான நடவடிக்கை,

1. பாடசாலையில் காணப்படும் வளங்களைச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடலை நடத்துவதாகும்.
2. சமுதாயத்துள் காணப்படும் அறிவு, திறன்கள், வளங்கள் போன்றவற்றைப் பாடசாலைக்கும் பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுப்பதாகும்.
3. சமுதாயப் பொறுப்புக்களை நிறைவு செய்வது தொடர்பாக மாணவர்களுக்கு அடிக்கடி சொல்லிக் கொடுப்பதாகும்.
4. பாடசாலையின் அபிவிருத்திக்காகக் கருமமாற்ற வேண்டிய விதம் பற்றிய விளக்கத்தைச் சமுதாயத்தினருக்கும் பெற்றுக் கொடுக்க முயற்சித்தலாகும்.

* பின்வரும் கூற்றுக்களில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை, சொற்பட்டியலிருந்து தெரிவு செய்து அவ்விடைவெளிகளில் எழுதுக.

6. வீட்டுச் சுற்றாடல் பிள்ளையின் தாக்கம் விளைவிக்கும் விதத்தை ....... மூலம் மாத்திரமே விளங்கிக் கொள்ள முடியும் என ஓடாவே என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

7. அர்ப்பணிப்புடன் கருமமாற்றுகின்ற, செயற்றிறன் கொண்ட ஆசிரியரிடம் கற்ற மாணவரைக் கொண்ட சமுதாயமானது.......................... தாக்கங்களையே பாடசாலையின் மீது ஏற்படுத்தும்.

8. பாடசாலையானது.......................................................ஒன்றிணைக்கும் தரகர் போன்று கருமமாற்றுகின்ற ஒரு நிறுவனமாக அமைதல் வேண்டும்.

9. ஸ்ரீலங்காவின் பண்டைய கல்வி நிலையமாகக் காணப்பட்ட பன்னசாலையை...................................................கருதமுடியும்.

10. பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பைக் கட்டியெழுப்புகையில் ஆசிரியர், மரபுரீதியான தனித்த பாடசாலையிலிருந்து அப்பாற் சென்று பொது மக்களின் ......................................................., அவர்களது இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற்பட்டியல் :**

அன்றாடம் வாழ்க்கையையும், எதிர்பார்ப்புக்களையும், சமுதாய வளங்களையும், சிறப்பான ஆசிரியர் மாணவர் தொடர்பு, சாதனமான, சமுதாயப் பிரச்சினைகளையும், சமுதாய மைய நிலையமாக எதிர்பார்ப்புக்களையும்,

## 7.0 விடைகள்

1. 2

2. 4

3. 1

4. 3

5. 2

6. சிறப்பான ஆசிரியர் மாணவர் தொடர்பு

7. சாதகமான

8. சமுதாயப் பிரச்சினைகளையும் / சமுதாய வளங்களையும்

9. சமுதாய மைய நிலையமாகக்

10. அன்றாட வாழ்க்கையையும் / எதிர்பார்ப்புக்களையும்

## 8.0 ஒப்படைகள்

1. பாடசாலைக்கும் அயற் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காக, ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் கையாள வேண்டிய பல்வேறு வழிவகையையுள்ளடக்கிய பட்டியலொன்றினைத் தயாரிக்க.

2. (1) பாடசாலையின் அயலில் காணப்படும் பல்வேறு சமுதாயச் சுற்றாடல்களின் ஊடாகப் பாடசாலையும் ஆசிரியரும் எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை விபரிக்க.

   (2) அப்பிரச்சினைகளைத் தீர்த்து நற் சமுதாயத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காகப் பாடசாலையினால் மேற்கொள்ளக் கூடிய ஒரு வேலைத்திட்டத்திட்டத்தைத் தயார்படுத்துக.

3. (அ) கற்றல், கற்பித்தல் கருமத் தொடரின் போது ஏற்படக் கூடிய,

   (1) பாடசாலையின் விழுமியங்கள், அறநெறிகள், சமுதாய நடத்தை கோலங்கள் சமுதாய விழுமியங்கள் ஆகியவற்றிற்கு இடையிலான மோதல்களையும்,

   (2) பாடசாலையினது நோக்கங்களுக்கும் சமுதாய நோக்கங்களுக்கும் இடையிலான மோதல்களையும் குறிப்பிடுக.

   (ஆ) அவற்றைத் தீர்த்து கற்றல், கற்பித்தல் கருமத் தொடரின் வெற்றிக்காகப் பிரயோகிக்கக் கூடிய வழிவகைகளடங்கிய பட்டியலொன்றினையும் அதற்குரிய வேலைத்திட்டமொன்றினையும் தயாரிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. (1) பெற்றோரின் சிற்றுரைகள் பாடசாலைக்குத் துணையாக அமையும் சந்தர்ப்பங்களை விளக்கு.

(2) பெற்றோரின் ஒத்தாசைகளைப் பாடசாலைக்காகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகளைப் பிரயோகிக்க.

(3) பாடசாலையின் அபிவிருத்திக்காகப், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பும் பெறுபேறுகளும் கிடைக்கப்பெறாமைக்கு காரணமாக அமையக் கூடிய விடயங்களைச் சேகரிக்க.

(4) அந்நிலைமையைச் சீர்செய்து, அதனை உகப்பான விதத்தில் பிரயோகித்துக்கொள்வதற்காக மேற்கொள்ளவேண்டிய விழிகளையும் கொண்ட நடவடிக்கைகளையும் பிரேரிக்க.

(அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர் போன்ற குறித்த குழுக்களுடன் நேரடிக் கலந்துரையாடல்களை நடத்தி உங்களது பாடசாலை தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை பகுத்தாய்ந்ததன் பின்னரே இவ்வொப்படையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது)

## 9.0 கலைச் சொற்றொகுதி

1. உபதொகுதி - Sub - System
2. எதிர்பார்ப்புக்கள் - Expectations
3. ஏகபோக உரிமை - Monopoly
4. சுற்றாடல் - Environment
5. சமூகமையகல்வி - Community Centred Education
6. சமுதாயப்பாடசாலை - Community School
7. சமுதாயம் - Community
8. போக்குகள் - Trends
9. அதிகாரம் - Authority
10. ஒரினமாக - Homogeneous

## 10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்


1. George - Willard Frasier - An Introduction to the study of Education - Revised edition. Harper and Brothers.
2. Don Davies - (ed) Communities and their schools - Mc Graw Hill 1981 - The Past and Persent as Prologue - Miriam clasby.
3. Ottaway, A.K.C. - Education and Societiy - Routledge and Degam Paul - Reprinted 1980.
4. Halsey, A.H. (ed) - Education Priority - H.M. S. O. 1972.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. Don Davies (ed) - Communities and their Schools chap 10. Changing School and Community resources - Paggy. Odell Gonder.

6. Tom, Whiteside - The Sociology of Educational innovation - Methuen 1978.

7. வாழ்க்கைக்காகக் கல்வி - அத்தியாயம் 5 (சிங்களம்)

8. Banks Olive - The Sociology of Education - Chap 6

9. Louis Cohen and Lawrence Manion - Perspectives on Classrooms and Schools Chap 12.

10. Normal M. Goble, James F. Porter - The Changing role of the teacher - Unesco, 1977 Chap 4.

11. Don Davies (ed) - Communities and their schools - Education Schools and Sense of Community - John I Goodlad.

12. Don Davies - (ed) Communities and their schools - Chap 9. Community Education and Community schools - Jack D. Minzey.

13. Edward G. Olsen Etal - School and Community 2nd ed. Printice - Hall, Inc, Engle wood cliffs N. J. 1954.

14. Thomas Landers and Judich G. Myers - Essentials of School Management 1977.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் அத்தியாயம்
# ஆசிரியர் செயற்பங்கும் அவரது அந்தஸ்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் செயற்பங்கும் அவரது அந்தஸ்தும்

உள்ளடக்கம் — பக்கம்


| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 32 |
| 2.0 | சிறப்பு நோக்கங்கள் | 32 |
| 3.0 | முற்சோதனை | 33 |
| 4.0 | ஆசிரியரின் செயற்பங்கும் ஆசிரியரின் அந்தஸ்தும் | 33 |
| 4.1 | அந்தஸ்தும் செயற்பங்கும் | 33 |
| 4.2 | ஆசிரியரின் செயற்பங்கு | 34 |
| 4.3 | ஆசிரியர் செயற்பங்கில் அடங்கும் கருமங்கள் | 37 |
| 4.4 | கல்வியிலாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பல்வேறு ஆசிரியர் செயற்பங்குகள் | 38 |
| 4.5 | ஆசிரியர் செயற்பங்கு - முரண்பாடுகளும் எதிர்பார்ப்புக்களும். | 40 |
| 4.6 | கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருதமுடியுமா? | 44 |
| 4.7 | இலங்கையில் ஆசிரியரின் தொழில்சார் அந்தஸ்து தொடர்பான பிரச்சினைகள். | 46 |
| 4.8 | ஆசிரியத் தொழிலின் அந்தஸ்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள். | 48 |
| 4.9 | ஆசிரியர் சேவை மற்றைய சேவைகளிலிருந்து வேறுபடும் விதம் | 49 |
| 5.0 | சாராம்சம் | 50 |
| 6.0 | பிற்சோதனை | 51 |
| 7.0 | விடைகள் | 52 |
| 8.0 | ஒப்படைகள் | 52 |
| 9.0 | கலைச்சொற்றொகுதி | 53 |
| 10.0 | மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் | 54 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

பாடசாலைக்கும் பரந்த சமுதாயத்துக்கும் இடையிலான தனியாள் இடைத்தொடர்புகளை ஏற்படுத்துகின்ற பிரதானமான இணைப்பாகிய ஆசிரியரின் பொறுப்புக்கள் முற்று முழுதான பாடசாலைக் கருமத் தொடரினுளும் பரந்த விரிந்த சமூகத்திலும் விசாலித்துள்ளன. ஆசிரியரா கிய உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பை இனங் காண்பதற்கும், ஆசிரியத் தொழிலுக்குரிய பொறுப்புக்களையும் கருமங் களையும் தன்னம்பிக்கையுடனும், செயற்றிறனுடனும் நிறைவேற்றுவ தற்குத் தேவையான விளக்கத்தையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொள் வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். இவ்வத்தியாயத்தில் ஆசிரிய ரின் செயற்பங்கு தொடர்பான பல்வேறு அம்சங்கள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன. ஆசிரியரின் செயற்பங்கு தொடர்பாக வெவ்வேறு கல்வியி யலாளர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியரால் ஆற்றப்படவேண்டிய கருமங்கள் அப்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகள், அவற்றைத் தீர்க்கக் கூடிய வழிவகைகள் என் பன முதற்பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ளன. கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருதமுடியுமா என்பது தொடர்பான ஆய்வு இரண்டாவது பகுதியில் இடம் பெற்றுள்ளது. இலங்கைக்கேயுரிய சிறப்பான விடயங் களை அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியரின் தொழில், அந்தஸ்தை விருத்தி செய்வதற்காகக் கையாளக்கூடிய இவ்வகைகள் தொடர்பாக வும் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் ஏற்கனவே பெற்றுள்ள அறிவு, அனுபவங்கள் என்பன இவ்வத்தியா யத்தைக் கற்பதன் மூலம் மேன்மேலும் போசிக்கப்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

அந்தஸ்து, செயற்பங்கு ஆகிய எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளல்.

ஆசிரியரது செயற்பங்கில் அடங்கும் கருமங்களை விளக்கிக் கொள்ளல்.

ஆசிரியரது கருமப்பொறுப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்குகள், குணாதிசயங்கள் ஆகியவற்றை விளங்கிக் கொள்ளலும் அவற்றை வளர்த்துக் கொள்ளலும்.

ஆசிரியரது செயற்பங்கு தொடர்பான முரண்பாடு களையும், எதிர்பார்ப்புக்களையும் ஆய்ந்தறிதலும் அவ ற்றை இனங்காணலும்.

கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருத முடியுமா என ஆய்ந்தறிய முற்படல்.

இலங்கையில் ஆசிரியத் தொழிலின் அந்தஸ்தையும் அது தொடர்பான பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளல்.

ஆசிரியத் தொழிலின் அந்தஸ்தைப் பேணுவதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிவகைகள் யாவை எனத் தேடியறிய முனைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

1. ஆசிரியரது செயற்பங்கு என்பதால் நீங்கள் கருதுவது யாது?

2. ஆசிரியர் என்ற வகையில் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சில கருமங்களைக் குறிப்பிடுக

3. ஆசிரியத் தொழிலில் உங்களது கரும்ங்களை ஆற்றுகையில் அதன் மீது சமூகரீதியில் தாக்கம் விளைவிக் குங் காரணிகள் யாவை?

4. தமது கருமங்களை வெற்றிகரமாக ஆற்றுவதற்காக, ஆசிரியர் ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய முக்கி யமான குணாதிசயங்களாக நீங்கள் கருதுபவைகள் யாவை?

5. ஆசிரியர் என்ற வகையில் கருமமாற்றும் போது நீங்கள் எதிர் நோக்க வேண்டி ஏற்பட்ட முரண்பாட்டு நிலைமையொன்றினை சமர்ப்பிக்குக.

6. கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருத முடியுமா என்பதற்குச் சார் பாகவோ எதிராகவோ உங்களது கருத்துக்களைச் சமர்ப் பிக்குக.

7. இலங்கையில் ஆசிரியரின் தொழில்சார், அந்தஸ்து தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் யாவை?

8. ஆசிரியரின் தொழில்சார் அந்தஸ்தைக் காத்துக் கொள்வதற்காகக் கையாள வேண்டிய வழிவகைகள் யாவை?

## 4.0 ஆசிரியரின் செயற்பங்கும் ஆசிரியரின் அந்தஸ்தும்.

### 4.1 அந்தஸ்தும் செயற்பங்கும்.

**செயற்பாடு: 1**

கீழேயுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்க ளால் குறிக்கப்படும் எண்ணக்கருவை அடைப்புக்குறிக்குள் எழுதுக.
செயற் பங்கு (Role) பதவி (Office) நிலை (Position) அந்தஸ்து. (Status)

1. அதிபர் **ஆசிரியர்கள், மாணவர்கள்,** ஆகியோர் பாடசாலை எனும் சமுதாயத்தினைச் சேர்ந்த தனியாள்களாவர் ( )

2. சமுதாயம் ஆசிரியிடமிருந்து கற்பித்தலை எதிர்பார்க்கின்றது. ( ).

3. அதிபர் தனது பாடசாலையின் வெவ்வேறுபகுதிகளுக்குப் பொறுப்பான **பகுதித் தலைவர்களின்** கூட்டமொன்றினைக் கூட்டினார். ( )

4. புதிய அதிபர் திறமைமிக்க ஒரு **நிருவாகியாவார்.** ( )

ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் தாய், தந்தை, மகன், மகள், என்றவாறு பாகுபடுத்தப்பட்டிருப்பதைப் போன்றே, பாடசாலையைச் சேர்ந்த தனி யாள்களும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்றவாறு பாகுபடுத்தப் பட்டுள்ளனர். **பதவி** என்பது இவ்வாறான பாகுபாட்டைக் காகுறாகு ஆகையால், ஆசிரியர் என்பதும் ஒரு பதிவியேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைகளை வகிப்போர் நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பாக அவர்களுடன் தொடர்புகளைக் கொள்வோர், சில குறித்த எதிர்பார்ப்புக்களைக் கட்டியெழுப்பிக் கொள்கின்றனர். யாதேனும் நிலையை அடைவோர் அவ்வெதிர்பார்ப்புக்களுக்கு அமைய அந்நிலையின் அந்தஸ்தைக் காத்துக் கொள்ளல் வேண்டும். ஆசிரியரது நிலையின் மூலம் சமுதாயம் பிரதானமாக எதிர்பார்ப்பது கற்பித்தலையேயாகும்.

ஆசிரியர் நிலையை வகிப்போரிடையே தரங்களுக்குப் பொறுப்பான தலைவர்கள், பாடங்களுக்குப் பொறுப்பான தலைவர், பிரிவுகளுக்குப் பொறுப்பான் தலைவர்கள் என்றவாறு பலவேறு பிரிவுகள் காணப்படலாம் என முன்னைய மொடியூலொன்றில் நீங்கள் கற்றீர்கள் ஒவ்வொரு வகையையும் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கருமங்கள் அவர்களது நிலைக்கு அமையவே வேறுபடுகின்றன. யாதேனும் தொழிலினை' அல்லது சேவையினைச் சேர்ந்த நிலையின் அல்லது பதவியின் கருமப் பொறுப்புக்கள் செயற்பங்கில் அடங்குகின்றன இக்கருமப் பொறுப்பை அல்லது செயற்பங்கை ஆற்றுவதற்கான அதிகாரங்கள் தேவைப்படுவதோடு அதனைச் சேர்ந்த பொறுப்புக்களும், கடமைகளும், நடத்தைகளும் உள்ளன. குறித்த நிலையை அல்லது பதவியைச் சேர்ந்தவையெனக் கருதப்படும் வரையறைகளும் சமூகம் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் அந்தஸ்த்துக்களும் செயற்பங்கில் அடங்குகின்றன. இதற்கு அமைய ஆசிரியர் நிலைக்குரிய அதிகாரங்கள், பொறுப்புக்கள், கடமைகள், நடத்தைகள் ஆகியவற்றுக்கும் சமூகம் ஆசிரியரிடத்தே எதிர்பார்க்கும் அந்தஸ்துக்களுக்கும் அமைவான கருமப் பொறுப்புக்களே ஆசிரியரது செயற்பங்கிலடங்குகின்றன.

## 4.2 ஆசிரியரின் செயற்பங்கு (Teacher's Role)

### செயற்பாடு : 2

பின்வரும் சம்பவங்களைக் கற்று அவ்வாசிரியர்கள் ஆற்றிய கருமங்களையும் அக்கருமங்களின் போது அவர்கள் எவ்வெவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதையும் பரிசீலிக்க.

1. நீண்ட விடுமுறைக் காலத்தின் பின்னர் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதினத்தில், பாடசாலை விளையாட்டுத்திடலில் முற்றுமுழுதாகத் துத்திரிப்புல் வளர்ந்து காணபட்டது. அன்றைய தினம் மைதானத்தின் தோற்றத்தைக் கண்ட ஓர் ஆசிரியர் அதிபரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தமது வகுப்பு மாணவர்களையும் சமாந்தர வகுப்புக்களையும் சேர்ந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் சிரமதானமொன்றில் ஈடுபடுத்தி விளையாட்டுத்திடலைப் பூரணமாகச் சுத்திகரித்தார்.

2. சுமாரான கஷ்டப்பிரதேசமாகக் கருதப்படும் புண்ணியசேனை எனும் கிராமத்தினைச் சேர்ந்த பிள்ளைகள், அயல் கிராமத்தில் உள்ள சமயப் பாடசாலைக்குச் செல்வதற்காக ஏறத்தாழ ஏழு கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. புண்ணிய சேனைக் கிராமப் பாடசாலையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர், அயற் கிராமச் சபைத்தலைவருடனும் பரிபாலனச் சபையினருடனும் கலந்துரையாடி அவர்களின் துணையுடன் புண்ணிய சேனைக் கிராமப் பாடசாலையில் ஒரு சமய பாடசாலையை ஆரம்பித்தார்.

3. கணக்குகள் செய்வதில் விருப்புக்காட்டாத நிஸாம் வீட்டு வேலை கொடுக்கப்பட்டவேளைகளில் ஏனைய மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களைப்பாத்துக் கணக்குகளைப் பிரதி செய்து ஆசிரியருக்குக் காட்டுவான். இதனை அறிந்த ஆசிரியர் ஒவ்வொரு மாணவரும் பாடசாலைக்கு வருகைதந்தவுடன் தமது கணக்குப் பயிற்சிப்புத்தகத்தை ஆசிரியர் ஓய்வு அறையில் உள்ள மேசையின் மீது வைக்கும்படி பணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விஞ்ஞான ஆசிரியை ஒவ்வொரு பாட அலகு தொடர்பாகவும் மாதாந்த மதிப்பீடொன்றினை நடத்தி மாணவாகள் ஒவ்வொருவரும் தத்தமது அடைவு மட்டத்தை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்.

5. மறைப்பிடப்பாடத வகுப்பறையொன்றில் கற்ற மாணவர்கள் தமது பாடப்புத்தகங்களையும் கற்றல் உபகரணங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியாத நிலைக்குள்ளாயிருந்தனர். பெற்றோரை வரவழைத்து இது தொடர்பான விடயங்களை விளக்கிய ஆசிரியை அப்பெற்றோரின் ஒத்துழைப்புடன் வகுப்பறைக்கு கம்பி வலையால் மறைப்புவைத்துக் கொண்டதோடு கதவொன்றினையும் பொருத்திக் கொண்டார்.

6. ஆண்டு 7 வகுப்பு மாணவர்களது சமூகக் கல்வி ஆசிரியரால் ஒழுங்க மைக்கப்பட்ட வெளிக்களச் சுற்றுலாவொன்றின் போது, உச்சத்துக்கு (குத்துயரத்துக்கு) அமைய வெப்பநிலையும் தாவர வருக்கங்களும் வேறு படும் விதத்தை அவதானிப்பதில் ஒரு மாணவர் குழுவினர் ஈடுபடுத் தப்பட்டனர்.


7. ஆசிரியர் சங்கமொன்றினைச் சேர்ந்த திருவாளர் சுந்தரன் அவ்வா சிரியர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்வார். அத்தோடு சுறு சுறுப்பும் ஆர்வமும் மிக்க ஓர் அங்கத்தவராகிய அவர் ஆசிரியத் தொழிலின் மேம்பாட்டுக்குரிய பற்பல ஆய்வுகளில் ஈடுபடுகின்றார். மேற்படி சம்பவங்களின் அடிப்பையில் ஆசிரியரின் கருமங்கள் பற்றி ஆய்வு நடத்த உங்களது ஆய்வை இலகுவான தாக்கிக்கொள்வதற்காகப் பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைத் தயாரிக்க.

| ஆசிரியர் மேற் கொண்ட நடவ டிக்கை | கருமப்பொறுப்பு | யாருடன் தொடர்பு கொண்டார் |
|---|---|---|
| உம் : மைதானத் தைச் சுத்திகரித் தல் சிரமதானம். | பாடவெளிவேலைகளை நெறிப்படுத்துபவர். | வகுப்பறைக்கு வெளியான மாணவர்கள் ஆசிரியர்களு டன். |

உங்களது அவதானிப்புக்களுக்கு அமைய **ஆசிரியரது செயற்பங்கு வகுப்பறைக்கு மாத்திரம் வரையறைப்பட்டதல்ல** என்பது உங்களுக் கும் அது முற்று முழுதான சமூகத்திலும் விசாலித்துச் செல்வதொன்றா கும். அது **நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நீண்டகால ரீதி யிலோ, குறுகியகால ரீதியிலோ தனியாள் அபிவிருத்திக்கு உதவுவ தொன்றாகும்.**

ஆசிரியரின் செயற்பங்கானது அவருடன் தொடர்புகளைக் கொண்டிருக்கும் பிரிவினருக்கு அமைய ஒழுங்கமைவுறுவதொன்றாகும். அதனுடன் மோதும் பிரிவினரைப் பின்வருமாறு வரிப்படம் மூலம் காட்டலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சிக்கலான காரணிகளுடன் ஆசிரியரின் செயற்பங்கிற்கு அடிப்படையாக அமைவன வருமாறு:

1. அரசின் எதிர்பார்ப்புக்கள்
2. நிருவாகிகளின் எதிர்பார்ப்புக்கள்
3. மாணவர்களின் எதிர்பார்ப்புக்கள்
4. பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. 3 ஆசிரியரது செயற்பங்கில் அடங்கும் கருமங்கள்

**செயற்பாடு: 3**

1. நீங்களும் உங்கள் பாடசாலையைச் சேர்ந்த பெற்றோரும் ஆசிரியர்களும் ஆற்றும் கருமங்களின் பட்டியலொன்றினைத் தயாரிக்க. (இதற்காக குறித்த ஆசிரியர்களுடன் கலந்துரையாடுக.)

2. அக்கருமங்களைப் பின்வருமாறு விரிவான பிரிவுகளாக வகுத்துக் காட்ட முயற்சிக்க.

(அ) வகுப்பறையுடன் தொடர்புடைய கருமங்கள்
(ஆ) கூட்டுமொத்தமான பாடசாலை தொடர்புபான கருமங்கள்
(இ) பாடசாலைக்கு வெளியேயான கருமங்கள்

3. அக்கருமங்களை மீண்டும் பின்வரும் உபபகுதிகளின் கீழ் வகுத்துக் காட்டுக.

(அ) (a) கற்றல் / கற்பித்தல் கருமத்தொடரை ஒழுங்கமைத்தல்.

உதாரணம்: * புதிய கற்றல் துணைச் சாதனங்களைப்பயன்படுத்தல்.

(b) மதிப்பீடு செய்தல்.

உதாரணம்: * மாணவரது அடைவை இடைமீடின்றி தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல்.

(c) நிருவாகம்:

உதாரணம்: * மாணவர் வரவுப்பதிவு
*

(d) வழிகாட்டல்

உதாரணம்: * கல்விப் பிரச்சினைகளையோ, தனிப்பட்ட பிரச்சினைகளையோ தீர்ப்பதற்காக மாணவருக்கு உதவுதல்.

(ஆ) ( ) நிருவாகக் கருமங்களில் அதிபருக்கு உதவுதல்.

( ) பாடவெளிவேலைகளை நெறிப்படுத்துதல்.

( ) ஆசிரியர் குழாம் தொடர்பான கருமங்கள்.

( ) பாடசாலை அபிவிருத்திச் சபை.

( ) மாணவர் நலன் புரி நடவடிக்கைகள்.

(இ) ( ) ஆசிரியர் மாணவர் தொடர்புகள்.

( ) சமுதாய அபிவிருத்தி.

( ) சமூக, கலாசார, சமய ஒழுங்கமைப்புக்கள்.

( ) தேசிய அபிவிருத்தி.

( ) தொழிற் சங்கங்கள்.

( ) கல்வி அதிகாரிகளுடனான தொடர்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4 கல்வியியலாளர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பல்வேறு ஆசிரியர் செயற்பங்குகள்

**ஓ. ஏ. ஒய்ஸர்**

* ஆலோசகர், நிபுணர்
* அடைவை அளப்பவர், மதிப்பீடு செய்பவர்
* அற நெறியை வெளிக்காட்டுபவர், ஒழுக்கம் பேணுபவர்.
* சட்டத்துக்கு அமைவானவர்
* மத்தியஸ்தம் வகிப்பவர்.
* பாதுகாப்பு அதிகாரி
* நண்பர், வழிகாட்டி.

(Teacher, pupil and Task) எனும் நூலிலிருந்து)

**மைக்கல் ஸ்மிட்புவர்.**

* கற்றல் தொகுதிகளை திட்டமிட்டு அமுற்படுத்துதல்.
* பிள்ளைகளின் சிந்தனையை மலரச் செய்தல்.
* கல்வி வளங்களைச் சேகரித்தல்.
* பிள்ளைகளின் வெவ்வேறு தேவைகளுக்கும் கல்வி நோக்கங்களுக்கும் பொருத்தமானவாறு கூட்டு மொத்தமான கல்விக் கருமத் தொடரை கூட்டிணைப்புச் செய்தல்.

(Education on the move _ 1975 Unesco நூலிலிருந்து)

**ட. லின்ச், ட. பிரீன்**

* உதவிச் சேவைகளதும் துணைச் சேவைகளதும் உச்சப் பயனைப் பெறுபவர்.
* மரபு ரீதியான பாடவரையறையை முறியடித்துக் குழுக்கற்பித்தலில் ஈடுபடுபவர்
* திறமைகள், எண்ணிக்கை ஆகியன தொடர்பாகப் பல்வகைமையைக் காட்டும் மாணவர் குழுக்களை நெகிழ்ச்சியான நேரசூசியொன்றுக்கு அமையக்கையாள்பவர்.
* புதிய கற்றல் துணைச் சாதனங்களைப் பயன்படுத்துபவர்.
* பிற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் நிபுணர்களுடன் ஒத்துழைப்புடன், ஒற்றுமையுடன் பாடநெறிசார்ந்த தொழிற்பாடுகளைத் திட்டமிடுபவர்.
* மாணவர்களாக, வெளிக்கள அனுபவங்களையும், வெளிக்கள நடவடிக்கைகளையும் ஒழுங்கமைப்புச் செய்வர்.
* பெற்றோருடன் நற்றொடர்புகளை வளர்த்துக் கொள்பவர்.

(Teacher in the Changing society எனும் நூலிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1975 இல் ஜெனீவாவில் நடத்தப்பட்ட கல்வி தொடர்பாக 35வது சருவதேசக் கருத்தரங்கின் போது ஆசிரியரது செயற்பங்கும், பயிற்சியும் எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட கட்டுரை யொன்றில் ஆசிரியரின்செயற்பங்கு தொடர்பாகப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

* பல்வகைமையுடன் கூடியதாகப் போதனைக் கருமத்தில் ஈடுபடுபவர் கற்றல் / கற்பித்தல் சந்தர்ப்பத்தின் உள்ளடக்கத்தை ஒழுங்கமைப்பவர்.

* வசமுள்ள வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி தனியே அறிவைமட்டும் வழங்குவதன் மூலம் திருப்தியுறாது மாணவரின் கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கமைப்பவர்.

* தனிப்பட்ட கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பவர் ஆசிரியர் மாணவர் தொடர்புகள் சார்ந்த அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்.

* நவீன கல்வித் தொழினுட்பத்தைக் கூடுதலான அளவில் பயன்படுத்துபவரும் அதற்குத் தேவையான அறிவையும் திறமையையும் பெற்றுக் கொள்பவரும்.

* பெற்றோருடனும் சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஏனையோருடனும் நெருங்கிய தொடர்பைக் கட்டியெழுப்பிக் கொள்பவர். சமுதாய நடவடிக்கைகளில் பெருமளவில் தலையிடுபவர்.

* மரபு ரீதியான ஆசிரியர்கள் பேணிவந்த அதிகாரத்தை நெகிழ்விக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்பவர்.

**எறிக் வெறாயில்**

ஆசிரியர் பல பாத்திரங்களையேற்று நடிக்க வேண்டியேற்படுகின்றது.

* சமூகத்தின் பிரதிநிதி (அறி, நெறி, விருத்தி)
* மத்தியஸ்தம் வகிப்பவரும், மதிப்பீட்டாளரும் (புள்ளி வழங்குதலும்)
* அறிவு தொடர்பான மூலவளத்தனியாள் ஆராய்வாளர் (அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொடுத்தல்)
* நடுவர் (மாணவர்களிடையேயான முரண்பாடுகளைத் தீர்ப்பவர்)
* துப்பறிவர் (சட்டதிட்டங்களை மீறுவோரைத் தேடியறிதல் )
* முன்மாதிரி காட்டுபவர் (மாணவர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற நடத்தைக் குணாதிசயங்களைக் கொண்டவராய் இருத்தல்
* உளக்கஷ்டங்களைக்கட்டுப்படுத்துபவர் (மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுதல் )
* தன்னம்பிக்கையை ஏற்படுத்துபவர் (தம்மைப் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தல் )
* குழுத்தலைவர்.
* பெற்றோருக்கான பிரதிநிதி.
* துவேச உணர்வுகளைக் களைவதற்கான இலக்குடையவர்.
* நண்பரும் நம்பிக்கையாளரும்.
* விசேட விருப்புக்கும் அன்புக்கும் ஆளாகுபவர்
* மாணவரது நலன்புரி நடவடிக்கைகளை நெறிப்படுத்துபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியலாளர்கள் தெரிவித்துள்ள மேற்படி கருத்துக்களுக்கு அமைய ஆசிரியர் செயற்பங்கின் வெவ்வேறு பிரிவுகள் தொடர்பான விளக்கத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள். இதற்கு ஏற்ப ஆசிரியரது கருமங்கள் கற்பித்தலுக்கும் மட்டும் வரையறைப்படாது. அவை கூட்டு மொத்தமாகப் பாடசாலையிலும் சமூகத்திலும் பரவிக் காணப்படுகின்றன. அது மட்டுமின்றி ஆசிரியரின் செயற்பங்கு காலத்துக்குக் மூலம், நாட்டுக்கு நாடு, சமூக வேறுபாடுகல் கல்வி ஆராய்ச்சிகள், அரசக் கொள்கைகள் என்பவற்றிக்கு அமையப் பரந்து விரிந்த வண்ணமுள்ளன.

**ஆசிரியர் தனது செயற்பங்கை வெற்றிகரமாக ஆற்றுவதற்காக வளர்த்துக்கொள்ள வேண்டிய குணாதிசயங்கள்.**

**செயற்பாடு: 4**

ஆசிரியரது செயற்பங்கைச் சிறப்பாக ஆற்றுவதற்காக அவ்வாசிரியர் வளர்த்துக் கொள்ள வேண்டிய அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், குணாதிசயங்கள் யாவை என ஆராய்ந்தறிந்து அறிக்கை யொன்றினைத் தயாரிக்க இதற்கு ஏற்ற வினாக்கொத்தொன்றினைத் தயாரித்து உங்களது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியைகளுக்கும் அயற் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரிய ஆசிரியைகளுக்கும் சமர்ப்பித்துத் தகவல்களைச் சேகரித்துக் கொள்க. நீங்கள் சேகரித்த விடயங்களைச் செயலமர்வின் போது கலந்துரையாடலுக்காகப் பயன்படுத்துக.

## 4.5 ஆசிரியர் செயற்பங்கு -முரண்பாடுகளும் எதர்பார்ப்புக்களும்.

இவ்வத்தியாயத்தின் முதற்பகுதியில் நீங்கள் ஆசிரியரது செயற்பங்கை இயைபுபடுத்தும் காரணிகள் பற்றி அதாவது ஆசிரியருடன் தொடர்பு கொள்ளும் முரண்படும் பிரிவினர் ப்ற்றிய விளக்கத்தை பெற்றிருப்பீர்கள். **ஆசிரியரின் செயற்பங்கின் அடிப்படையானது, விசேடமாக அவர் மீது பெருமளவில் தாக்கம் விளைவிக்கும் காரணிகளாகிய, நிருவாகிகளதும் (அதிபரதும்) மாணவர்களதும், பெற்றோரதும், அரசினதும் எதிர்பார்ப்புக்களுக்கு அமையவே கட்டியெழுப்பப்படுகின்றது.**

முரண்பாடுகள், **எதிர்பார்ப்புக்கள்** என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்கையில் **செயற்பங்குக் கொள்கையில்** (Role Theory) குறிப்பிட்டுள்ள சில எண்ணக்கருக்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். செயற்பங்குக் கொள்கைக்கு அமைய ஏற்றவொரு சமூகத்திலும் ஒரு குறிப்பிட்டு தனியாள் பல நிலைகளை வகிக்கின்றார். (உதாரணம் -மகன், ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என்றவாறு) இவ்வொவ்வொரு நிலைக்குமுரிய அதிகாரங்கள், பொறுப்புக்கள் நடத்தைக் கோலங்கள் அதாவது செயற்பங்குகள் உள்ளன. **செயற்பங்கு அளவீடு செயற்பங்கு எதிர்பார்ப்புக்கள்** என்பவற்றின் மூலமே செயற்பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. செயற்பங்கு தொடர்பான நிலையை வகிப்பவர் "**செயற்பங்காளர்**" எனவும், அவருடன் தொடர்புறும்- மோதும் பிரிவினர் "**செயற்பங்குக் குழுவினர்**" எனவும் அழைக்கப்படுகின்றனர். செயற்பங்கிற்கெனச் சிறப்பான, நிலையான நடத்தைகளைக் குறிப்பிட்டுக் கூற முடியாது. அது இயக்கத் தன்மையைக் கொண்டது. அத்தோடு செயற்பங்குக் குழுவைச் சேர்ந்தோரின் **எதிர்பார்ப்புக்கள்** ஒத்தவை அல்ல செயற்பங்கு அளவீடுகள் செயற்பங்கு எதிர்பார்ப்புக்களிலிருந்து வேறுபடவும் கூடும். எனினும் செயற்பங்காளரின் நடத்தைகள், பொதுவாக செயற்பங்கு அளவீடுகளுக்கும், செயற்பங்குக் குழுவில் சிலரது எதிர்பார்ப்புக்களுக்கும் அமைவதாக ஒழுங்கமையும் செயற்பாங்கானது தனியே செயற்பங்காளரின் ஆளுமைப் பண்புகளின் மீது மாத்திரம் தங்கியிருக்க மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனியாள் பல செயற்பங்குகளில் செயலாற்றிய போதும் அவரது ஆளு மைப் பண்புகள் பெரும்பாலும் நிலையானவையாகவே காணப்படும். அத் தோடு குறித்ததொரு நிலையை தனிநபர் எவரேனும் அடையின் அந்நிலையு டன் தொடர்புடைய செயற்பங்கில் பாரிய மாற்றங்களும் இடம் பெற மாட்டா. இதற்கு அமைய **செயற்பங்கு நடத்தையானது, செயற்பங்கு, செயற்பங்காளரின் ஆளுமை** ஆகியவற்றிலேயே தங்கியிருக்கும். சில சந் தர்ப்பங்களில் சில தனியாள்கள் குறித்த செயற் பங்கில் விருப்புக் காட்டு வதற்கான காரணம் அச்செயற்பங்கு தமது ஆளுமைக்குப் பொருத்தமானது என அவர்கள் கருதுவதேயாகும். அவ்வாறின்றேல் அச்செயற் பங்கில் நீண்ட காலம் தங்கியிருப்பதன்மூலம் அதற்குப் பொருத்தமானவாறு தமது ஆளுமையை செம்மைப்படுத்திக் கொள்கின்றனர்.

**கெஸல் என்பவரின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முரண் பாடுகள் ஆசிரியர் செயற்பங்கு தொடர்பாகவும் பொருத்தப்பாடு டையனவாகும்.**

1. செயற்பங்கு ஆளுமை முரண்பாடுகள்

2. செயற்பங்கு முரண்பாடுகள்

3. ஆளுமை முரண்பாடுகள்

என மூன்று வகையான முரண்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**செயற்பங்கு ஆளுமை முரண்பாடுகள் (Role Personality conflicts)**

**யாதேனும் செயற்பங்கு குறித்த சில தேவைகளைக் கொண்டது. அத்தோடு தனியாள்களிடத்தே குறித்த சில தனிப்பட்ட எதிர்பார்ப் புக்களும் காணப்படுகின்றன. இவையிரண்டு தொடர்பாகவும் பரஸ் பர தொடர்பு காணப்படாவிடின் செயற்பங்கு தேவைகளுக்கும் ஆளுமை எதிர்பார்ப்புக்களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன் றும்,** உதாரணமாக ஆசிரியரொருவர் அளவுக்கதிகமான நேரத்தைத் தமது கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியவாறு, தமது குடும்ப நட வடிக்கைகளைக் கவனியாது விடுவாரெனின் அவர் தனது குடும்ப அங்கத் தவர்களின்வெறுப்புக்கு ஆளாவர். அதேவேளை அவர் தனது பாடசாலைக் கற்பித்தல் நடவடிக்கைகளைக் கவனியாது தவிர்த்து, பணம் சம்பாதிக்கும் நோக்குடன் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவாரெனின் மாணவர்களதும் பெற்றோரதும் பழிச்சொல்லுக்கு ஆளாவர். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர் முரண்பாடுகளுக்குள்ளாகின்றார்.

**செயற்பங்கு முரண்பாடுகள் (Role Conflicts)**

செயற்பங்காளர் ஒருவர் பரஸ்பர ரீதியில் மிக முக்கியமான ஒன்றுக்கொ ன்று எதிரான அல்லது அதற்கே இயைபான சில செயற்பங்குகளில் சம சந்தர்ப்பத்தில் கருமமாற்ற வேண்டியேற்படின் செயற்பங்கு முரண்பாடு கள் தோன்றும். ஒரு செயற்பங்கின் கருமங்களை ஆற்றும் ஒருவர் மற் றொரு செயற்பங்கைச் சேர்ந்த கருமங்களை வெற்றிகரமாக ஆற்ற இய லாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தோன்றும் செயற்பங்கு முரண்பாடு கள்,

1. செயற்பங்குகளுக்கிடையிலான முரண்பாடுகள்

2. செயற்பங்கினுள் முரண்பாடுகள்

3. செயற்பங்குக் குழுக்களுக்குள்ளான முரண்பாடுகள் என விளக்கப்படு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பங்குகளுக்கிடையிலான முரண்பாடுகள் (Inter - Role Conflicts)**

**ஒரு குறித்த தனியாள் வகிக்கும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட செயற்பங்குகளுக்கிடையே முரண்பாடுகள் தோன்றலாம்.** ஆசிரியர் பெரும்பாலும் தந்தை, கணவன் ஆகிய செயற்பங்குகளையும் வகிப்பதுண்டு. இச் செயற்பங்குகளுள் ஒரு செயற்பங்குக்குப் பொருத்தமான நடத்தைகளை நிறைவு செய்கையில் அது மற்றொரு செயற் பங்குடன் முரண்பாட்டை ஏற்படுத்தலாம். உதாரணமாக, ஆசிரியர் தனது மகன் கற்கும் வகுப்பின் ஆசிரியராக அமையும் வேளைகளில் ஆசிரியருக்குரிய செயற்பங்கிற்கும், தந்தைக்குரிய செயற்பங்கிற்கும் இடையிலான முரண் பாடுகளுக்கு ஆளாக வேண்டிய நிலையை அவர் எதிர்நோக்க நேரிடலாம்.

**செயற்பங்கினுள் முரண்பாடுகள் (Intra - Role Conflicts)**

**செயற்பங்கு தொடர்பான ஒன்றுக்கொன்று எதிரான, தாக்கங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை செயற்பங்குகளுக்கு ஏற்படின் முரண்பாடுகள் தோன்றக் கூடும்.** உதாரணமாக, அதிபர், ஆசிரியரிடத்திலிருந்து மரபு ரீதியான கற்பித்தல் முறைகளை எதிர்பார்க்கும் அதே வேளை, பிரிவுத்தலைவர் அவ்வாசிரியரிடமிருந்து நவீன கற்பித்தல் முறைகளை எதிர்பார்ப்பவராயின் அவ்வாசிரியர் தனது செயற்பங்கினுள் முரண்பாட்டை எதிர் நோக்க வேண்டியேற்படும்.

**செயற்பங்குக் குழுக்களுள் முரண்பாடு (Conflicts within the Role set)**

**ஒரு குறித்த செயற்பங்கு தொடர்பாக, செயற்பங்குக் குழுக்களைச் சேர்ந்த வெவ்வேறு தனியாள்களால் வெவ்வேறு எதிர்பார்ப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படுதல் காரணமாகவும் முரண்பாடுகள் தோன்றலாம்.** ஆசிரியரின் செயற்பங்கு என்பது கற்பித்தலாகும்; ஒழுக்கம் பேணலாகும்; மாணவர்களது நடத்தையைச் சீர் செய்தலாகும்; எனப்பல வேறு விதமாக விவாதிக்கப்படுகின்றது. இவற்றுள் சில செயற்பங்குகளைச் சிறப்பாக நிறைவு செய்யும் அதேவேளை யாதேனும் ஒரு செயற்பங்கை சிறப்பாக நிறைவு செய்ய முடியாமற் போய்விடின் முரண்பாடுகள் தோன்றக்கூடும்.

**ஆளுமை முரண்பாடுகள் (Personality Conflicts.)**

செயற்பங்கை வகிப்போரிடத்தே காணப்படுகின்ற தேவைகளுக்கும், உள்ளார்ந்த தன்மைகளுக்கும் இடையிலான எதிரெதிர்த்தன்மைகளே ஆளுமை முரண்பாடுகள் ஏற்படுவதில் பங்களிப்புச் செய்கின்றன. இந்நிலைமை ஏற்படுவதில் இரண்டு காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. தனது நிறுவனத்தின் குறித்த ஒரு செயற்பங்குடன் ஒழுங்கு முறையான தொடர்பைப் பேணிச் செல்ல முடியாத நிலையை அவர் எதிநோக்குதல் அவற்றுள் ஒன்றாகும். எப்போதும் தனது நிறுவனத்தின் குறைகளைத் துருவியறிதல் மற்றையதாகும். ஆசிரியரின் திறன்களை விருத்தி செய்து அவரது நடத்தை வளர்ச்சிக்கு உகப்பான சுற்றாடலொன்றினை ஏற்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் பாடாசாலையில் காணப்படலாம். இந்நிலை தனியாளுக்கும், நிறுவனத்திற்கும் இடையே உகப்பற்ற தொடர்பு வளர்ச்சியடைய ஏதுவாக அமையக் கூடும்.

**செயற்பங்கு முரண்பாடுகளைத் தீர்த்துவைத்தல். (Resolving Role Conflicts.)**

**நிறுவனஞ் சார்ந்த உத்திகள் (Organisational Strategies)**

**நிறுவன அங்கத்தவர்களுக்கிடையே செயற்பங்கு முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக பல வழிவகைகள் கையாளப்படுகின்றன.** ஸெகோர்ட், பிளக்மன் என்போர் இவ்வாறான பல வழிவகைகளைக் குறிப்பிட்டுள்ளனர். **செயற்பங்குத் தேவைகளை ஒரு குறித்த முன்னுரிமை ஒழுங்குப்படி வரிசைப்படுத்திக் கொள்ளலானது** அவற்றுள் ஒரு முறையாகும். உதாரணமாகப் பாடசாலை நேரத்தின் பின்னர் எவரேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தனது மாணவர்களுக்காக நடத்தும் மேலதிக வகுப்பை விட அதிபரால் நடத்தப்படும் ஆசிரியர் குழுக் கூட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். **செயற்பங்கில் தாக்கம் விளைவிக்கும் தனியாள்களின் அதிகார வரிசைப்படி** (Hierarchy) **கருமமாற்றுதலானது செயற்பங்கு முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய மற்றுமொரு முறையாகும்.** ஆசிரியர்கள், மாணவர்களின் தேவைகளை விட அதிபரின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கிச் கருமமாற்றுதல் வேண்டும். ஆசிரியர் செயற்பங்குக்கும், தந்தை செயற்பங்குக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடு களைத் தவிர்த்துக் கொள்வதற்காகத் தமது பிள்ளையை வேறோர் ஆசிரியரின் வகுப்பில் சேர்க்க முடியும்.

**பிற வழிவகைகள்**

**செயற்பங்கு, எதிர்பார்ப்பு முரண்பாடுகள் தோன்றும் போது வெளி ரீதியில் சந்தர்ப்பங்களை மாற்றிச் செயற்படுத்துவதன் மூலமும் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.** உதாரணமாக, பாடசாலை நேரத்துள் ஆசிரியர் தனது தொழிலுக்குரிய கருமங்களை ஆற்றி பாடசாலை நேரத்தின் பின்னர் வீட்டில், தந்தைக்குரிய அல்லது கணவனுக்குரிய செயற்பங்கை ஆற்றலாம்.

செயற்பங்கு முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஆசிரியர்கள் பாதுகாப்பு உத்திகளைப் பெருமளவில் கையாளுகின்றமை அறியப்பட்டுள்ளது. நியாயம் பேணல் தடுப்பு போன்றவையே அவையாகும்.

**செயற்பாடு: 5**

ஆசிரியரது செயற்பங்கு தொடர்பாக,

1. உங்களது வகுப்பு மாணவர்கள்
2. பெற்றோர்
3. உங்களது பாடசாலை ஆசிரியர்க்ள் எவ்வாறான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என ஆராய்ந்தறிந்து அறிக்கையொன்றினைத் தயார்படுத்துக. இதற்காகப் பொருத்தமானதொரு வினாக்கொத்தைத் தயார்படுத்திச் சமர்ப்பித்துத் தகவல்களைப் பெற்று அறிக்கையைத் தயாரிக்கையில் பின்வரும் பிரிவுகள் தொடர்பான தகவல்களைச் சேர்க்க முயற்சிக்க.

* பாடவிடயங்களைக் கற்பித்தல்
* வகுப்பில் ஒழுக்கத்தைப் பேணல்
* வகுப்பில் வேலை ஒழுங்கமைப்பு
* வகுப்பின் பாடவெளிவேலைகள் தொடர்பான தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
* ஆசிரியர் - மாணவர் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்
* பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பைக் கற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.6 கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருத முடியுமா?

**தொழிற்பாடு : 6**

1. எமது நாட்டில் தொழில்கள் என ஏற்றுக் கொள்ளப்படும் சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) (2)

(3) (4)

2. அச்சேவைகள் தொழில்களாகக் கருதப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(1) (4)

(2) (5)

(3) (6)

3. ஆசிரியர் சேவையை நீங்கள் ஒரு தொழிலாகக் கருதுவதற்கான காரணங்கள் யாவை?

(1) (4)

(2) (5)

(3) (6)

4. இலங்கையில் ஆசிரியர் சேவையை ஒரு தொழிலாக்க கருதுவதற்கு எதிராக எடுத்துக் காட்டப்படும் (தொழில்சார் பிரச்சினைகள்) காரணங்கள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக.

(1) (4)

(2) (5)

(3) (6)

5. இலங்கை ஆசிரியர்களின் தொழில்சார் நிலையைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படல் வேண்டுமென நீங்கள் கருதும் வழிவகைகள் யாவை?

(1) (4)

(2) (5)

(3) (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதேனும் சேவையை ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்ள முடியுமா முடியாதா என்பதைத் தீர்மானிப்பதற்கான அடித்தளமாய் அமையும் அம்சங்கள்

மேலைத்தேய நாடுகளில் இது தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அக்கருத்துக்களுக்கு அமைய யாதேனும் சேவையைத் தொழிலாகக் கருதுகையில் அதற்கான அடிப்படையாகக் கொள்ளக் கூடிய பல அம்சங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவை வருமாறு :

1. விவேகத்தையும் மனதையும் நெறிப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் சேவையாக இருத்தல்.

2. குறித்த அத்தியாவசியமான சமுதாயச் சேவையாகச் சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்படல்.

3. சேவையில் ஈடுபட்டிருப்போர் தமது சொந்த வகுப்புக்களை விட, பொதுவாக முழுச் சமுதாயத்தின் மீதும் பங்களிப்புச் செய்தல் நலன் புரிதல், சேவை என்பவற்றில் கூடிய கவனஞ் செலுத்தலும்.

4. சேவையைச் செயற்றிறனுடனும், பயனுள்ள விதத்திலும் ஆற்றுவதற்காக அதற்குரிய கொள்கைரீதியான, செயன் முறை ரீதியான பிரிவுகள் பற்றி நுணுக்கமான, பயிற்சியைப் பெற்றிருத்தல்

5. முறையாக அமைக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்று இயங்குதல், சமூகக் குழு என்றவகையில் உறுதியான ஒற்றுமை காணப்படல்.

6. சேவையில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் தனியாளுக்குத் தமது கருத்தின் மீது வேரூன்றிக் கருமமாற்றுவதற்கான முழுமையான சுதந்திரம் கிடைக்கப்பெறல்.

7. சேவையில் சுய கட்டுப்பாடு காணப்படல்.

8. சேவையில் ஈடுபட்டிருப்போரின் பொதுமைப்பாட்டுக்கு அமைய அச் சேவைக்குத் தயார்படுத்தலும், தொழிற்படுதன்மை தொடர்பான நியமத்தரங்கள் தயார்படுத்தப்பட்டிருத்தலும்.

9. தமது தொழில் வழங்குநாடுகளின் தேவைகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றுக்கு ஏற்றவாறு தமது சேவைகளை ஆற்றுதல்.

10. தமது தொழிலின் மகிமையைக் காத்துக் கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமானங்களையும் அளவீடுகளையும் கொண்ட நல்லொழுக்கக் கோவையொன்று காணப்படல்.

11. பொறுப்புக்களைக் கொண்ட சேவையாக இருத்தல்.

12. நிலையான சம்பளம் கிடைக்கப் பெறல்.

இவ்வம்சங்களுக்கு அமைய பெரிய பிரித்தானியா, அமெரிக்கா, ஐக்கியக் குடியரசு போன்ற நாடுகளில் ஆசிரியர் சேவை ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் சிலர் அதனை **ஒரு பாதித் தொழில்** (Semi Profession) என்றும் மற்றும் சிலர் **சொந்த சேவைத் தொழில்** (Personal Service) என்றும் மற்றும் சிலர் இதனை அதிகாரிகளால் **நிருவகிக்கப்படும் ஒரு தொழில்** (Bureaucratic) என்றும் குறிப்பிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்களுக்கு அமைய இலங்கையில் ஆசிரியர் சேவையை தொழிலாக ஏற்றுக் கொள்ள முடியுமா/ முடியாதா என்பது தொடர்பான உங்களது கருத்துக்களையும் செயலமர்வின் போது கலந்துரையாடலுக்குட்படுத்துங்கள்.

இங்கு நீங்கள் காட்டிய துலங்கல்களைச் செயற்பாடு 6 உடன் ஒப்பிடுக.

## 4.7 இலங்கையில் ஆசிரியரின் தொழில்சார் அந்தஸ்து தொடர்பான பிரச்சினைகள்,

இலங்கையின் ஆசிரியர் சேவையின் செயற்றிறன் மட்டம் தாழ்த்தப்படுவதில் பங்களிப்புச் செய்யும் சில காரணிகள் 1981 ஆம் வருடக் கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகளில் (கல்வி வெள்ளை அறிக்கையில்) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

"சேவைக்கு சேர்த்துக் கொள்ள முன்னர் உரிய பயிற்சியைப் பெற்றுக் கொடுக்காது, கடதாசிக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து வரையறைப்பட்ட சான்றிதழ்களை மட்டும் கவனித்து, ஆசிரியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதும், தாழ்ந்த சம்பளத்திட்டங்களும், அதன் காரணமாக ஏற்படும், திருப்தியின்மையும், தனது பாடசாலை தொடர்பாக ஆசிரியர் அர்ப்பணிப்புடன் கருமமாற்ற இடமளிக்காத விதத்தில் ஒழுங்கமைத்துள்ள நாடளாவிய ரீதியிலான ஆசிரியர் இடமாற்ற முறையும் .................. ஆகும்."

**செயற்பாடு: 7**

1. இலங்கையில் ஆசிரியர் சேவைக்காகத் தற்போது ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் விதத்தைப் பரிசீலிக்க.

2. இலங்கையில் ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்களையும் அந்நிறுவனங்களின் ஆசிரியர் கல்விப் பாடநெறிகள் தயார்படுத்தப்பட்டுள்ள விதத்தையும் ஆராய்ந்தறிக.

3. வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் சம்பளத்தை. ஒத்த தகைமைகளைப் பெற்றுப் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் சம்பளத்துடன் ஒப்பிடுக.

4. ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் ஆகியவற்றுக்காகத் தற்போது கையாளப்படும் முறைகளை ஆராய்ந்தறிக.

5. ஆசிரியர்களின் தொழில்சார் ஒழுங்கமைப்புக்கள், சங்கங்கள் அவற்றின் வலிமை போன்றவற்றை ஆராய்ந்தறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் காணப்படும் ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர்களின் தொழில்சார் நிலைமை தொடர்பாகத் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குப் பின்வரும் விடயங்கள் ஏதுவாக அமையும் விதத்தைத் தேடியறிக.

1. பயிற்சிகள் ஏதுமின்றி கல்வித்தகைமைகளை மட்டும் கருத்திற் கொண்டு ஆசிரியர்களைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதன் காரணமாகத் தகுதியற்றோரும் ஆசிரியர் சேவையில் சேர்தல்.

2. ஆசிரியருக்குக் குறைவான சம்பளமே கிடைக்கப் பெறுகின்றமையால் ஆசிரியரது பொருளாதார நிலை தாழ்ந்த மட்டத்தில் காணப்படல்.

3. ஒழுங்கான ஆசிரியர் இடமாற்ற முறை காணப்படாமை.

4. ஒழுங்கான பதவியுயர்வு வழங்கும் முறை காணப்படாமை.

5. ஆசிரியரது சேவையின் மூலம் நீண்டகாலப் பயன்கள் கிடைக்கப்பெறுகின்றமை.

6. ஆசிரியர் உடனடி முடிவுப் பொருள்களை உற்பத்தி செய்பவராகக் காணப்படாமை.

7. தற்காலச் சமூதாயத்தின் சிக்கலான தன்மை காரணமாக மாணவரின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்பவர் ஆசிரியர் மாத்திரமேயாகக் காணப்படாமை.

8. தற்காலச் சமூதாயத்தில் உயர் கல்வியை பெற்றோர் பெருமளவில் காணப்படுகின்றமையால், அறிவைப் பெற்றுக் கொடுப்பவர் என்ற வகையில் ஆசிரியரின் மதிப்பு குறைவாகக் காணப்படல்.

9. அதிகாரிகளதும், அரசியல்வாதிகளதும் கருத்துக்கு அமைய கருமமாற்ற வேண்டி ஏற்படுகின்றமையால், தனிப்பட்ட விதத்தில் முடிவெடுக்கும் சுதந்திரம் வரையறைக்குட்பட்டுக் காணப்படல்.

10. ஆசிரியருக்கிடையே பயிற்சி, கொள்கை சார்ந்த தகைமைகள், சம்பளத்திட்டம் போன்ற பல்வேறுவிதச் சமனின்மைகள் காணப்படல்.

11. முறையாக ஒழுங்கமைத்த ஒரு சக்திமிக்க தொழில்சார் ஒழுங்கமைப்பு காணப்படாமை.

12. தொழிலில் ஈடுபட்டிருப்போரின் செயற்றிறனையும், அறநெறி நடத்தையையும் பேணிச் செல்வதற்காக, ஏற்றுக்கொள்ளப்பட்ட அறநெறிக் கோவையொன்று காணப்படாமை.

13. ஆசிரியர் செயற்பங்கிற்குரிய கருமப் பொறுப்புக்களைக் குறிப்பாக விவரிக்க முடியாமை.

14. ஆசிரியர் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துதல்.

15. கல்வி வழங்குதல் மிக விரைவாக விசாலிப்படைகின்றமையால், குறைந்த தகைமைகளைக் கொண்ட பெருந்தொகையினர் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியேற்படுகின்றமை.

16. ஆசிரியர் குறித்த பாடத்தில் "நிபுணத்துவமுடையவர்களாக" கருதப்படல் ஆசிரியரின் அறிவு குறுகிய பாடப் பகுதியொன்றுக்கு மாத்திரம் வரையறைப்படல்.

17. ஆக்கபூர்வ திறன்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் காணப்படாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.8 ஆசிரியத் தொழிலின் அந்தஸ்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள்.

1981 கல்வி வெள்ளை அறிக்கையில் ஆசிரியர் சேவையில் செயற்றிறனை ஏற்படுத்தும் நோக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகளைக் குறித்துக் கொள்க.

1. ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள்.
2. ஆசிரியர் கல்விப் பாடநெறியின் அமைப்பு.
3. சம்பளம், பதவியுயர்வு ஆகியன தொடர்பான தேவைகள்.

"வாழ்க்கைக்காகக் கல்வி" எனும் நூலில் ஆசிரியரின் அந்தஸ்து தொடர்பாகத் தரப்பட்டுள்ள ஒரு பிரேரணை வருமாறு.

"வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையே போதிய காரணங்களின்றிப் பேணிச் செல்லப்படும் அதிகாரவரிசை (Hierarchy) தொடர்பான வேறுபாடுகளைச் சட்டரீதியான தொழில், தொழிற்சங்கங்கள், சமூகச் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் படிப்படியாகக் குறைந்துச் சென்று இறுதியில் முற்றாகக் களைந்துவிடல் வேண்டும். .........." அதே நூலில் ஆசிரியர் பயிற்சி தொடர்பாகப் பின்வருமாரு குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆசிரியர்கள் எவ்வெந்நிலைகளின் கீழ் பயிற்றப்படுகின்றனரோ அவ்வந்நிலைமைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தல் வேண்டும். அவர்களை ஏற்கனவே வலியுறுத்தப்பட்டுள்ளவாறு பாடவிதானத்தைப் பரப்பும் நிபுணர்களாக ஆக்குவதைவிட மிகமிக முக்கியமாக அவர்கள் போதனை பெறுவோராக ஆக்கும் அளவுக்கு மாற்றயமைத்தல் வேண்டும். முதலில் துரித (Accelerated) பயிற்சியளிப்பு வாய்ப்பொன்றினையும் பின்னர், சேவைக்காலப் பயிற்சி வட்டங்களையும் கொண்டதொரு கோட்பாட்டைப் பின்பற்றுதல் வேண்டும்.........."

### செயற்பாடு : 8

இலங்கையில் ஆசிரியர் சேவையின் தொழில்சார் அந்தஸ்த்தைக் காப்பதற்காகக் கையாளக் கூடிய வழிவகைகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்ந்தறிக.

(1) கொள்கைசார் தகைமைகள்

(2) தொழில்சார் அபிவருத்தி

1. முன்சேவை ஆசிரியர் பயிற்சி
2. ஆசிரியர் கல்விப் பாடநெறிகள்
3. சேவைக்கால ஆசிரியர் கல்விப் பாடநெறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்பட வேண்டிய பாடப் பரப்புக்கள்

* பொதுவான/ விசேட
* கல்வித் தொழினுட்பமும் ஆராய்ச்சியும்.
* போதனை
* ஆசிரியர் ஆளுமை
* செயன் முறைத் திறன்கள்

(3) ஆசிரியர் சேவையின் அதிகாரவரிசை

(4) சம்பளத்திட்டங்கள்

(5) பதவியுயர்வுக்கான வாய்ப்புக்கள்

(6) தொழிற் சங்கங்களும்/தொழில்சார் சுதந்திரமும்

## 4.9 ஆசிரியர் சேவை மற்றைய சேவைகளிலிருந்து வேறுபடும் விதம்

**செயற்பாடு: 9**

ஆசிரியர் சேவை ஏனைய சேவைகளிலிருந்து வேறுபடும் விதத்தையும் அதனை ஓர் மிக உயர்வான சேவையாகக் கருத முடியுமா என்பது பற்றியும் பின்வரும் அம்சங்களின் கீழ் பரிசீலிக்க.

* ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ளோரது கூட்டமைப்பின் பல்வகைமை.
* ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ளோரது கூட்டமைப்பின் பல்வகைமை. (கொள்கை சார் தகைமைகள், தொழில் சார்பயிற்சி, கற்பிக்கும் பாடப் பரப்புக்கள், சம்பளத்திட்டங்கள், பதவி, மொழி மூலம் என்றவாறு)
* ஆசிரியரது செயற்பங்கைப் குறிப்பாகப் பகுத்துக் கூற முடியாமை/ பாடசாலையிலுள்ளும் பாடசாலைக்கு வெளியேயும், பிள்ளைகள், வளர்ந்தோர்.
* ஆசிரியர் செயற்பங்கில் ஆசிரியருடன் தொடர்புறும் போதும் காரணிகள் சிக்கலானவயாகக் காணப்படல்.
* ஆசிரியரது சேவையைப் பெறுவோர் உயிரிகளாக இருத்தலும் பொருள்கள், பாவனைப்பொருள்கள், இயந்திரங்கள் என்பன போன்று கழித்துவிட முடியாமையும்
* ஆசிரியரது சேவையைப் பெறுவோர் நோயாளிகளாகவோ பிரச்சினைகளைக் கொண்ட தனியாட்களைாகவோ மட்டுமன்றி, முற்று முழுதான மாணவர் சமுதாயமுமாக இருத்தல்.
* தனது சேவை பெறுவோரின் தன்மை விவேகம், விருப்பு, வெறுப்புக்கள், தேவைகள் போன்றவற்றைத் தானாகவே உணர்ந்து விளங்கி அவ்வத்தனியாளுக்குப் பொருத்தமான வழிவகைகளைப் பின்பற்றவேண்டி ஏற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கடந்த காலத்தில் கற்று, தற்காலத்தில் கற்பித்து எதிர் காலத்துக்காகத் தயார்ப்படுத்தும் அரும் பெருங்கைங்கரியத்தை ஆற்றுதல்.

* ஒவ்வொரு வளத்தினதும் அபிவிருத்திக்கு ஏதுவாகின்ற நாடு கொண்டுள்ள பெறுமதிமிக்க வளமாகிய மனித வளத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்படல்.

உங்களது முடிவு யாது?

ஆசிரியாராகிய உங்களுக்குரிய அரும் பெருங் கைங்கரியத்தை ஆற்றுவதற்காக எப்போதும் நல்லுணர்வுடன், அர்ப்பணிப்புடன் கருமமாற்றல் உங்களது பொறுப்பாகும் என்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

## 5.0 சாராம்சம்

* ஆசிரியர் நிலைக்குரிய அதிகாரங்கள் பொறுப்புக்கள், கடமைகள் ஆகியவற்றுக்கும் சமுதாயம் ஆசிரியரிடத்தே எதிர்பார்க்கும் அந்தஸ்துக்களுக்கும் இயைபான கருமப் பொறுப்பே ஆசிரியர் செயற்பங்காகும்.

* தமது கருமப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் பல திறன்களையும் மனப்பாங்குகளையும் குணாதிசயங்களையும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

* ஆசிரியரது செயற்பங்கின் போது ஆசிரியருடன் மேலும் தொடர்பு கொள்ளும் பிரிவினர் மிகப் பெருந்தொகையினராவர். அவர்கள் பல் வகைப்பட்டவர்கள் இதற்கு அமையவே ஆசிரியரது செயற்பங்கு ஒழுங்கமைகின்றது.

* ஆசிரியரது செயற்பங்கிலடங்கும் கருமப் பொறுப்புக்களைக் குறிப்பாகப் பகுத்துக்கூற முடியாது. வெவ்வேறு கல்வியலாளர்கள் தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

* ஆசிரியர் செயற்பங்கில் வெவ்வேறு விதமான முரண்பாடுகள் எழுவதுண்டு. அவற்றைத் தீர்ப்பதற்காக வெவ்வேறு விதமான உத்திகள் கையாளப்படும்.

* யாதேனும் சேவை ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான அடிப்படையாக அமையும் அம்சங்கள் பல உள்ளன.

* இலங்கையில் ஆசிரியரது தொழில் சார்ந்த அந்தஸ்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

* ஆசிரியரது தொழில்சார் நிலைமையை மேம்படுத்துவதற்காகக் கையாளக்கூடிய பல வழிவகைகள் உள்ளன.

* ஏனைய சேவைகளுடன் ஒப்பிடுகையில், ஆசிரியரது சேவை மிகமிக உயர்வானதொரு சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

1. இரண்டாவது பகுதியிலுள்ள சொற்கள் முதலாவது பகுதியிலுள்ள சொற்களுடன் சரியாகப் பொருத்தப்படின் கிடைக்கும் ஒழுங்கு முறை யாது?

| முதலாவது பகுதி | இரண்டாவது பகுதி |
| --- | --- |
| 1. செயற்பங்கு | அ. அதிபர் |
| 2. பதவி | ஆ. கற்பித்தல் |
| 3. நிலை | இ. நிருவாகி |
| 4. அந்தஸ்து | ஈ. தரங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர் |

(1) ஆ, அ, இ, ஈ (2) ஆ, ஈ, அ, இ
(3) அ, ஆ, இ, ஈ (4) ஈ, அ, ஆ, இ

2. வெளியேயிருந்து வந்த ஒரு குழுவினரின் தாக்கம் காரணமாக பாட சாலை மாணவர்கள் வகுப்புப் பகிஸ்கரிப்பை ஆரம்பிக்க முற்பட்ட வேளை X எனும் ஆசிரியர், மாணவர்களது பெற்றோரின் துணையுடன் அந்நிலைமையைத் தவிர்த்துக் கருமமாற்றுவதில் வெற்றிகண்டார். இங்கு அவ்வாசிரியர்,
   1. பாதுகாப்பு அதிகாரியாகக் கருமமாற்றியுள்ளார்.
   2. வழிகாட்டியாகக் கருமமாற்றியுள்ளார்.
   3. குழுத்தலைவராகக் கருமமாற்றியுள்ளார்.
   4. பெற்றோருடன் நற்றொடர்புகளை வளர்த்துக் கொள்பவராகக் கரும மாற்றியுள்ளார்.

3. பின்வரும் கூற்றுக்களுள் இடம் பெற்றுள்ள கருமங்களுள் ஆசிரியர் செயற்பங்கினைச் சேராத கருமம் யாது?
   1. மேலதிக நூல்களை வாசித்து அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
   2. பாடசாலையில் ஆசிரியர் குழு நலன்புரிச்சங்கத்தின் செயலாளர் பத வியை வகித்தல்.
   3. கிராமத்தில் இடம்பெறும் சிரமதானத்தில் ஈடுபடல்.
   4. விடுமுறை நாட்களில் கட்டணம் அறவிட்டுப் பிரத்தியேக வகுப்பு நடத்துதல்.

4. ஜயவதனன் ஒரு திறமைமிக்க ஆசிரியராவர். அவர் தனது பெண் மக் கள் இருவரையும், நகரிலுள்ள பெண்கள் உயர் கலாசாலையில் சேர்த் துள்ளார். அவர் தினமும் தனது பெண் மக்கள் இருவரையும் அவர்க ளது பாடசாலையில் கொண்டு சென்று விட்டுவிட்டுக் காலத்தாழ்த்தியே தனது பாடசாலைக்கு வருவார்.
   அது அவரது,
   1. ஆளுமைசார்ந்த ஒரு முரண்பாடாகும்.
   2. செயற்பங்குகளுக்கிடையிலான ஒரு முரண்பாடாகும்.
   3. செயற்பங்குக் குழுக்களுள் இடம்பெறும் ஒரு முரண்பாடாகும்.
   4. ஆசிரியர் செயற்பங்குக்கும் ஆளுமைக்கும் இடையிலான ஒரு முரண் பாடாகும்.

5. நான்காவது வினாவினால் குறிப்பிடப்பட்டுள்ள ஜயவதனன் அவர்கள் எதிர்நோக்கும் முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகப் பிரயோகிக்கக் கூடிய மிகப் பொருத்தமான உத்தி.
   1. செயற்பங்குத் தேவைகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையைக் கவ னத்திற் கொள்ளல்.
   2. செயற்பங்கு எதிர்பார்ப்புக்களை எய்துகையில் வெளிசார்ந்த சந்தர்ப் பங்களை வேறாக்கிக் கொள்ளலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செயற்பங்கில் தாக்கம் விளைவிக்கும் தனியாள்களின் அதிகார வரிசைக்கு அமைய கருமமாற்றுவதாகும்.

4. பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துவதாகும்.

6. இலங்கையில் "கற்பித்தல்" தொழில்சார்ந்த மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமையில் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணியாகக் கருதக் கூடியது.

1. அது விவேகத்தையும் மனதையும் ஈடுபடுத்தி ஆற்றப்படும் ஒரு சேவையாக இருத்தலாகும்.

2. அது குறித்த அத்தியாவசியமானதொரு சேவையாகச் சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகும்.

3. ஆசிரியர்கள் நிலையான சம்பளம் பெறுகின்றமையாகும்.

4. பயிற்சி, கொள்கைசார்ந்த அறிவு, சம்பளத்திட்டங்கள் ஆகிய வற்றைப் பொறுத்தமட்டில் ஆசிரியரிடத்தே பல்வகைமை காணப்படலாகும்.

7. இலங்கையில் ஆசிரியத் தொழிலின் அந்தஸ்தைக் காப்பதற்குக் காரணமாக அமையாத காரணியாகக் கருதக் கூடியது.

1. ஆசிரியருக்கு மேலதிக வருமானம் கிடைக்கப் பெறும் பிற கருமங்களில் ஈடுபட அனுமதி வழங்குதலாகும்.

2. ஆசிரியரது சம்பளத்திட்டத்தை உயர் மட்டத்துக்குக் கொண்டுவருதலாகும்.

3. தொழிற்சங்கங்களை நடத்துவதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தலாகும்.

4. ஆசிரியர்களது பதவியுயர்வுகளுக்கான வாய்ப்புக்களை விசாலிப்பதாகும்.

## 7.0 விடைகள்

(1) 2 (2) 2 (3) 4

(4) 4 (5) 2 (6) 3

(7) 1

## 8.0 ஒப்படைகள்

1. (1) எவ்வாறான அம்சங்களை அடிப்படையாகக் கொள்வதன் மூலம் கற்பித்தலை, ஒருதொழிலாகக் கொள்ள முடியும்.

(2) ஏனைய கோவைகளுக்கும் ஆசிரியர் சேவைக்கும் இடையே காணப்படும் வேற்றுமைகள் யாவை என ஆய்க.

2. தொழில்சார் பொறுப்புக்களை வகிப்பவர் ஒருவர் என்ற வகையில் ஆசிரியரொருவரால் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள், மனப்பாங்குகள், குணாதிசயங்கள் யாவை என்பதை உதாரணங் காட்டி விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "ஆசிரியரது கருமப்பொறுப்புக்கள் வகுப்பறைக்கும் பாடசாலைக்கும் மாத்திரம் வரையறைப்படமாட்டாது" இக்கூற்றின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.

4. (1) இலங்கை ஆசிரியருக்குரிய அறநெறிக் கோவையொன்றின் அவசியத்தைச் சுருக்கமாக விளக்குக.

(2) அறநெறிக் கோவையொன்றில் அடக்கவேண்டும் என நீங்கள் கருதும் பிரதானமான விடயங்கள் யாவை என விவரிக்க.

## 9.0 கலைச் சொற்றொகுதி

| | |
|---|---|
| 01. செயற்பங்கு / நடிபங்கு | - Role |
| 02. அந்தஸ்து | - Status |
| 03. தொழில் | - Profession |
| 04. எதிர்பார்ப்புக்கள் | - Expectations |
| 05. முரண்பாடுகள் | - Conflicts |
| 06. செயற்பங்கு ஆளுமை முரண்பாடுகள் | - Role - Personality Conflicts - |
| 07. செயற்பங்குகளுக்கிடையிலான முரண்பாடுகள் | - Inter - Role Conflicts |
| 08. செயற்பங்கினுள்ள முரண்பாடுகள் | - Intra - Role Conflicts |
| 09. செயற்பங்குக் குழுக்களுக்குள்ளான முரண்பாடுகள் | - ConflictsWithin the Role Set |
| 10. அறநெறிக் கோவை ஒழுக்க நெறிக் கோவை | - Code of Ethics |
| 11. துரித | - Accelerated |
| 12. அதிகாரவரிசை படிநிலை அமைப்பு | - Hierarchy |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்


1. எட்கார்ஃ பொர்ஃ பிளிபேஃ வெறரேறாஃ அப்துல் ரசாக் ஃகடௌரா வெறன்றிலோ பெஸ்ஃ ஆதர் வீஃ பெற்றோவிஸ்கி 1ஃ மஜீட்ஃ றவறி னீமாஃ பெட்ரிக்சம்பியன் வோட் வாழ்க்கைக்காகக் கற்றல் உலக ஆய்வு தற்காலமும் எதிர்காலமும் யுனெஸ்கோ வெளியீடு - கல்விவெளியீட்டுத் திணைக்களத்தினால் - மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2. Morrison A And Mc Intryre, D. **Teachers and Teaching** Penguin Education C. Nicholls & Co. Ltd. 2 nd Edition, 1973,

3. 3. Oese O. A. Teacher, Pupil and Task Latimer Trend & Co. Ltd - Reprinted, 1970.

4. Norman M. Goble and James F. Parter. The Changing role of the Teacher UNESCO Studies and Surveys in Compartive Education.

5. Loris Conen & Lawrence Manion Perspectives on Classrooms and school Holt, Rinehart and Winston, 1981.

6. Glenn Langford - Education, persons and society - A Philosophical Enquiry mac Millan Pubishers Ltd. 1985.

7. கல்வி அமைச்சு - கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள் 1981 (கல்வி வெள்ளை அறிக்கை.)

8. Frank Musgrove & Philip H. Taylor - Society and the Teachers Role - Routledge and kegan Paul.

9. John Martin Rich - Conflict & Decision Analysing Educational Issues - Harpen & Row, New York - 1972.

10. Philip Robinson - Persons on the Sociology of Education - An Introduction Routledge & Kegan Paul , 1981,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் அத்தியாயம்
# கல்வியும் சமூக வகுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளடக்கம்** **பக்கம்**

1.0 அறிமுகம் ........ 57
2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 57
3.0 முற்சோதனை ........ 57
4.0 கல்வியும் சமூக வகுப்பும் ........ 58
4.1 சமூக வகுப்பு ........ 58
4.2 கல்வியும் சமூக வகுப்பும் ........ 60
4.3 மாணவர் அடைவும் சமூக வகுப்பும் ........ 61
4.4 பாடசாலை வகைகளும் சமூக வகுப்பும் ........ 62
4.5 பாடப் பிரிவுகளைத் தெரிவு செய்து கொள்ளலும் சமூக வகுப்பும் .... 63
4.6 தொழிலும் சமூக வகுப்பும் ........ 64
4.7 சமூக இயக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கருவியாகக் கல்வி ........ 64
5.0 சாராம்சம் ........ 66
6.0 பிற்சோதனை ........ 67
7.0 விடைகள் ........ 68
8.0 ஒப்படைகள் ........ 68
9.0 கலைச்சொற்றொகுதி ........ 69
10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் ........

52
52
53
54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

கல்விக்கும் சமூக வகுப்புக்கும் இடையே நிலவும் தொடர்புகள் பற்றிய பல் வேறு வரைவிலக்கணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரு புறத்தே கல்வி யைத் தீர்மானிக்கையில் சமூக வகுப்பினால் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் தொடர்பாகவும் மறுபுறத்தே கல்வியின் ஊடாக, சமூக இயக்கத்தை ஏற் படுத்துவது தொடர்பாகவும் உங்களது கவனத்தை ஈர்ப்பதே இவ்வத்தியா யத்தின் நோக்கமாகும். அத்தோடு இலங்கையில் சமகல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. சமூக வகுப்பு என்பது, சமூக, பொருளாதார விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, வகு க்கக் கூடிய பல்வேறு சமூக மட்டங்களாகும் என வரைவிலக்கணப்படுத்துதல்.
2. சமூக வகுப்பு மூலம் கல்வி தீர்மானிக்கப்படும் விதத்தை உதாரணங்கள் மூலம் விளக்குதல்.
3. சமூக இயக்கத்தை ஏற்படுத்துவதில் கல்வி எந்த அளவுக்கு வெற்றிபெற்றுள்ளது என மட்டிடல்.
4. சம கல்வி வாய்ப்பு எண்ணக்கருவை வரைவி லக்கணப்படுத்துதல்.
5. இலங்கையில் சம கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டு ள்ள சில வழிவகைகளை விபரித்தல்.

## 3.0 முற்சோதனை

1. சமனான கல்வி வாய்ப்புக்களை வழங்குதல் என்பதால் நீங்கள் கருது வது யாது?
2. சமனான கல்வி வாய்ப்புக்களை ஆக்கிக் கொடுக்கையில் எதிர்நோக்க வேண்டிய தடைகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 கல்வியும் சமூக வகுப்பும்

## 4.1 சமூக வகுப்பு

சமனான கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் தடையாகக் காணப்படும் பிரதானமான ஒரு காரணி சமூக வகுப்பாகும். எந்தவொரு சமூகத்திலும் மக்கட்கூட்டத்தினரை வெவ்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு மட்டங்களாக அல்லது படைகளாக வகுத்துக் காட்டலாம். அவ்வாறான படைகளை அல்லது மட்டங்களைச் சமூக வகுப்புக்கள் என மிக எளிய விதத்தில் விளக்கலாம். **டேவிஸ், கார்ட்னர்ஸ்** (1949) என்போர், சமூகமட்டம் என்பதை ஒருவரோடொருவர் நெருங்குவதில் பெரு நட்பைக் காட்டும் மக்கட் கூட்டத்தினர் எனக் குறிப்பிட்டுள்ளனர். அவ்வரைவிலக்கணத்தின் மூலம் சமூக வகுப்பொன்றினது அங்கத்தவர்களுக்கிடையே நிலவும் பொது ஒருமைப்பாடு தொடர்பான கருத்துக்கள் வெளிக் காட்டப்படுகின்றன. **கின்ஸ்பர்க்** என்பவர் வெளியிடுங் கருத்துக்களுக்கு அமைய, அவ்வாறான பொது ஒருமைப்பாடு நிலவும் பிரிவுகளை இனங்காண்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது பொதுவானவையான தொழில், வயது, கல்வி ஆகியவற்றில் சமனான தன்மையுடைய வாழ்க்கைப் பழக்கங்களை எற்படுத்திக் கொண்ட, மற்றும் கருத்துக்கள், உணர்வுகள், மனப் பாங்குகள், நடத்தைகள் ஆகியவற்றில் ஒற்றுமையைக் காட்டுகின்ற, மக்கள் கூட்டத்தினரை ஒரு குறித்த சமூக வகுப்பில் அடக்க முடியும் என அவர் எடுத்துக் காட்டியுள்ளார். இவ்விடயங்களுக்கு அமையச் சமூக வகுப்பின் மூலம் ஒரு தனியாளது அல்லது தனியாள் குழு வினது சமூக பொருளாதார மட்டங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன என முடிவு செய்யலாம்.

சமூக வகுப்பு எனும் எண்ணக்கருவை விளக்கிக் கொள்ள வேண்டுமெனின் அதனைத் துணிவதற்காகப் பிரயோகித்த அளவுகோல்கள் யாவை என இனங்கண்டு கொள்வது அவசியமாகும்.

**செயற்பாடு:** 1

1. இலங்கையில் சமூக வகுப்புக்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகப் பிரயோகிக்கப்பட்டுள்ள அளவு கோல்கள் யாவை எனத் தேடியறிக.

2. இவ்வளவுகோல்களின் (பிரமாணம்) துணையுடன் உங்களது பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் தெரிவு செய்து கொண்ட தற்கூறொன்றின் (மாதிரியொன்றின்) சமூக வகுப்புக் கோலத்தை ஆய்வு செய்து சேகரித்த தகவல்களைப் பொருத்தமானவாறு அட்டவணைப்படுத்துக.

மேற்படி செயற்பாடுகளில் ஈடுபட்டதன் மூலம் நீங்கள் சமூக வகுப்புக்களைத் தீர்மானிப்பது தொடர்பான அளவு கோல்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். அவ்வாறாக நீங்கள் அறிந்து கொண்டவிடயங்களை வெவ்வேறு நாடுகளில் பிரயோகிக்கப்பட்டுள்ள அளவுகோல்களுடன் ஒப்பிட முயற்சிப்போம். **வோர்ணர்** (1953) என்பர், தொழில், வீட்டு வகை, அங்கத்துவம் வகிக்கும் சமூகம், வருமானம், கல்வி மட்டம் என்பனவற்றைச் சமூகவகுப்பைத் தீர்மானிக்கும் அளவுகோல்களாகப் பயன்படுத்தியுள்ளார். **மஸ்கிரேவ்** (1983) என்பவரும், தொழில், வருமானம், போசணைமட்டம், போன்ற காரணிகளுக்கு முதலிடம் வழங்குகின்றார். இதற்கு அமைய சமூக வகுப்பானது ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்ற ஒவ்வொரு தனியாளும் அங்கத்துவம் வகிக்கின்ற, வெவ்வேறு விடயங்களின் சேர்க்கையாலான ஒரு வாழ்க்கை முறையாகும் என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பிர்கள். சமூகப் படையமைப்பு அதாவது சமூக வகுப்பு முறை, விஞ்ஞான பூர்வ அல்லது தர்க்க ரீதியான அர்த்தங்களிலிருந்து அப்பாற்பட்ட ஓர் எண்ணக்கருவாகும் எனும் விமர்சனங்கள் இடம் பெற்ற போதிலும் எந்தச் சமூகக் கோலத்திலும் சமூக வகுப்பு முறையொன்று காணப்படுகின்றது என்பதைப் பொதுவாக தனியாள்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்கின்றனர். அமெரிக்காவில் தீர்க்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வகுப்புக்களாக வகுக்கப்பட்டுக் காணப்படுவதைக் காண முடிகின்றது. இந்தியா போன்ற ஆன்மீக சமுதாயங்களில் சமூக வகுப்பு பெரும்பாலும் குல முறையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இலங்கையில் கூட, சமூக வகுப்புக்களை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒருமைப்பாடு காணப்படுவதில்லை என்பதைச் செயற்பாடு -1 இன் மூலம் நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். பொதுவுடைமை மனப்பாங்குகளை மதிக்கின்ற சோவியத் நாட்டில் குடிமக்களுள் பெரும்பாலானோர் உழைப் பாளிகளாக இருப்பினும் கூட, விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் (எஞ்சினியர்கள்) போன்ற நிபுணர்களுக்கென வேறான சமூக மட்டமொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளமையை நுணுகி நோக்கும் போது கண்டு கொள்ள முடிகிறது.

சமூக வகுப்புக்களாக வகுத்துக் கொள்ளும் போது நியமமொன்றினை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான பிரச்சினைகள் காணப்படினும் பெரும்பாலாகப் பயன்படுத்தப்படும் பாகுபாட்டில் பின்வரும் மூன்று குழுக்கள் அடங்குகின்றன.

1. மேல் சமூக வகுப்பு

2. நடுத்தர சமூக வகுப்பு

3. கீழ்ச் சமூக வகுப்பு

சமூக வகுப்புக்கு அமைய குடித்தொகையின் பரம்பலானது நியம வளையியை அண்மிக்கின்றது என்பதை ஹவின்க் ஹர்ஸ்ற் (1962) என்பவர் தனது ஆய்வொன்றின் மூலம் காட்டுகின்றார். இவ்வாய்வுக்காக அவர் பயன்படுத்திய தற்கூறைப் பிரதானமான 5, வகைகளாகப் பாகுபடுத்திக் காட்டியுள்ளார்.

| சமூக வகுப்பு | சத வீதம் |
|---|---|
| மேல் | 1 3% |
| மேல் நடுத்தர | 7 12% |
| கீழ் நடுத்தர | 20 25% |
| மேல் கீழ் | 25 40% |
| கீழ் கீழ் | 15 - 25% |

வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலும். வெவ்வேறு கலாசாரங்களுக்கிடையிலும் சமூக வகுப்புக்களில் பல்வகைமைமைய இனங்கண்டு கொள்ளலாம். உதாரணமாக, இங்கிலாந்துபோன்ற அபிவிருத்தியடைந்த மேலைத்தேய நாடுகலிலும், இந்தியாக, இலங்கை, போன்ற கீழைத்தேயச் சமூகங்களிலும் மேல் சமூக வகுப்பினது வாழ்க்கைக் கோலத்தில் பல்வகைமை காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் நடுத்தர சமூக வகுப்புக் கோலத்துடன் ஒத்துநோக்குவது கடினமானதாகும். இவ்வாறாகச் சமூக வகுப்பு எண்ணக் கருவில் நிலவும் சிக்கலான தன்மை காரணமாகவும் அது மிக நுணுக்கமான பேதங்களை ஏற்படுகின்றன என **மஸ்கிரேவ்** (1983) என்பவர் எடுத்துக் காட்டுகின்றார். அவர் எடுத்துக்காட்டும் விதத்துக்கு ஏறப சமூக வகுப்பு எனும் எண்ணக்கருவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள சமூக அனுபவங்களின் சமனான தன்மையை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியுமாயினும் அவற்றைப் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தியோ பிற முறைகளைப் பயன்படுத்தியோ பகுப்பாய்வு செய்வதோ சமூக ரீதியான ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்த வகைப்படுத்திக் கொள்வதோ மிகக் கடினமானதாகும். இத்தகவல்களுக்கு அமைய, **இலகுவாக ஆய்வு செய்யும் நோக்கினடிப்படையில், எண்ணக்கரு ரீதியில் பாகுபடுத்தக்கூடிய, எளிதான இடையீடற்ற தன்மையைக் காட்டும் நிறுவனக் கூட்டம் சமூக வகுப்பா**கும் எனக் குறிப்பிலாம். சமூக வகுப்புக்களைப் பயன்படுத்துவதன் வரையறைகளை எப்போதும் மனதிலிருத்திக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். சமூக ஒருமைப் பாட்டைச் சீர்குலைக்கக் கூடிய விதத்திலும் பிரயோசிக்க முயற்சி செய்தல் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 கல்வியும் சமூக வகுப்பும்

கல்விக்கும் சமூக வகுப்புக்கும் இடையே காணப்படும் தொடர்புகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களைப் பிரதானமாக இரண்டு பிரிவுகளின் கீழ் நோக்கலாம். அற்றுள் ஒரு பிரிவு **கல்வியானது சமூக வகுப்புக்கு அமையவே தீர்மானிக்கப்படுகின்றது** எனும் கருத்துடன் தொடர்புறுகின்றது. சமூக வகுப்பு வேறுபாடுகளை நீக்கிச் சமூக இயக்கத்தை ஏற்படுத்துவதில் கல்வியே அடிப்படையாக அமைகின்றது என்பது மற்றைய கருத்தாகும். எனவே கல்விக்கும் சமூக வகுப்புக்கும் இடையில் நிலவும் இருவித தொடர்புகளையும் இனங்கண்டு கொள்ள வேண்டியது மிகமிகப் பயனுடையதாக அமையும்.

### கல்வியில் சமூக வகுப்புக்களின் தாக்கம்.

எந்தவொரு சமூகத்திலும் வாழும் எந்தவொரு தனியாளும் ஏதாவதொரு சமூக வகுப்பின் அங்கத்தவராகவே இருப்பர். நீங்கள் உங்களது சமூக வகுப்பின் அங்கத்துவத்தை உங்களது பிறப்புக்கு முன்னரே பெற்று விட்டீர்கள் அல்லவா? பெற்றோர்கள் பேணிவந்த சமூக பொருளாதார நிலைமை, கல்வி மட்டம் ஆகியனவற்றினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சமூக வகுப்பு கட்டாயமாக உங்களுக்கும் உரியதானமையே இதற்கான காரணமாகும். குடும்பத்தை, **தனியாளின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் அடிப்படையாக அமைகின்ற.** தனியாளின் முழு வாழ்க்கையிலும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு நிறுவனமாகக் கருதும் போது தாம் அங்கத்துவம் பெறும் சமூக மட்டத்தினால் ஏற்படுத்தப்படும் தாக்கத்தின் தன்மையை இனங்கண்டு கொள்ளலாம்.

தனியாள் எவருடன் தொடர்பு கொள்கின்றார், அவர் எந்நிறுவனத்தைச் சேர்கின்றார், அவர் அணியும் ஆடையணிகளின் தன்மை எவ்வாறானதாக இருத்தல் வேண்டும், அவரது உணவின் தன்மை எவ்வாறானதாக அமைதல் வேண்டும் என்பன போன்ற விடயங்கள் மட்டுமன்றி அவரது விவேகம், மொழி, அடைவு, கற்கும் பாடநெறி எதிர்காலத் தொழில் என்பன கூட சமூக வகுப்புக் கோலத்துக்கு அமையவே தீர்மானிக்கப்படுகின்றன. சிறப்பான, சுகமான வீட்டுச் சுற்றாடலைத் தமதாக்கிக் கொள்ளும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அவர்களது அபிவிருத்திக்கு உகப்பான சகலதையும் பெற்றுக் கொள்ளும் வரப்பிரசாதத்தை உரிமையாக்கிக் கொள்கின்றனர். உதாரணமாக, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், பொருத்தமான உபகரணங்களைக் கொண்டு விளையாடவும், வசீகரமாக ஆடையணிகளை அணிவதற்கும் அவர்களுக்குக் கூடுதலான வாய்ப்புக்கிடைக்கும். **மக்ஸ்வெபர்** என்பவர் குறிப்பிடுவதற்கு அமைய இவ்வாறான பிள்ளைகள் வறிய பெற்றோரின் பிள்ளைகளை விடக் கூடுதலான வரப்பிரசாதங்களைப் பெற்றுத் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர்.

சமூக வகுப்புகளுக்கு அமைய பிள்ளைகளிடத்தே ஒழுக்கத்தைப் பேணும் முறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மஸ்கிரேவ் (1983) என்பவர் எடுத்துக்காட்டுவதற்கு அமைய நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெற்றோரும், தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பெற்றோரும் தத்தமது பிள்ளைகளிடத்தே காட்டும் கவனம் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்டதாகும். நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளது உணர்வுகளுக்கு முதலிடம் வழங்குகின்றனரெனினும், தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள், தமது பிள்ளைகலிடத்தே கடுமையான ஒழுக்க விதிகளைத் திணிக்கின்றனர். பயமேற்படக்கூடியவாறான மனவெழுச்சி சார்ந்த சந்தர்ப்பங்களுக்கு அடிக்கடி உள்ளாவதால் பிள்ளைகள் உறுதியற்ற ஆளுமைப் பண்புகளைக் கொண்டோராக மாறுவர். நடுத்தர வகுப்புப் பெற்றோர், தமது பிள்ளைகளிடத்தே கட்டியெழுப்பும் பாதுகாப்புடன் கூடிய அன்பு நிறைந்த சூழ் நிலையானது புதிய சமூக செயற்பங்கை இலகுவாகப் பெறுவதில் பங்களிப்புச் செய்கின்றது.அதேவேளை தொழிலாளர் வகுப்புப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சமூக செயற்பங்கைத் தெரிவு செய்து கொள்ள இடமளிப்பதில்லை. மாறாக அவர்களிடத்தே சமூக செயற்பங்கு திணிக்கப்படுகின்றது எனவும் மஸ்கிரேவ் (1983) குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. தி. காரியவசம் அவர்களால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் போது சேரி சார்ந்த உகப்பற்ற சுற்றாடல்களில் வாழும் பிள்ளைகள் விலகலடைந்து செல்வதில் கூடிய முனைப்பைக் காட்டுகின்றன என்பது அறியப்பட்டுள்ளது.

தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு, பின்பற்றுவதற்கு பொருத்தமான மாதிரிகள் கிடைக்கப்பெறுவது மிக அரிதாகும். அது தொடர்பாக பெற்றோர்கள் காட்டும் கவனம் மிகக் குறைவானதாகையால் பொதுவாக 4-5 வயக்கிடைப்பட்ட பருவத்தில் பிள்ளையிடத்தே ஏற்பட வேண்டிய விரைவான வளர்ச்சிக்கும் பங்கம் விளையலாம். அத்தோடு வகுப்பு ரீதியான வேறுபாடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் பிள்ளைகளின் போசனைக் கோலமும், கல்வி நடவடிக்கைகளின் போக்குகளில் வெவ்வேறு விதங்களில் தாக்கம் விளைவிக்கக் கூடும். உணவு போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகாமையானது, கல்வி விளையாட்டு நடவடிக்கைகள் போன்றவற்றில் மாணவர்களின் சுறுசுறுப்பான ஈடுபாடும், ஆர்வமும், மன உறுதிப்பாடும் குறைவடைய ஏதுவாக அமையலாம்.

மொழித்திறனுக்கும், சமூக வகுப்புக்கும் இடையில் நிலவும் தொடர்புகளும் பல்வேறு ஆய்வுகளின் மூலம் தெளிவாகியுள்ளன. உங்களது பாடசாலையில் விசேடமாக, ஆரம்பக் கல்விப் பருவத்தில் பிள்ளைகள் பயன்படுத்தும் சொற்களிலிருந்து அவ்வாறான தெளிவான தொடர்பைக் கண்டறிய முடிகின்றதா என ஆய்க. பெரும்பாலும் மேற் சமூக வகுப்புக்களைத் சேர்ந்த பிள்ளைகளிடத்தே உயர்வான மொழியும், தொழிலாளர் வகுப்புப் பிள்ளைகளுக்கிடையே உயர்வானதாகக் கருத முடியாத வகையைச் சேர்ந்த சொற்பிரயோகங்களும் காணப்படுகின்றமையை நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள். பிள்ளை பயன்படுத்தும் சொற்களின் எண்ணக்கருவைக் கட்டியெழுப்பு தல், மொழிக்கோலங்கள் போன்ற ஒவ்வோர் அம்சமும் சமூக வகுப்புக் கோலத்துக்கு அமைய வேறுபடும் விதத்தை **பர்ன்ஸ்டயின்** என்பவர் எடுத்துக்காட்டுகின்றார். தொழிலாளர் வகுப்புப் பிள்ளைகளின் மொழிக் கோலம், மிக வரையறைப்பட்டதாகும். ஆழ்ந்த எண்ணக்கருக்களைப் பிறப்பிக்கும் விரிவான சொற்றொகுதிக்குப் பதிலாக எளிதானகுறுகிய சொற்றொகுதிகளையே அவர்கள் பிரயோகிப்பர். மேல் சமூக வகுப்பினர் உரிமையாக்கிக் கொள்ளும் மொழித்திறனூடாக பிள்ளைகளுக்குத் தர்க்க ரீதியாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், நுணுக்கமான பகுப்பாய்வுகளுக்குப் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது. அது அவர்களது கல்வியின் பால் சாதகமான விதத்தில் தாக்கத்தை விளைவிப்பது தவிர்க்க முடியாததொன்றாகவே அமையும்.

இக்கருத்துக்களை வலியுறுத்தும் மக்விகர் (Meviker) என்பவர் தொழிலாளர் வகுப்புப் பிள்ளைகளிடத்தே வரையறைக்குட்பட்ட சொற்றொகுதியும் திருப்தியற்ற உச்சரிப்பும், சிக்கலான வழுக்களைக் கொண்ட சிறிய வாக்கியப்பயன்பாடும் காணப்படுவதன் காரணமாக அவர்களிடத்தே மொழி சார்ந்த குறைபாடுகள் வளர்ச்சியடையக்கூடும் என அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

செயற்பாடு : 2

நடுத்தர தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகள் உங்களது பாடசாலையில் சேர்வது தொடர்பாக நிலவும் தடைகளையும், வரப்பிரசாதங்களையும் தேடியறிந்து பட்டியற்படுத்துக.

## 4.3 மாணவர் அடைவும் சமூக வகுப்பும்

சமூக பொருளாதார அந்தஸ்துக்களில் நிலவும் வேறுபாடுகள் கல்வி அடைவில் ஏற்படுத்தும் பல்வேறு தாக்கங்களை வகுப்பறையில் தோன்றும் பல்வேறு நிலைமைகளின் ஊடாக அனுபவவாயிலாக நீங்கள் இடையறாது அறிந்திருப்பீர்கள். வறுமையினால் அவதியுறும் கீழ்ச்சமூக வகுப்புப் பிள்ளைகளின் அடிப்படைத்தேவைகளைக் நிறைவு செய்து கொள்ள முடியாதிருக்கையில் அவர்களது விவேகஞ் சார்ந்த தேவைகள் போன்ற - மாஸ்லோவின் **தேவைகள் முன்னுரிமை ஒழுங்கில்** மேல்மட்டத்தில் அமைந்துள்ள தேவைகளை, நிறைவு செய்து கொள்ள முடியும் என எதிர்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்தும்,மேலதிக நூல்கள், ரேடியோ, தொலைக்காட்சி போன்ற உபகரணங்களின் உதவியும் மேற் சமூக வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கிடைக்கப் பெறுகின்றன. கீழ்ச்சமூக வகுப்புப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி அடைவு தொடர்பாக மட்டும் [illegible]

ஐக்கியக் குடியரசின் பிளவ்டன் (Plowden) அறிக்கை கோல்மன் (Colemen 1967, 1966) அறிக்கை ஜே, டபிள்யூ. டக்ளஸ் என்பவரால் எழுதப்பட்ட (The Home and School, All our Future) போன்ற நூல்களில் கல்வி அடைவுக்கும் சமூக மட்டத்துக்கும் இடையில் நிலவும் தொடர்பு நன்கு விளக்கப் பட்டுள்ளது. டக்ளஸ் (1968) என்பவர் மேற்கொண்ட ஆய்வின் 5000 பிள்ளைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பத் தீர்வானது நடுத்தர வகுப்புப் பிள்ளைகளைத் தொழிலாளர் வகுப்புப் பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் அவர்களது திறன்கள், அடைவு ஆகியவற்றுக்கிடையே அளந்தறியக்கூடிய வகையிலான வேறுபாடு காணப்படுகின்றது என எடுத்துக்காட்டுகின்றது. குறைந்த வசதிகளைக் கொண்ட பெருமளவு அங்கத்தவர்களைக் கொண்ட வீடுகளில் சுற்றாடல் மட்டுமன்றிப் பெற்றோரின் கல்வியறிவின்மையும் குடும்பத்தின் பொருளாதாரக் கஷ்டங்களும் கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய ஊக்குவிப்பைக் குறைப்பதற்குக் காரணமாக அமையலாம். நடுத்தரவகுப்புப் பெற்றோர்கள் கல்வியானது சமூக இயக்கங்களை நீக்குவதற்கான வலிமையான ஒரு கருவியாகும் எனக்கருதி தமது பிள்ளைகளைக் கல்வியின் பால் அதிகளவில் ஊக்குவிக்க முயற்சிக்கின்றன ரெனினும் கீழ் சமூக வகுப்புப் பெற்றோர்களிடத்தே அவ்வாறான முயற்சி [illegible]

பாடசாலையினூடாக நடுத்தர வகுப்பு விழுமியங்களை வளர்ப்பதற்கான முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது எனும் கருத்தும் நிலவுகின்றது. நடுத்தரவகுப்பு அறநெறிகள், பழக்கவழக்கங்கள் உணர்வுகள், மனப்பாங்குகள் ஆகியவற்றைக் கொண்ட பாடசாலைச் சமூகத்துள் அவற்றுக்கு இயைபாக்கமடைகையில், கீழ்ச்சமூக வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் பிரதிகூலங்கள் விளையலாம். எனவே உயிர்ப்பான மாணவர் செயற்பங்கொன்றினை வெளிக்காட்டுவதிற் கூட வெற்றிகரமான தன்மையை அனுபவயிலாகப் பெறும் வாய்ப்பைப் பெரும்பாலும் நடுத்தர வகுப்புப்பிள்ளைகளே பெற்றுக் கொள்கின்றனர். தொழிலாளர் வகுப்பை அதவது கீழ்ச்சமூக வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் விரக்தி, உள நமைச்சல், போன்றவற்றை அனுபவித்து உயிர்ப்பற்ற பாடச்செயற்பங்கை வெளிக்காட்டுவதற்கான [illegible] அவர்

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுள் பெரும்பாலானவற்றில் உயர் கல்வி மட்டத்தில் சமூக பொருளாதார தாக்கங்களின் [illegible]யைப் பற்றியே வலியுறுத்தப்படுகின்றது. ஸ்ற்றோஸ் என்பவர் 1950இல் பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்போர் தொடர்பாக நடத்திய ஆய்வொன்றின் போது, பல்கலைக்கழக மாணவர் குடித்தொகையில் பெரும்பகுதியினர் தொழில்சார்ந்த, முகாமைத்துவ, வர்த்தகப் பிரிவுகளிலிருந்து பிரவே சித்த [illegible] என்பது அறியப்பட்டுள்ளது

செயற்பாடு : 3

நீங்கள் கற்பிக்கும் ஒரு வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் வருட இறுதிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கும் அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சமூக வகுப்புக்களுக்குமிடையே நிலவும் தொடர்பு எவ்வாறானது என ஆய்ந்தறிந்து அறிக்கையொன்றினைத் தயாரிப்படுத்துக.

## 4.4 பாடசாலை வகைகளும் சமூக வகுப்பும்

சம கல்வி வாய்ப்புக்களின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டபோதிலும் வெவ்வேறு சமூக, பொருளாதார மட்டங்களுக்கமைவான பாடசாலைக் கோலமொன்றே இன்றைய சமூகத்தில் காணப்படுகின்றது. உயர் வசதிகளைக் கொண்ட பாடசாலைகளில் கற்கும் வரப்பிரசாதத்தை குறைவற்ற நிதி மற்றும் வசதிகள் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மட்டுமே பெறுகின்றனர். உங்களது பாடசாலை ஒரு பிரபல்யம் வாய்ந்த பாடசாலையாக இருப்பின், அதில் பிரவேசிக்கும் மாணவர்களது சமூக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மட்டம் தொடர்பாக ஆய்ந்தறிக. அவர்களுள் பெரும்பாலான பிள்ளைகள் சிறப்பான வருமானத்தைக் கொண்ட, கல்விறிவுடைய குடும் பங்களைச் சேர்ந்த பிள்ளைகளாகவே காணப்படுவர்.

ஜே. டபிள்யூ. டக்ளஸ் (1968) என்பவர் மேற்கொண்ட ஆய்வின் பெறுபேறு தொடர்பாகவும் உங்களது கவனத்தை ஈர்ப்பது பயனுடையதாக அமையும். 11 வயதின் போது நடத்திய பரீட்சையொன்றின் மூலம் **இலக்கணப்** பாடசாலைக்கு (Grammar school) மாணவர்களைச் சேர்த்துக் கொண்ட விதத்தை ஆய்ந்தறிந்த அவர், பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளார். நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுள் 34% மானோர் இலக்கணப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர். மேல் தொழிலாளர், கீழ் தொழி லாளர் வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளுள் முறையே 25% மானோர் 22% மானோருமே இலக்கணப் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். பெரும் பாலான நாடுகளில் இலவசக் கல்வி காரணமாக தொழில்சார் வகுப்பைச் சேர்ந்தோர் கல்விபெறுவதில் எதிர்நோக்கிய தடைகள் நீக்கப்பட்டுள்ளபோ திலும் மேல் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மட்டுமே அதில் உச்சப்படிகளை அடைய முடிகின்றது. புலமைப்பரீட்சை அல்லது பிரவே சப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றும் பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் சேரும் கீழ்ச்சமூக வகுப்புப் பிள்ளைகள் அப்பாடசாலை களில் மதிக்கும் பழக்க வழக்கங்கள், விழுமியங்கள் போன்றவற்றுடன் இணங்கிச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றமையால் இடைநடுவே பாடசாலையிலிருந்து விலகிச் செல்லவும் இடமேற்படக்கூடும்.

## 4.5 பாடப் பிரிவுகளைத் தெரிவு செய்து கொள்ளலும் சமூக வகுப்பும்

தான் கற்க வேண்டிய பாடவிதானம் எது என்பதைத் தீர்மானிக்கையில் பிள்ளை அங்கத்துவம் வகிக்கும் வகுப்பு அதன் மீது பெருமளவுக்குச் செல் வாக்குச் செலுத்துகின்றது. கீழ்ச்சமூக வகுப்பை சேர்ந்த பிள்ளைகள் பொது வாக கலைப் பிரிவுகளிலேயே கற்கின்றனர்.................பொறியியல், மருத்து வம், சட்டம் போன்ற பாடப்பிரிவுகளை, மேல், நடுத்தர வகுப்பு பிள் ளைகளே கற்கின்றனர். யன்க (1971) வோர்டோ, பரகன் போன்றோர் பாடப்பிரிவுகளைத் தெரிவு செய்தல், சமூக வகுப்பு ஆகியவற்றுக்கிடையில் தெளிவான தொடர்பு காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். இலங் கையில் பல்கலைக்கழக மாணவர்களின மனப்பாங்குகள் தொடர்பாக ஆராய்ச்சி நடத்திய பேராசிரியர் ஜயஸூரிய (1965) கலைப்பிரிவில் கற்கும் மாணவர்களுள் பெரும்பன்மையினர் (2/ 3 பகுதியினர்) கிராமிய அல்லது தொழிலாளர் பின்னணியிலிருந்து வருகைதந்தோராவர் எனக் காட்டியுள் ளார். கீழ் நடுத்தர, கீழ்ச்சமூக வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் கலைப் பிரிவில் சேர்ந்துள்ளனர் என்பது பேராசிரியர் குணவர்தன (1980) நடத்திய ஆய்வின் மூலம் தெளிவாகியுள்ளது. 1978 இல் மக்கள் வங்கி, ஆராய்ச்சித் திணைக்களம் பல்கலைக்கழக கடன் வசதி முறைகள் பற்றி மேற்கொண்ட ஆய்வொன்றின் போது வங்கிக்கடன் பெற்ற மாணவர்களுள் 80. 33% மானோர் மானுடவியில், கலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோராவர் என் பது அறியப்பட்டுள்ளது.

திறமைமிக்க ஒவ்வொருமாணவனுக்கும், விஞ்ஞானம், வாத்தகம் போன்ற பாடப்பிரிவுகளைக் கற்பதற்கான வாய்ப்புக்கிடைக்கப் பெறுதிவல்லை என்பது பாடசாலை கல்வியைக் கவனகிக்கையிலும் தெளிவாகின்றது. வறு மையினால் அவதியுறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளிடத்தே திறமை காணப்படினும் கூட, தத்தமது பாடசாலைகளில் போதிக்கப்படும் யாதேனும் பாடப்பிரிவைக் கற்பதேயின்றி, பிரபல்யம் வாய்ந்தத பாடசாலை யொன்றில் சேரும் வாய்ப்பைப் பெறுவதில்லை. இலங்கையில் சம கல்வி வாய்ப்புக்களைவிசாலிப்பதற்கான பல சனநாயக வழிவகைகள் 1963 -74 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பாடப் பிரிவு களை அதாவது பாடநெறிகளைத் தெரிவு செய்து கொள்வதில் சமூக வகுப்பின் தாக்கம் நீங்கியபாடில்லை எனும் முடிவை மேற்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு : 4**

உயர் வகுப்பு மாணவர்களின் பாடப்பிரிவுகளைத்தெரிவு செய்து கொள் ளலுக்கும் மற்றும் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைதலுக்கும், மாணவரின் சமூக வகுப்புக்கும் இடையே தெளிவான தொட ர்பு காணப்படுகின்றதா என்பதை உங்களது பாடசாலையிலிருந்து தெரிவு செய்து கொண்ட மாணவர் தற்கூறொன்றின் துணையுடன் தீர்மானிக்க.

## 4.6 தொழிலும் சமூக வகுப்பும்.

கல்வியை முடித்த பின்னர் தொழிலொன்றினைப் பெற்றுக் கொள்ளும் வரையில் தனியாள்களின்பால் சமூக வகுப்பு தாக்கம் விளைவிக்கின்றது. சில வேளைகளில் வாழ்நாள் பூராகிலும் தாக்கம் விளை விக்கக்கூடும். தற்கால இலங்கையில் பொறியியலாலாளர்கள், நிருவாக அதிகாரிகள், போன்றோரில் பெரும்பாலானோர் உயர் சமூக வகுப்பு க்களுடன் தொடர்புகளைக் காட்டுவோராவர். பொருளாதார ரீதியில் வலிமைமிக்க தனியாள்கள் பல்வேறு ஆதிக்கங்களின் துணையுடன் ஏனையோரைவிடக் கூடுதலான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்கின்றமை யாவரும் அறிந்ததொன்றாகும். பாடப் பிரிவுகளை தெரிவு செய்து கொள்ளுவதன் ஊடாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சமூக வகுப்பின் தாக்கம் தொழிலைத் தெரிவு செய்து கொள்ளும் வேளையில் மேன்மேலும் உறுதியாகின்றது.

## 4.7 சமூக இயக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கருவியாகக் கல்வி

### கல்வி வாய்ப்புக்களில் சமத்துவம்

சனநாயகக் கோட்பாடுகளை மதிக்கும் பெரும்பாலான சமூகங்களில் சமனான கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐக்கிய இராச்சியம் இக்கல்வி வாய்ப்புக்களை **"சமனானவயது,திறமைகள் சவால்கள் ஆகியவற்றைக்கொண்ட அனைவருக்கும் சமனான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்"** எனக் குறிப்பிடுகின்றது. இவ்வரைவிலக்கணத்தின் மூலம் பிள்ளைகளின் பால் தாக்கம் விளைவிக்கின்ற சமூக வகுப்புக் கோலம் தொடர்பாக எடுத்துக் கூறப்படுவதோடு, அத்தாக்கங்களை மீறிச் செல்வதற்குத் தேவையான சுற்றாடலை ஏற்படுத்திக் கொடுத்தலின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. ஜோன் வயிஸி என்பவர் கல்வியில் சம வாய்ப்பு தொடர்பான எண்ணக்கருவை முழு உலகம் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு தத்துவமாகக் குறிப்பிட்டிருப்பினும் ஏ, எச், ஹல்ஸ் (1961) என்பவர் **அச் சம வாய்ப்புக்களை தனியாளின் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் ஏற்படும் தடைகளை வெற்றி கொள்ளக் கூடிய வாய்ப்புக்களையும் உள்ளடக்கியவாறு** மீண்டும் வரைவிலக் கணப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறெனின் கல்வியில் சமவாய்ப்பு தொடர்பாக வழங்கப்படும் வரைவிலக்கணங்களுள் பெரும்பாலானவை அவ்வெண்ணக் கருவின் மூலம் தனியாள்களின் ஒத்ததன்மை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதையும் ஒரு குறித்த விதத்தில் பிள்ளைகளின் வயது, சவால்கள் ஆகியவற்றுக்கு அமைய அவர்கள் வகைப்படுத்தப்படுகின்றார்கள் என்பதையுமே குறிக்கின்றது. **முதலாளித்துவ, பொதுவுடைமைத் தத்து வங்களுக்கு அமைய சமகல்வி வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாக நிலைமைகள் வேறுபடலாம்.**

முதலாளித்துவச் சமூகத்துக்கு, சமூக வேறுபாடுகளுக்கு முதலிடம் கிடைக் கப்பெறும் வரை தனியாள்களில் உள்ள திறன்கள், முற்றுமுழுதாக விருத்தி யடைவதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. இந்நிலைமைகளின் போது சமவாய்ப்புக்களை வழங்கும் வழிவகைகளின் மூலம் சமூக வேறுபாடுகள் மேன்மேலும் விரிவடைவதே காணப்படுகின்றது. அவ்வாறாயினும் சம னான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சமூக ஏணியில் மேலே செல்வதற்கென (அதாவது சமூக இயக்கங்களுக்கான) வாய்ப்பு அதிகரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இலங்கைப் பாடசாலைகளில் உயர் கல்வி நிறுவனங்களில் தொழிலாளர் வகுப்புக்களில் மாணவர்கள் குறைவாகப் பிரதிநித்துவப்படுத்தப்படுவதையும், அவர்கள் பாடசாலையை விட்டுச் நீங்கிச் செல்லும் சதவீதம் அதிகரிப்பதையும் காண முடிகின்றது.

முழு ஆசியாவிலும் 1967 ஆம் வருடத்தில் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லும் வயதைக் கொண்ட பிள்ளைகளின் தொகை இடைநிலைப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் தொகை உயர் கல்விக்காகப் பதிவு செய்து கொண்ட மாணவரின் தொகை என்பன ஏனைய நாடுகளை விடத் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டன. இந்தியாவில் 6-11 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளின் பாடசாலைக்குச் செல்வோரின் சதவீதம் ஏறத்தாழ 80 ஆகக் காணப்பட்டது. 11 - 14 வயதுக்கிடைப்பட்டோரில் 36% மானோரே பாடசாலைக்குச் சென்றனர். இந்தியாவில் பிராந்தியங்களைத் தனித்தனியே நோக்கும் போது, வசதிகளில் சமனின்மையும், பாடசாலை செல்லும் வயதைக் கொண்ட ஆனால் பாடசாலைக்குச் செல்லும் பிரிவினரின் தொகையும் வேறுபடுகின்றது. எனினும் அண்மைக்காலங்களில் இந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சனநாயக நடவடிக்கைகள் மூலம் நடுத்தர தாழ்ந்த சமூக வகுப்புப் பிள்ளைகள் பெரும்பாலானோர் உயர்கல்வி பெறுகின்றனர் என்பது தெளிவாகின்றது. அண்மைக் காலத்தில் இலங்கையின் தாழ்ந்த சமூக மட்டங்களைச் சேர்ந்த பிள்ளைகள் உயர்கல்வியில் கூடுதலாக ஈடுபட்டுள்ளனர் என்பது புள்ளிவிபரங்களின் மூலம் தெளிவாகியுள்ளது.

**கல்வியில் சமவாய்ப்புக்களை விசாலிப்பதற்காக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில நடவடிக்கைகளைக் கவனிப்போம்.**

### 1. கட்டாயக் கல்வி

1972 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைய இலங்கையில் 6 -14 வயதுக்கிடைப்பட்டோருக்குக் கல்வி கட்டாயமாக அமைகின்றது. 1979 தொடக்கம் மீண்டும் 5 வருடம் பூர்த்தியாதலானது பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் வயது மட்டமாகக் கருதப்படுகின்றது. அவ்வயதினை அடைந்த ஒவ்வொரு தனியாளுக்கும் கல்வியைப் பெறும் அதிகாரம் உண்டு. இலவசக் கல்வி குறைந்தபட்சம் ஆரம்பப்பருவத்திலாவது வழங்கப்படல் வேண்டும். அது கட்டாயமானதாகவும் அமைதல் வேண்டும்.

### 2. இலவசக் கல்வி

இலங்கையில் இலவசமாக வழங்கப்படும் கல்வி ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழக மட்டம் வரை விசாலித்துச் செல்கின்றது. 1982 தொடக்கம் அமுற்படுத்தப்படும் இலவசப் பாடநூல் விநியோகமானது இலவசக் கல்வி மேன்மேலும் விரிவுபடுத்தப்பட்ட ஓர் அம்சமாகும் எனக் கொள்ளலாம். தமது பொருளாதாரக் கஷ்டங்கள் மூலம் கல்வியின் பால் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களைக் குறைத்து ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொருவரும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இப்படிமுறையின் நோக்கமாகும்.

### 3. சுயமொழிக் கல்வி

சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கையில் பல வருடங்களாக ஆங்கில மொழியிலேயே உயர்கல்வி வழங்கப்பட்டது. அது அரச மொழி மாத்திரமன்றி வர்த்தக மொழியாகவும் பயன் பட்டது. 1943 இல் கன்னங்கர குழுவினரால் பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைகழகக் கல்வி வரையில் சுயமொழி மூலம் கல்வி பெறுவதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதன் முதலாக, ஆரம்பக்கல்வியும், பின்னர் 1957 இல் 12 ஆம் தரம் வரையிலும் 1960 ஆம் தசாப்தத்தின் போது பல்கலைக்கழகக் கல்வியும் சுயமொழி மூலம் புகட்டப்பட்டது கற்றல் மொழி மூலமாக இருந்து வந்த ஆங்கில மொழி, 1972 இல் பாடசாலைகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்று முழுதாக நீங்கியது. உயர்கல்விவரை சுயமொழிப் பாடசாலைகள் விசாலிப்படைந்தன. இதுவரை உயர் சமூக வகுப்புப் பிள்ளைகளுக்கு மாத்திரம் வரையறைப்பட்டிருந்த கல்வியில் நடுத்தர,தாழ் சமூக வகுப்பு களைச் சேர்ந்த பிள்ளைகளும் ஈடுபடத் தொடங்கினர். அண்மைக் காலந்தொட்டு, வைத்தியத்துறை, பொறியியல் பாடநெறிகளைக் கற்பதில் கூட சமூக வகுப்பில் இயக்கத்தை ஏற்படுத்துபதில் கல்வியானது அடிப் படையாக அமைந்துள்ளது என்பது தெளிவர்கின்றது. எனவே சுயமொழிக் கல்வியானது சமூகப் படையமைப்பின் வரைறைகளை உடைத்தெறிய வழிவகுத்துள்ளது எனக்குறிப்பிடலாம்.

**செயற்பாடு : 5**

1. சமூக வகுப்பு வேறுபாட்டை நீக்குவதற்காக இலங்கையில் மேற்கொள் ளப்பட்டுள்ள வழிவகைகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து அறிந்து கொள்க.

2. சமூக வகுப்பு வேறுபாடுகளைக் குறைப்பதற்காக உங்களது பாடசா லையில் கல்வி நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதத்தை ஆய்க. பாடசாலையில் காணப்படும் சமூக வேறுபாடுகளைக் குறைப்பதற்காகப் பிரயோகிக்கக் கூடியபரிகார நடவடிக்கைகளடங்கிய அறிக்கையொன்றினைச் சமாப்பிக்க.

3. கல்வியானது சமூக இயக்கத்தில் தாக்கம் விளைவிக்கும் விதத்தை உங் களது பாடசாலை மாணவர்கள் பழைய மாணவர்கள் ஆகியோரிலிருந்து உதாரணங்காட்டி விளக்குக.

4. உங்களது பாடசாலையில் பிரதிகூலமான மட்டங்களைச் சேர்ந்த பிள் ளைகளது கல்விக்காகத் துணைபுரியும் வெவ்வேறு நிறுவனங்கள், ஒழு ங்கமைப்புக்கள் போன்றன காணப்படின் அவை தொடர்பான தகவல் களைச் சேகரிக்க..

## 5.0 சாராம்சம்

தனியாள்களை சமூக பொருளாரதார விடயங்களின் அடிப்படையில் பாகுபடுத்தக்கூடியபல்வேறு மட்டங்களாக வரைவிலக்கணப்படுத்தக் கூடியசமூக வகுப்பானது வெவ்வேறு வழிகளில் அவர்களது நிலவு கையில் பங்களிப்பை ஏற்படுத்துகின்றது. எவரேனுமொருவரின் கல்வி மட்டுமன்றி அவர்களது எதிகாலத் தொழில் கூட அவர் அங்கத்துவம் வகிக்கும் சமூக வகுப்பினாலேயே தீர்மானிக்கப்படுகின்றமை தெளி வாகின்றது.

மற்றுமொரு விதத்தில் சமூக இயக்கத்தை ஏற்படுத்துவதில் அடிப்படை யாக அமையும் ஒரு கருவியாகக் கருதும் போதும் கல்விக்கும் சமூக வகுப்பிற்கும் இடையே நிலவும் தொடர்பிணைபிறிதொரு விதத்தில் இனங்கண்டு கொள்ளலாம். இலங்கையும் கூட சம கல்வி வாய்ப் புக்களை விசாலிப்பதில் கட்டாயமான இலவசக் கல்வியை விரிவடையச் செய்த போதிலும் சமூக வகுப்புத்தாக்கங்களிலிருந்து விடுபட்டு சமூக இயக்கத்தைக் ஏற்படுத்திக் கொள்வதில் ஒரு சில தனியாள்கள் மட்டுமே வெற்றி கொண்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையளிக்க.

1. யாதேனும் சமூகத்தின் வகுப்பு அமைப்பை படைகளாக ஆக்குவதில் பயன்படுத்த முடியாத ஓர் அளவு கோலாகக் கருதக் கூடியது.

   1. கல்வி மட்டமாகும்
   2. பின்பற்றும் சமயமாகும்
   3. ஆற்றும் தொழிலாகும்
   4. போசணை மட்டமாகும்

2. பின்வரும் கூற்றுக்களுள் கல்வியின் பால் சமூக வகுப்பு பங்களிப்புச் செய்வதில்லை என்பதை உணர்த்தும் கூற்றைத் தெரிவு செய்க.

   1. தொழிலாளர் வகுப்புப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குரிய சமூக் செயற்பங்குகளைச் தெரிவு செய்து கொள்ள இடமளிப்பதை தவிர்த்து அவற்றை உரிமையாக்கிக் கொடுக்க முயற்சிக்கின்றனர்.
   2. பிள்ளையினது மொழித்திறன் வளர்ச்சியில் சமூக அடிப்படைகளுக்கு அமைய மாற்றங்களைக் காண முடியும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியும்.
   3. சமூக வகுப்புத் தன்மைக்கு அமையவே பிள்ளைகளின் விவேகத்திறன்கள் வெளிக்காட்டப்படுகின்றன.
   4. கல்வி நடவடிக்கைப் போக்குகளில் பிள்ளைகளின் போசணைமட்டம் பங்களிப்புச் செய்வதில்லை.

3. 1963 இல் கலாநிதி ஐயசூரிய அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களில் மனப்பாங்குகள் தொடர்பாக நடத்திய ஆராய்ச்சியொன்றின் போது கலைப்பிரிவு மாணவர்களுள் பெரும்பாலானோர் கிராமிய அல்லது தொழிலாளர் பின்னணியிலிருந்து வருகைதந்தோர் என்பது தெளிவாகியது. இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுவது.

   1. இலங்கையில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் அவர்களது சமூக வகுப்பின் தன்மைக்கு அமையவே பாடநெறிகளைத் தெரிவு செய்து கொள்கின்றனர் என்பதாகும்.
   2. வறுமையில் உழலும் பிள்ளைகள் விஞ்ஞானப் பாடநெறியில் தாழ்ந்த அடைவு மட்டத்தைக் காட்டுகின்றனர் என்பதாகும்.
   3. சமூக வகுப்பு அமைப்புக்கு அமையக் கல்வியில் சமவாய்ப்புக்களை ஏற்படுத்துவது இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும்.
   4. சமூக வகுப்பு அமைப்புக்கு அமையக் கல்வியில் சமவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் இலங்கையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கைச் சமூகத்துள் கல்வியில் சமவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் பங்களிப்புச் செய்யாத ஒரு வழிவகையாகக் கொள்ளக் கூடியது.

1. ஆண்டு – 1 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி பெற்றுக் கொடுத்தலாகும்

2. தனியார் பாடசாலைகளை நடத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. 6– 14 வயது வரையில் கல்வி கட்டாயமானதெனக் கருதுதல்.

4. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திறமைகளுக்கு அமையப் புலமைப் பரிசில் வழங்குதல்.

5. இலங்கையில் சமூக வகுப்பு இயக்கத்தை ஏற்படுத்துவதில் மிகக் கூடுதலான பங்களிப்பைச் செய்த சம்பவமாகக் கொள்ளக் கூடியது,

1. பல்கலைக்கழக மட்டம் வரை சுயமொழியிலேயே கல்விபுகட்டுதலாகும்.

2. தனியார் பாடசாலைகளை அரசு சுவீகரித்தமையாகும்.

3. கனிட்ட இடைநிலை மட்டம் வரை பொதுப்பாடவிதானமொன்றினைப் பயன்படுத்துதல்.

4. விஞ்ஞானக் கல்வியை விரிவு படுத்துவதாகும்.

## 7.0 விடைகள்

(1) 11 (2) 111

(3) 111 (4) 11

(5) 1

## 8.0 ஒப்படைகள்

1. சமூக வகுப்பின் தாக்கம் காரணமாக உங்களது கற்றல் நடவடிக்கைகளுக்குப் பங்கம் விளைவித்த சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களைக் காட்டி அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக நீங்கள் பிரயோகித்த வழிவகைகளை விளக்குக.

2. "பொருளாதார மட்டமானது தனியாளின் கல்வியைத் தீர்மானிப்பதில் தாக்கம் விளைவிக்கும் காரணிகளுள் ஒன்றாகும். உங்களது பாடசாலை மாணவர்கள் தொடர்பான உதாரணங்களின் துணையுடன் இக்கருத்துக்குச் சார்பாகவோ எதிராகவோ விடயங்களைக் கலந்துரையாடுக.

3. சமூக இயக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கருவாக கல்வியானது முக்கிய இடம் பெறுகிறது. இது தொடர்பான உங்களது கருத்துக்களைச் சமர்ப்பிக்க,

4. இலங்கைப் பாடசாலைத் தொகுதியானது சமூக வகுப்புமுறைக்கு அமையக்கட்டியெழுப்பப்பட்டு வளர்ச்சியடைந்திருப்பினும் இந்நிலையைத் தவிர்ப்பதற்காக வெவ்வேறு வழிவகைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இது பற்றி ஆய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச்சொற்றொகுதி.

| | | |
|---|---|---|
| 1. கட்டாயக் கல்வி | - | Compulsory Education |
| 2. இசைபாக்கம் | - | Adaptaion |
| 3. மனவெழுச்சிக்குரிய | - | Impulsive |
| 4. இழுவிசை | - | Tension |
| 5. பொருளாதார மட்டம் | - | Economic level |
| 6. விரக்தி | - | Frustration |
| 7. மந்தம் / ஊக்கமின்மை | - | Lethargic |
| 8. போசணைக் கோலம் | - | Nutritive Pattern |
| 9. அறிவுச் சமூகங்கள் | - | Intellectual Societies |
| 10. அளவுகோல்கள் (பிரமாணங்கள்) | - | Criteria |
| 11. பாடநெறி | - | Subject streams |
| 12 பகுப்பாய்வு | - | Analy: is |
| 13 சமூக வகுப்பு | - | Social Class |
| 14. மொழி எண்ணக்கருக்கள் | - | Language Concepts |
| 15. சமூகப் படையமைப்பு | - | Social Stratification |
| 16. சமூக ஒன்றிணைப்பு, சீரிய நிலை | - | Social Integrity |
| 17. சமூக இயக்கம் | - | Social Mobility |
| 18. சமூகச் செயற்பங்கு | - | Social role |
| 19. ஆய்வு | - | Survey |
| 20. சமூக ஆராய்ச்சி | - | Social research |
| 21. சேர்க்கை/ இணைப்பு | - | Combination |
| 22. விழுமியங்கள் | - | Values |
| 23. மாணவர் குடித்தொகை | - | Student population |
| 24. வகையீடு/ பாகுபாடு | - | Classification |

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


1. எட்காஃபெபாரே- வாழ்க்கைக்காகக் கல்வி

2. குணவர்தனஃ ஜீ. ஐ. ஸீ - கல்வியும் சமூகப் படையமைப்பும் - கல்வி - இல 15 - 1983 மார்ச்

3. மனதுங்கஸ்ஃ பீ. டபிள்யூ - கொழும்பு நகரச் சேரிப்பிரதேசமொன்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் குடிசை வாசிகள் முறை சார் கல்வியில் – தொடர்புறும் விதம். –கல்வி –16 – 1984 டிசம்பர்

4. Colemen j . s - Equality of Educational Opportunity - Washington 1966.

5. Davis p.G. — Guidance Manual for Principals U.S.A - 1949

6. Dou glas J. W.B.Ross & Simpson — All out future - London - 1968.

7 Douglas J.W.B —The Home and the school.

8 Gunawardana G.I.C. —Socio Economic effectiveness of higher Education in Sri Lanka. Astudy of a cohort of Arts graduates Unpnb; Phd thesis. 1980 La Trobe University.

9. Halsey A.H. — Ability and Educational opportunity. OELD PARIS -1961.

10. Hacighuriya. R.J.— Growing up in Diversity. New York - 1962.

11. Jayasuriya J.F. — Education in Ceylon Before and After Independence Colombo Associated Ed. puls. 1969.

12. Mz. Vicks H.J.— The implications ot changing ideas on how Childern Develop Intellectually. Early Childhood Education.

13. Musgrave P.W. —The Sociology of Education - 1983.

14. Plowden B. H. — Children and other Primary School. Vol / 2 London.

15. Uswatte - Arachi. G—University Admissions in Ceylon Their Economic and Social background and employmemt expectations. Modern Asian studies - 1974

16. Strauss M.A.—Family characteristics and Occupational choices of University Influence.Unpub PhD thesis - 1979. La trobe University.

17. Warner & Warner — What you should know about social class. Chicago science Research Association - 1953.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் அத்தியாயம்
# கல்வியும் சமூக மாற்றங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் சமூக மாற்றங்களும்

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 73 |
| 2.0 | சிறப்பு நோக்கங்கள் | 73 |
| 3.0 | முற்சோதனை | 73 |
| 4.0 | கல்வியும் சமூக மாற்றங்களும் | 74 |
| 4.1 | சமூக மாற்றங்கள் என்பன யாவை? | 74 |
| 4.2 | சமூக மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வி ஒழுங்கமைதல் | 75 |
| 4.3 | சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு கருவி கல்வி | 79 |
| 5.0 | சாராம்சம் | 81 |
| 6.0 | பிற்சோதனை | 81 |
| 7.0 | விடைகள் | 83 |
| 8.0 | ஒப்படைகள் | 83 |
| 9.0 | கலைச்சொற்றொகுதி | 84 |
| 10.0 | மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் | 84 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

முறைசார் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனம் என்றவகையில் பாடசாலையினால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களைச் சிறப்பாக நிறை வேற்றுவதற்காகப் பாடசாலைக்கும், சமுதாயத்துக்கும் இடையில் நிலவ வேண்டிய தொடர்பின் தன்மை பற்றி முன்னைய அத்தியாயங்களில் உங் களது கவனம் ஈர்க்கப்பட்டது. கல்விக்கும் சமூக வேறுபாடுகளுக்கும் இடை யில் நிலவும் தொடர்புகளைப் பகுத்தாய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்க மாகும்.

இடையீடின்றி மாற்றங்களுக்குள்ளாதல் ஒவ்வொரு சமூகத்தினருக்குரிய தனிப்பட்ட இயல்பாகும். சமூக விரிகையின் ஆரம்பக் காலங்களில் நிகழ்ந்த மாற்றங்கள் சமூகத்துக்கே உரித்தான இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகும். முறைசார் கல்வி தோன்றியவுடன் அது சமூகத்தின் இயக்கத் தன்மையை நெறிப்படுத்தும் பிரதான சக்தியாக மாறி யது. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அமையச் சென்று சமூகச் சம நிலைத் தன்மைதாக்கப்படும் வண்ணம் அவற்றைப் பரப்புவது சமூகத்துள் தேவையான வேறுபாடுகளை ஏற்படுத்தும் சக்தியாகத் தொழிற்படுவதும் கல்வியினால் நிகழ்த்தப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளன.

சமூக மாற்றங்களின் தன்மை அவற்றில் தாக்கம் விளைவிக்கும் சக்திகள் அவற்றுடன் கல்வி தொடர்புறும் விதம் ஆகிய தொடர்பாக இவ்வத்தி யாயத்தின் மூலம் விளக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் ஆசிரிய மாணவர் பின்வரும் குறிக் கோள்களை எய்துவர்.

1. "சமூக மாற்றங்கள்" எனும் எண்ணக்கருவைத் திருத்தமாக வரை விலக்கணப்படுத்துவர்.

2. சமூக மாற்றங்களுக்கும் கல்விக்கும் இடையேயான தொடர்பை ஏற் படுத்திக கொள்வதன் அவசியத்தை விளங்கிக் கொள்வர்.

3. சமூக மாற்றங்கள் காரணமாகக் கல்வியிலும், கல்வி காரணமாகச் சமூகத்திலும் மாற்றங்கள் ஏற்படும் விதத்தை உதாரணங்கள் மூலம் விளக்குவர்.

## 3.0 முற்சோதனை

1. கல்வி என்பது யாது என ஒரு தனி வரைவிலக்கணத்தின் மூலம் பகுப் பாய்வு செய்ய முடிகின்றதா என ஆய்ந்தறிக.

2. கல்வியின் ஊடாகச் சமூக சுபீட்சத்தை எய்திய சில நாடுகளைக் குறிப் பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 கல்வியும் சமூக மாற்றங்களும்

## 4.1 சமூக மாற்றங்கள் என்பன யாவை?

சமூகம் என்பது பொது நோக்கங்களின் அடிப்படையில் பிணைந்து கூட்டாக வாழும் தனியாட்குழுவாகும். உயிர்வாழும் தனியாள்களைக் கொண்ட எந்தவொரு சமுதாயமும் நிலையாக நிலவுதற்கான வாய்ப்புக் கிடைப்பதில்லை, சமூகத்தின் அங்கத்துவம் வகிக்கும் தனியாள்களிடத்தே இடையறாது மாற்றங்கள் ஏற்படுகின்றமையால், சமூகமும் மாற்றமடைகின்றது. இம்மாற்றம் துரிதமாகவோ, மந்தகதியிலோ நிகழலாம். உதாரணமாக, ஆதிகால, கற்காலத்திலிருந்து விவசாயயுகம் வரையிலான மாற்றங்கள் சமூகத்தினுள் ஏற்படுவதற்கு மிகமிக நீண்டகாலம் கழிந்துள்ளது. விலங்குகளை வேட்டையாடியபடி வாழ்ந்த மனிதனுக்குத்,தானாகவே தயார்படுத்திக் கொண்ட உணவை உண்ணக் கூடிய தன்மை கிடைக்கப் பெறுவதற்கு மிகமிக நீண்ட காலம் செலவாகியது. எனினும் பிரான்சியப் புரட்சி, ருஷியப் புரட்சி என்பன சமூகத்துள் துரித மாற்றங்களை ஏற்படுத்திய இரு சந்தர்ப்பங்களாகும். **அச்சமூகத்தில் அங்கத்துவம் வகிக்கும் தனியாள்களின் விழுமியங்கள், அறநெறிகள், பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள், மொழி, ஆடையணிகள் ஆகிய துறைகளுள் ஒன்றிலோ அல்லது அனைத்துத் துறைகளிலுமோ ஏற்பட்டமாற்றமே இதுவாகும்.** சமூகம் இடையறாது அம்மாற்றங்களை எதிர் நோக்கியுள்ளமையினால் அது ஆரம்பித்த சந்தர்ப்பத்தை அல்லது முடிவுற்ற சந்தர்ப்பத்தைக் குறிப்பாகக் அறிந்து கொள்வது கடினமானதாகும். அவ்வாறே ஒரு மாற்றத்தின் ஆரம்பத்தை மற்றொரு மாற்றத்தின் முடிவாகக் கருதவும் முடியும்.

சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் எப்போதும் சமூகத்துக்கு உகப்பான சாதமான பெறுபேறுகளைத்தான் ஏற்படுத்தும் எனக் கொள்ள முடியாது. உதாரணமாக, ஜேர்மனியில் ஹிற்லரின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் இத்தாலியில் முஸோலினியின் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் அந்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. எனினும் சோவியத்நாடு, மக்கள் சீனா போன்ற நாடுகளில் விரைவான புரட்சியின் ஊடாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள் அச்சமூதாயங்களுக்கு புது மலர்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பனவாக அமைந்தன. சமூகத்தினுள் ஏற்படும் மாற்றங்களைச் சமூகத்துக்கு உகப்பான விதத்தில் தயார்படுத்திக் கொள்வதற்கும் கல்வி உதவுகின்றது. மற்றொரு விதத்தில் சமூக மாற்றங்களின் ஊடாக, வெவ்வேறு தனியாள்களிடத்தே ஏற்படக்கூடிய முரண்பாடுகளைச் சமூகப்படுத்தக்கூடிய ஊடகமாகவும் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. மாற்றங்களுக்கு இலகுவாக இயைபாக்கம் பெறக்கூடிய தனியாள்களுக்கும் மரபு ரீதியான கருத்துக்களைக் கொண்டோருக்கும் இடையிலே முரண்பாடுகள் தோன்றலாம். அவ்வாறே யாதேனும் சமூகத்துள் பண்டையவற்றை மதிக்கும் முதியோருக்கும் புதுக் கருத்துக்களை மதிக்கும் இளைஞர் சந்ததியினருக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் கூடுதலானதாகும். இவ்வாறான சமனின்மைகளை சமூகப்படுத்துவதில் கல்வி அம்மாற்றங்களுடன் தொழிற்படல் மிக மிக அவசியமாகின்றது.

சமூகத்தின் மாற்றங்களைச் சமூகத்துக்கு உகப்பான நிலைமைக்கு மாற்றிக் கொள்வதன் அவசியத்தையும், மாற்றங்களின் ஊடாக மனித மனதினுள் தோன்றக் கூடிய நமைச்சல் நிலைமைகளைச் சமூகப்படுத்தும் அவசியத்தையும் கல்வியின் பெறுமானம் வளர்க்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். எனவே மாற்றங்களை எவ்வாறாக ஏற்படுத்தல் வேண்டும், எத்திசையில், எந்த அளவுக்கு எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது **கல்வியானது, எதிர்பார்க்கப்படும், சமூக மாற்றங்களை முன்வைத்து முன்னேறிச் செல்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறே** சமூகத்துள் ஏற்படுத்தும் மாற்றங்களுக்கு அமைய மக்களை இயைபாக்கமடையச் செய்வதற்குத் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகிய தொடர்பான மாற்றங்களை ஏற்படுத்தும் போது கல்வியானது சமூக மாற்றங்களுடன் பொருந்திச் செயல்பட வேண்டும் என்பது தெரிகின்றது. எனவே மிக விரைவான ஓட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுள்ள சமூகத்துடன் சரிசமனாகப் பயணஞ் செய்வதற்குத் தனியாளுக்கு உதவுவது கல்வியாகும். தனியாள் வேறுபட்டுச் செல்லும் சமூகத்தின் தேவைகளை இனங்கண்டு கொள்ளல் வேண்டும். அச்சமூகம் இயைபாக்கம் பெறல் வேண்டும். அதற்காக அவரிடத்தே காணப்படும். சக்தியைக் கல்வியின் மூலமே மெருகூட்ட முடியும். கல்விக்கும், சமூக மாற்றங்களுக்கும் இடையில் காணப்படும் தொடர்பு இருவகைப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே மேற்கூறிய விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டது.

1. சமூக மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வி ஒழுங்கமைகின்றது.
2. கல்வியின் மூலம் சமூக மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

## 4.2 சமூக மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வி ஒழுங்கமைதல்.

பிறந்த கணம் தொட்டு, சமுதாயம் மூலம் நாம் இயைபாக்கத்தக்குள்ளாக்கப்படுகின்றோம். அதற்காகப் பல்வேறு நிறுவனங்களின் துணை பெறப்படவேண்டியது அவசியமாகும். சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அளவுகோல்கள், சமூகத்தின் அடிப்படையாக அமைந்துள்ள மரபுரீதியான பல்வேறு நியமங்கள் ஆகியன தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதும், அவற்றுக்கு அமைவாக வாழ்க்கை நடத்துவதற்காக, ஒழுங்கமையும் கருமத்தை ஆற்றுவதும் பாடசாலையேயாகும். பாடசாலை அது அமைந்துள்ள சமூகத்தின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைவானதாகக் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாக அமையும் காரணம் இதுவேயாகும்.

துரிதமாக விருத்தியடையும் சமூகத்தில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடிய திறமையைக் கொண்ட, நல்லொழுக்கமும், தீட்சண்யமான விவேகமுடைய மக்களைத் தோற்றுவிப்பதே பாடசாலையின் பிரதானமான பொறுப்பாகும். அதற்காக மிகப் பெருமளவு பணத்தைச் செலவு செய்யும் அதேவேளை பாடசாலையின் மீது பெருமளவு நம்பிக்கையையும் வைத்துள்ளது. பாடசாலையிலிருந்து தோற்றுவிக்கப்படும் தனியாள்கள் சமூகத் தேவைகளுடன் பொருந்தாதவாறு நிராகரிக்கப்பட்ட தனியாள்களாக மாறுவார்களெனின் அப்பாடசாலையின் ஊடாக, சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுதில்லை. பாடசாலையானது சமூகத்தினால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை ஆற்றாத ஒரு நிறுவனமாக மாறிவருகின்றது. என விமர்சிக்கும் நிலை அண்மைக் காலந்தொட்டுத் தோன்றியுள்ளமையைக் காணமுடிகின்றது. பாடசாலை அற்ற சமூகம், சுவர்களற்ற பாடசாலை போன்ற நவீன போக்குகளில் மாணவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. மாற்றமடைந்துவரும் சமூகத்துக்கு இசைவானதாகக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதே இப்போக்குகளின் நோக்கமாக இருக்கக் கூடுமல்லவா?

பாடசாலையானது சமூகத்தின் ஒரு மாதிரியாகையால், (Sample) சமூகத்துள் இடம் பெறும் ஒவ்வொருமாற்றமும் பாடசாலையினால் உணர்த்தப்படுதல் வேண்டும். அவ்வாறான சமூக மாற்றங்களுக்கு அமையப் பாடசாலைப் பாடவிதானங்கள், மதிப்பீட்டு முறைகள், கற்பித்தல் முறைகள், உபகரணங்கள் போன்றன அவ்வப் போது புத்துருப் பெறும் விதத்தை நீங்கள் கூட அனுபவவாயிலாகக் கண்டிருப்பீர்கள். அதற்கென மிக மிகப் பொருத்தமான உதாரணங்களை வழங்கும் சந்தர்ப்பங்கள் பற்றிக் கவனியுங்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சமூக மாற்றங்களுக்கு அமையக் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் சமூக மாற்றங்களுக்காகக் கல்வியின் ஊடாகத் தோற்றுவிக்கப்படும் தனியாள்களைப் பங்காளிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்தை மற்றுமொரு விதமாகக் கூறுவதானால் **கல்வியானது, பண்டைய பழக்க வழக்கங்களைப் போன்றே பழக்கவழக்கங்கள், அறநெறிகள் ஆகிய வற்றைப் பாதுகாக்கும் கருமத்திலும், புது அம்சங்களைச் சமூகத்துடன் சேர்க்கும் கருமத்திலும் பங்காற்றுதல் வேண்டும்.** சமூகமானது இடையறாது மாற்றங்களுக்குள்ளாகின்றமையால், கல்விக்கருமத் தொடரானது அம்மாற்றங்களை எதிர்நோக்குவதற்காக எப்போதும் தயாராக இருத்தல் வேண்டும். கோதாரி ஆணைக் குழு (1966) எடுத்துக் காட்டுவதற்கு அமைய **கல்வியை சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கான பிரதானமான உபகரணமாகப் பயன்படுத்துதல்** வேண்டும். எனவே அது நீண்ட கால தேசிய எதிர்பார்ப்புக்களிலும், அது எதிர்நோக்கும் குறுகியகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களிலும் தொடர்பு கொள்ளல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. விசேடமாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இந்நிலைமையைக் கட்டாயமாகப் பேணிவர வேண்டியது அவசிமாகின்றது. இலங்கையின் ஐந்தாண்டுத்திட்டத்திலும் கல்வியானது சமூக மாற்றங்களுக்கு அமைவனவாக இருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்வியானது பொருளாதாரத்தின் பயன்படுதன்மையை அதிகரிக்கும் வண்ணம் நாட்டின் மனிதவளங்களை விருத்தி செய்வதற்கான முதலீடாகக் கருதுதல் வேண்டும் எனவும், கல்வியைப் பெறுவதன் பயனாகக் தோன்றும் தனியாள்கள் பெறும் திறன்களும், கருத்துக்களும், எதிர்பார்ப்புக்களும் நிலவும் சமூக, பொருளாதாரச் சுற்றாடலுடன் பொருந்துவனவாக அமைதல் வேண்டும் என்பதும் அதில் குறிபிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களும் சமூக மாற்றங்களுக்கான அடிப்படையாக அமைந்துள்ளமை தெளிவாகின்றது. இற்றைக்கு ஏறத்தாழப் 10 வருடங்களுக்கு முன்னர் சமூகத்தில் முக்கிய இடம் கிடைக்கப்பெற்ற தொழில்களுக்கான கேள்வி தற்போது மிக மிகக் குறைவடைந்துள்ள அதேவேளை புதிய தொழினுட்பப் பிரிவுகளைச் சேர்ந்த தொழில்கள் ஒரு முன்னுரிமை பெற்றுள்ளன. நகரமயமாக்கமும் தொழினுட்பமயமாக்கலும் துரிதப்படுத்தப்பட்டமையினால் மக்கள் பல்வேறு சமூக வசதிகளையும், தடைகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இலங்கையில் அண்மைக் காலந்தொட்டு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையானது பல்வேறு சமூக மாற்றங்களுக்கான அடிப்படையாக அமைந்துள்ள வித்த்தை ஆய்ந்தறிய முயற்சி செய்யுங்கள். அவ்வாறான மாற்றங்களைச் சமூகத்துக்கு உகப்பான நிலைமைக்கு மாற்றியமைப்பதற்காகக் கல்வித்துறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை இலங்கையுடன் தொடர்புடையதாகக் கவனிக்க முயற்சிப்போம்.

ஏகாதிபத்திய யுகத்தில் இலங்கைப் பாடசாலைகளில் பாடவிதானம் வெள்ளை கழுத்துப்பட்டிகைத்தொழில்களில் தனியாள்களைப் பயிற்றுவிப்பதிலேயே கவனஞ் செலுத்தியது. எனினும் சுதந்திரம் கிடைத்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகளில் தேசியத் தேவைகளைக் கவனத்திற் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொள்கை சார்ந்த பிரிவில் கூடிய கவனஞ் செலுத்திய பாடவிதானம் படிப்படியாக, செயன்முறைசார்ந்த பாடவிதானமாக மாற்றமடைந்தமையால், மூளையை மாத்திரம் பயன்படுத்தும் தனியாள்கள் மட்டுமின்றி கைகளைப் பயன்படுத்தும் திறனைக் கொண்ட தனியாள்களும் தோற்றுவிக்கப்பட்டனர். தேசிய பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்துவதில் அவர்களின் தேவை உணரப்பட்டமையே இதற்கான காரணமாக அமைந்தது. 1972 இல் ஏற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவாக பாடசாலைப் பாட விதானத்திலும் மதிப்பீட்டு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. புதிய மாற்றங்கள் தொடர்பான முன்னோடிகளாகத் தொழிற்படக்கூடிய தனியாள்களிடத்தே வளர்க்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களைத் திட்டமிடும் பொருட்டுப் பல்கலைக்கழகக் கல்வி கூட மாற்றி மைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். புதியதொரு பாடமாகச் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட சமூகக்கல்விப் பாடத்துடன் தொடர்புடைய திறன்கள், அறிவு, மனப்பாங்குகள் ஆகியவற்றை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகப் பல்கலைக்கழகங்களின் ஊடாக சமூகக்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் பெருந்தொகையினர் தோற்றுவிக்கப்பட்டனர். பலவருடங்கள் கழிந்ததன் பின்னர், சமூகக்கல்விப் பாடத்தைக் கற்பிப்பதற்கான திறமைகளை வளர்த்துக் கொண்டோர் மேலதிகமாகக் காணப்பட்டமை தெரியவந்தது. அச்சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யயப்பட்ட அபிவிருத்தி, மதிப்பீட்டு முகாமைத்துவ பாடநெறிகளில் கூட சில காலங்களின் பின்னர் மேலதிக நிலை காணப்பட்டது. இவ்வாறாகக் குறுகிய காலத்துடன் சமூகத்தில் தோன்றிய தேவைகளுக்கு அமைய அவ்வப்போது திடீர் திடீரெனக் கல்வியில் ஏற்படுத்தப்பப்பட்ட மாற்றங்கள் சமூகத்துள் அனுகூலமான பெறு பேறுகளையும் பிரதிகூலமான பெறுபேறுகளையும் ஏற்படுத்தும். பெரும்பாலும் கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்திவிட்ட மாத்திரத்திலேயே புது உற்பத்திகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பது கடினமானதாகும்.

கல்விக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் நீண்டகால பெறுபேறுகளை பெற்றுத்தருகின்றமையால் நாட்டினுள் ஏற்படும் பொருளாதார மாற்றங்களுக்கு அமையத் தோன்றும் உழைப்பாளிகள் காலங்கடந்த திறமைகளை உரிமையாக்கிக் கொள்வதால் சமூகத்தினால் நிராகரிக்கப்படக் கூடிய நிலைமையும் ஏற்படலாம். இன்று கல்வியின் ஊடாக ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் இலக்கு, இன்றைய சமூகத் தேவைகளுடன் பொருந்துவது மாத்திரமாக அமைந்துவிடமாட்டாது. அடுத்த 10 அல்லது 15 வருடகாலத் தேவைகளுடன் அவை இணங்குதல் வேண்டும். சமூகத்துள் மாற்றம் ஏற்பட்டவுடன் கல்வி முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முற்படுதலானது. சிக்கலான நிலைமையைத் தோற்றுவிக்க எதுவாக அமையவும் கூடும். வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைக்கப் பெற்றமையால் இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்த பயிற்றப்பட்ட உழைப்பாளிகளும், பயிற்றப்படாத உழைப்பாளிகளும் கூட வெளிநாட்டுத் தொழில்களை நாடிச் சென்றமையால் ஏற்பட்ட மாற்றங்கள் கல்வியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு உகப்பான விதத்தில் பங்களிப்புச் செய்வதில்லை. வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவ அறிவைப் பெற்ற இலங்கையர்கள் கூட இன்று தாய் நாட்டினை வளங்கொளிக்கச்செய்யும் நோக்குடன் சேவையாற்றுகின்றனர் எனக் கூறி விடமுடியாது. எமது அவ்வாறான தேவைகளுக்காக, வெளிநாட்டு நிபுணர்களை நம்பியிருக்க வேண்டியநிலை ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்ததொரு விடயமாகும்.

தொழிற் புரட்சியானது உலகின் பல நாடுகளில் பாரிய சமூக மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு திருப்பு முனையாகும். எனவே மனிதன் பயன்படுத்திய உபகரணங்களின் தன்மை, தொழில்களின் தன்மை, நுகர்வுக் கோலங்கள், விளையாட்டுக்கள், பொழுது போக்கு நடவடிக்கைகள் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் புரட்சிகரமாற்றங்கள் இடம் பெற்றன. அவ்வாறான மாற்றங்களின் தாக்ககம் சமூகத்தின் ஒவ்வொரு தனியாளின் மீதும் பல்வேறு விதங்களில் பங்களிப்புச் செய்துள்ளமையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. கைத்தொழிற் புரட்சியின் பெறுபேறாக இன்று ஆசிரியருக்குப் பதிலாகக் கணனிப் பொறி ஆசிரியரின் இடத்தைப் பெற்றுக் கருமமாற்றும் நிலை தோன்றியுள்ளது. வகுப்பறையானது கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு அத்தியாவசியமான ஒரு இடமாகும் எனும் நிலை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது தற்போது தெளிவாகியுள்ளது. சமூகத்தில் ஏற்படும் இவ்வாறான பல்வேறுபட்ட மாற்றங்கள் கல்வியின் பால், உகப்பான விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை தெளிவாகின்றது. தொழினுட்பத்தின் பெறுபேறாக மக்களிடத்தே கூடியளவு ஓய்வு கிடைக்கப் பெற்ற போதிலும் தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களின் பால் கூடுதலான விருப்பு காணப்படுகின்றமையால் கல்வி தொடர்பாக ஈடுபடுத்தக் கூடிய நேரம் வரையறைப்படுத்தப்பட்டுள்ளது. கல்விப் பாடவிதானங்கள் பெருமளவில் பொறிமுறை உலகின்பால் ஈர்க்கப்பட்டுள்ளமையால் மக்களிடத்தே காணப்படும் விழுமியங்கள், அறநெறிகள் படிப்படியாகச் சீர்க்குலைந்து செல்கின்றமையாவரும் அறிந்த உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சார்ந்த விடயங்களும், பெருமளவுக்கு சமூக மாற்றங்கள் இடம் பெறுவதற்கான அடிப்படையாக அமைந்துள்ளமைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. ரூசிய ஒக்டோபர் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட புதிய இணக்கங்களுக்கு அமைவான சமூகத்தைக் கட்டியெழுப்பும் அரிய பொறுப்பு கல்வியிடம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட புதிய நிலைமையை உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு ரூசிய மக்களின் எழுத்தறிவு உயர் மட்டத்தில் காணப்படவில்லை. எனவே சிறப்பான கம்யூனிச மனிதனைத் தோற்றுவிக்க வேண்டும் எனும் அடிப்படை நோக்கத்துடன் கல்வி முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலையை ரூசியா எதிர் நோக்கியது. எனவே மனித வளங்களை உச்ச அளவில் அபிவிருத்தி செய்து அவற்றின் பயன்கள் ஒவ்வொருவரிடத்தேயும் சம அளவில் பகிர்ந்து செல்லும் வண்ணம் தனியாளின் சக்திகளையும், திறன்களையும் உச்ச அளவில் அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும் வண்ணம் அதன் கல்வி மாற்றியமைக்கப்பட்டது. ரூசியாவின் நிலைமை அவ்வாறானதாக இருப்பினும், கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லவேக்கியா போன்ற நாடுகளில் பொதுவுடைமைக் கூட்டரசுகள் அமைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நாடுகளைச் சேர்ந்த மக்களின் எழுத்தறிவு ஏறத்தாழ 100% மாக இருந்தது. எனவே தோன்றிய சமூக மாற்றத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் மக்களை ஈர்ப்பதற்காக கல்வியின் ஊடாக, புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயமானதொரு தேவையாக அமையவில்லை என்பது தெளிவாகின்றது.

சனநாயக நாடுகளிலும் கூட கல்வியின் ஊடாக, முழுச் சமூகத்துக்கும் நன்மை கிடைக்கப்பெறுகின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக, ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரம் பெற்ற பெரும்பாலான நாடுகள் சனநாயகத்துக்கு மதிப்பளித்து சுதந்திரத்தை அனுபவிப்பதற்காக ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகக் கல்வியிலும் மாற்றங்களை ஏற்படுத்தினர். சனநாயகம் வேரூன்ற முன்னர் கல்வியானது ஒரு சிலருக்கு மட்டுமே உரித்தாகக் காணப்பட்ட ஒரு வரப்பிரசாதமாக இருந்த போதிலும் சனநாயகத்தின் மூலம் கல்வியானது முற்று முழுதான மனித இனத்தினதும் உரிமையாக மாற்றப்பட்டது. சமவாய்ப்பு வழங்குதல், இலவசக்கல்வி, தாய்மொழி மூலம் கல்வி, போன்ற வழிவகைகளின் மூலம் சமூக வேறுபாட்டைக் குறைப்பதற்காக சுதந்திரம் பெற்ற நாடுகள் முயற்சித்தன. எனினும் சனநாயக நாடுகளில் காலத்துக் காலம் தோன்றும் நிருவாக அதிகார மாற்றங்கள் கல்வியின்பால் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். ஆட்சியிலிருந்த கட்சியினால் அமுற்படுத்தப்பட்ட கல்விக் கொள்கைகள், அடுத்து ஆட்சிக்கு வரும் கட்சியினால் ஆய்ந்தோய்ந்து பாராது மாற்றப்படின் அவ்வாறான மாற்றங்களால் மாணவர்கள் நசுக்குண்டு வழிதவறிச் செல்ல வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

சமூக மாற்றங்கள் இடையீடின்றி ஏற்படுகின்றமையால் கல்வியில் ஏற்படும் மாற்றங்களும், தொடர்ச்சியான செயற்பாடாக அமைதல் வேண்டும். மார்கிரட் மீட் என்பவரின் கூற்றுக்கு அமைய அறியப்படாத நாளைய உலகுக்கு உகந்த தனியாள்களை ஏற்படுத்துவதே எமது பொறுப்பாகும். எனவே கல்வியானது, தற்கால சமூகத் தேவைகளை மட்டுமன்றி, எதிர்கால போக்குகளையும் கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும். சமுதாயத்தில் கல்வி பரவிச் செல்லும் வேகத்தைக் கவனிக்கையில், அடுத்த வருடத்துக்கு எவ்வாறான கல்வி தேவைப்படும் என்பதைக் கூட நிச்சயித்துக் கூற முடியாதுள்ளது. சமூகம் விரைவாக மாற்றமடைந்தவுடன் அம்மாற்றங்கள் காரணமாகத் தோன்றும் சுற்றாடல் பெரும்பாலும் சமனற்ற தன்மையையே கொண்டிருக்கும். அவ்வாறான சுற்றாடலில் முரண்பாடுகள் அதிகரிக்கும். எனவே சமூகத்தை மீண்டும் சமநிலைப் படுத் துவதற்காகக் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. எனவே ஒவ்வொரு கல்வி மாற்றத்தினதும் பின்னணியில், கல்வியில் சிறிய மாற்றமேனும் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறின்றேல், கல்விக்கும் சமூகத்துக்கும் இடையே நிலவ வேண்டிய தொடர்பைத் துண்டிக்கப்படாது பேணுவது கடினமாகின்றது. இதனால் முறைசார் கல்விபொருளற்றதாக மாறுவதோடு, சமூகத்தில் பாடசாலையை விமர்சிக்கும் நிலையும் ஏற்படும். **எனவே கல்விக் கருமத்தை இடையீடின்றிச் செயற்படுத்துவதற்காக** அதனைச் சமூக மாற்றங்களுக்கு இயைபுடையதாக அமுற்படுத்த வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு : I**

1. இலங்கையில் சமூக மாற்றங்களுக்கு அமையக் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணையில் புகுத்துக.

| மாற்றங்கள் ஏற்பட்ட வருடம் | பாடவிதானத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | அடிப்படையாக அமைந்த சமூக மாற்றங்கள் |
|---|---|---|
| | | |

2. சமூக மாற்றங்கள் ஒவ்வொன்றும் கல்வியின் பால் சாதகமான விதத்தில் தாக்கம் விளைவிக்கும் எனக் கூறிவிட முடியாது. இலங்கையில் நிலவுகின்ற, நிலவிய நிலைமைகளை உதாரணங்காட்டி இது தொடர்பான விடயங்களைச் சேகரிக்க.

3. 1981 வெள்ளை அறிக்கை அமுற்படுத்தப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த சமூக மாற்றங்களையும் வெள்ளைஅறிக்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சமூக மாற்றங்களையும் பட்டியற்படுத்துக.

4. 1. உங்களது பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் நிகழும் சமூக மாற்றங்களை இனங்காண்க.
   2. அம்மாற்றங்களுக்கும், கல்விக்கும் இடையேயான தொடர்பு கட்டியெழுப்பப்பட வேண்டிய விதத்தைத் திட்டமிடுக.
   3. அத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகத் தற்போதைய கல்வி முறையின் ஊடாகக் கிடைக்கப் பெறும், வாய்ப்புக்களைக் கணிப்பிடுக.
   4. மாற்றமடையும் உலகுடன் சரிசமனாக வீறுநடைபோடுவதற்காகத் தற்கால இலங்கை ஆசிரியருக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புக்களைத் தேடியறிக.

## 4.3 சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு கருவி - கல்வி

நாட்டில் நிலவும் கல்வி முறைமையினால் எதிர்பார்க்கப்படும் முக்கியமானதொரு கருமம், கலாசார, பாரம்பரிய திறன்களை இளஞ் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுப்பதாகும். வளர்ந்தோர் சந்ததியிடம் காணப்படும் அறநெறிகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் போன்றவற்றை முற்றுமுழுதாக பெற்றுக் கொடுப்பின் எமது வளர்ந்தோர்கள் கொண்டிருந்தவை அனைத்தும் உரியவாறாகவே எமக்குக் கிடைத்திருத்தல் வேண்டும். எனினும் **அக்கலாசாரப் பண்புகளை ஒப்படைக்கையில் கல்வியின் மூலமாக அவை ஒரு குறித்த அளவுக்கு மெருகூட்டப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன.** அவ்வாறாயின் சமூக மாற்றங்களுக்கு அமையக் கல்வி இயைபாக்கமடைவதோடு சமூகமாற்றங்களை ஏற்படுத்துகையில், கல்வியானது முக்கிய பங்கேற்றுக் கருமமாற்ற வேண்டிய நிலையும் ஏற்படுகின்றமை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியதொன்றாகும். சமூக மாற்றங்களை ஏற்படுத்துகையில் கல்வியை முன்வைக்க வேண்டிய தேவையை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் பெரும்பாலானவை உணர்ந்து கொண்டுள்ளன என்பது அவர்கள் அமுற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவினது கோதாரி ஆணைக்குழு (1964 – 66) சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதர்காகப் பிரயோகிக்க வேண்டிய முக்கியமான உபகரணம் கல்வியாகும் எனக் கருதியுள்ளது. கல்வியைச் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கான பிரதானமான உபகரணமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளமையால், அதனை, நீண்டகால பிரச்சினைகளுடனும் தேசிய அபிவிருத்தியில் பங்கேற்றுள்ள வேலைத்திட்டங்களுடனும் தொடர்புபட்டிருத்தல் வேண்டும். சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் கல்வியின் வலிமையை மேன்மேலும் எடுத்துக்காட்டும் அவ்வாணைக்குழு உற்பத்தி அதிகரிக்குமாறும், சமூக, பொருளாதார, ஒன்றிணைப்பு உறுதிப்படுத்தப்படுமாறும், புத்தாக்கக் கருமத்தொடர் துரிதப்படுத்தப்படுமாறும் சமூக அறநெறிகள், ஆன்மீக அறநெறிகள் ஆகியவற்றைப் பரப்பி, ஒழுக்க அபிவிருத்திக்கு ஏற்படுத்த முயற்சிக்குமாறும், கல்வியை வளர்க்க வேண்டும் எனக் காட்டியுள்ளது. கல்வியின் ஊடாகச் சமூக அபிவிருத்தி ஏற்படுகின்றது எனும் நம்பிக்கை நிலவியமையையே இது காட்டுகின்றது.

சோவியத் நாட்டிலும் கலாசாரப் புரட்சியின் பின்னர் பண்டைய முதலாளித்துச் சமூகத்தில் காணப்பட்ட ஒழுக்கநெறிக்கோவையை வேரோடுகளைந்து, புதிய பொதுவுடைமைச் சமூகத்துக்கு உகந்த அறநெறிக்கோவையொன்றினை ஆக்கும் பொறுப்பு பாடசாலைகளிடமே ஒப்படைக்கப்பட்டது. சமூகத்தில் நிலவும் குறிக்கோள்கள், அறநெறிகள் என்பனமாத்திரமன்றி, சமூகத்தின் நுட்ப கருமங்களைக் கூட மாற்றும் தன்மை கல்விக்கு உண்டு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. பொருள்சார்ந்த, தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் புதுமையாக்கத்தை ஊக்குவித்தல் கல்விமுறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கருமமாகும் என ஒவிவ் பேன்க்ஸ் (1968) என்பவர் எடுத்துக்காட்டுகின்றார். **மரபுரீதியான மனப்பாங்குகளை மாற்றிப் புதுமையாக்கத்துக்கு வழி கோலுவதும், மாற்றமடைவதில்காட்டும் வகுப்பின்மையைக் குறைப்பதும் கல்வியின் ஊடாக ஏற்படுத்தப்படவேண்டுமெனக் கூறும் அவர் சமூகப்பயணத்தை ஏற்படுத்துவதற்கும், கற்றோரை மீறிப் புதுப் புதுக் கற்றோர் தோன்றுவதற்கும் கல்வியே துண்டுதலளித்தல்** வேண்டும் எனவும் எடுத்துக் காட்டுகின்றார். மாற்றத்தை ஏற்படுத்துகின்ற கல்வி எனும் கருவியின் ஊடாகவே, கைத்தொழிற்புரட்சியின் பங்களிப்பை உலகு பெறக்கூடியதாக இருந்தது. சுருக்கமாகக் குறிப்பிடின் நவீன தொழினுட்ப உலகின் முன்னோக்கிய பயணம் அதாவது உலகம் மாற்றமடையும் வேகம், கல்விமுறையின் மீதே தங்கியுள்ளது.

நாடு பொருளாதார சுபீட்ச நிலையை அடையும் போதே கல்வி வளர்ச்சி ஏற்படுகின்றது. அவ்வாறே, மனநிறைவுடைய மக்களைத் தோற்றுவிப்பதில் கல்வியின் பங்கு மிகப் பெரியதாகும். இந்நம்பிக்கை காரணமாக, அபிவிருத்தியடைந்த நாடுகளிலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் கூட பெருமளவு பணம் கல்விக்காகச் செலவு செய்யப்படுகின்றது. கல்வித் தொகுதியின் ஊடாகப் புதுமையாக்கத்தின் பிடிக்குள்ள ஒரு நாட்டுக்கான சிறந்த உதாரணமாக யப்பானைக் குறிப்பிடலாம்.

* 1964 கல்வி வெள்ளை அறிக்கையின் மூலம் பாடசாலைகளில் வேலைப் பயிற்சியை அளித்தல்.

* 1972 கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமையத் தொழில் முன்னிலைப் பாடத்தைப் பாடசாலை பாடவிதானத்துடன் சேர்த்தல் என்பன அவ்வாறான இரு மாற்றங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை சார்ந்த அறிவை மாத்தரம் பெறும் மாணவர்களை பிரதேசத்துக்கும் நாட்டுக்கும் தேவையான திறமைகளைக் கொண்ட பிரசைகளாக மாற்ற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாக அமைந்தது. ஏகாதி பத்திய நிருவாகம் நிலவிய காலப்பகுதி தொடக்கம், நீண்ட காலம் வரைக்கும் எமது நாட்டுக் கல்வியானது, மனது விரும்பும் தொழில்களின் மீதே கூடிய கவனத்தைச் செலுத்தியது.

சுதந்திரம் பெற்றதன் பின்னர் கல்வியானது தேசியத் தேவைகளுக்கு அமைவான திறன்களை விருத்தி செய்து கொண்ட தனியாள்களைத் தோற்றுவிப்பதில் கவனஞ் செலுத்தியமையால் சமூக மாற்றத்துக்கான அடித்தளம் இடப்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட அம்மாற்றங்களின் ஊடாக, இன்று, வெண்கழுத்துப்பட்டைத் தொழில்களுக்கு மட்டுமன்றி தொழினுட்ப உலகுடன் தொடர்புடைய பல வித தொழில்களுக்கும் கேள்வி நிலவுகின்றது. நாட்டில், நிலவும், பொருளாதார, சமூகத் தேவைகளுக்கும் கல்வியின் மூலம் ஏற்படுத்தப்படும் திறன்களுக்கும் இடையே இணக்கம் காணப்படாவிடின் அதன் காரணமாகப் பல முரண்பாடுகள் தோன்றக் கூடும். எனவே சமூகத்துடன் இணங்குமாறு கல்வியும், கல்வியின் ஊடாகச் சமூகமும் இயைபாக்கமடைதல் வேண்டும். இத்தொடர்புகளின் ஆரம்பம் எது? முடிவு எது? எனக் குறித்துக் கூற முடியாத அளவுக்குக் கல்வியும் சமூகமும் ஒன்றுடனொன்று பிணைந்துள்ளன. எனவே கல்வி, சில வேளைகளில் சமூக மாற்றங்களுக்கு அமைவதாகவும் இயைபாக்கமடைதல் வேண்டும்.

## 5.0 சாராம்சம்

கல்விக்கும், சமூக மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்பை இருவிதங்களில் பகுப்பாய்வு செய்யலாம் .......... கல்வி, சமூக மாற்றங்களுக்கு அமைய இயைபாக்கமடைய வேண்டுமென்பதும், கல்வியின் ஊடாகச் சமூக மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதுமே அவ்விருகருத்துக்களுமாகும். சமூக மாற்றங்கள் இடையீடின்றி ஏற்படுகின்றமையால், அம் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமோ ஏற்பட்ட மாற்றத்தைச் சமூகத்துக்கு அனுகூலமான விதத்தில் பரப்புவதிலோ பங்கு கொள்ளல் வேண்டும்.

## 6.0 பிற்சோதனை

1. கீழே தரப்பட்டுள்ள சொற்பட்டியலிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

   (1) யாதேனும் சமூகத்துள் இடையீடின்றி நிகழும் மாற்றங்களை அச் சமூகத்தின் .................................... தன்மை எனக் கூறலாம்.

   (2) துரித சமூக மாற்றம் ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்துக்கான உதாரணமாகும் .................................... எனக்குறிப்பிடலாம்.

   (3) .................................... சமூக மாற்றங்கள் சமூகத்தின் மீது பிரதிகூலமான விளைவுகளை ஏற்படுத்திய ஒரு சந்தர்ப்பத்தினை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சமூக மாற்றங்களின் போது பெரும்பாலும், மாற்றங்களுக்கு இயை பாக்கமடையக்கூடிய தனிநபர்களுக்கும் ................................ கருத்துக்களைக் கொண்ட தனிநபர்களுக்கும் இடையிலேயே மோதல்கள் ஏற்படும்.

(5) சமூக மாற்றங்களின் போது தோன்றும் சமனின்மைகளை ஈடு செய்யும் பிரதானமான ஊடகம் ................................ ஆகும்.

**சொற்பட்டியல்**

கல்வி, மரபுரீதியான, ஜேர்மனியில் ஹிற்லர் ஆட்சிக் காலத்தைச், இயக்க, ரூசியப் புரட்சி.

**2.** 1. 1972 கல்விச் சீர்திருத்தம் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணம்.

(i) தொழில்களைப் பெற்றுக் கொள்கையில், விஞ்ஞானம் கற்றோருக்குக் கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டமையேயாகும்.

(ii) நாட்டின் ஒவ்வொரு பாடசாலையிலும் பொதுபாடவிதானமொன்றினைக் கற்பிக்க வேண்டுமென்பதாலாகும்.

(iii) நவீன உலகில் அன்றாட வாழ்க்கைக்கு விஞ்ஞான அறிவு இன்றியமையாததொன்றாகக் காணப்பட்டமையாகும்.

(iv) ஒவ்வொரு மாணவ மாணவிக்கும், வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ மாறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதனாலாகும்.

2. "பாடசாலையானது சமூகத்தினால் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை ஆற்றாத ஒரு நிறுவனமாக மாறிவருகின்றது" எனும் குற்றச்சாட்டு அண்மைக் காலங்களில் பாடசாலையின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கருதப்படுவது

(i) பாடசாலை சமூக விரோத நிறுவனமாகச் செயற்படுகின்றது என்பதாகும்.

(ii) பாடசாலை சமூக மாற்றங்களுக்கு அமைய இயைபாக்கமடைய முடியாத நிலையில் காணப்படுகின்றது என்பதாகும்.

(iii) கற்றல் கற்பித்தல் கருமத்தைப் பாடசாலை வெற்றிகரமாக நிறைவேற்றவில்லை என்பதாகும்.

(iv) கல்வி சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு சக்தியாகத் தொழிற்படுவதில்லை என்பதாகும்.

3. "அறியப்படாத ஓர் உலகுக்குப் பொருத்தமான தனியாள்களை உருவாக்க வேண்டுமென்பதே கல்வி முறையின் மூலம் நாம் இன்று எதிர்பார்ப்பதாகும்" இக்கருத்தை வெளியிட்டவர்,

(i) மார்கிரற் மீட் ஆவார்.
(ii) பி. டபிள்யூ மஸ்கிரேவ் ஆவார்.
(iii) ஒலிவர் பேன்க்ஸ் ஆவார்.
(iv) ஏ. கே. ஸீ. ஒட்டாவே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சமூகத்தில் பொருள்சார்ந்த, தொழிநுட்பம் சார்ந்த துறைகளில் புதுமையினை ஊக்குவித்தல், கல்வி முறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு கருமமாகும். இங்கு,

(i) சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணங்கவே கல்வி முறை இயைபாக்கமடைதல் வேண்டும்.
(ii) பாடசாலையுள் புதிய தொழிநுட்பப் பாடங்கள் இயன்ற அளவுக்கு அதிகமாகக் கற்பிக்கப்படல் வேண்டும்.
(iii) கல்வி முறையில், கொள்கை சார்ந்த பாடங்களை விடக் கூடுதலான வாய்ப்பை விஞ்ஞானத்துக்கும், தொழிநுட்பப் பாடங்களுக்கும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
(iv) சமூகப் பொருத்தப்பாட்டுக்குத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றைக் கொண்ட தனியாள்களைக் கல்வி முறையின் ஊடாகத் தோற்றுவித்தல் வேண்டும்.

## 7.0 விடைகள்

(1) 1. இயக்க 2. ரூசியப் புரட்சி
3. ஜேர்மனியில் ஹிற்லர் ஆட்சிக் காலத்தில்
4. மரபுரீதியான 5. கல்வி

(2) 3 (3) 3

(4) 1 (5) 4

## 8.0 ஒப்படைகள்

1. தொழினுட்ப உலகில் துரித மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகக் கல்வி எவ்வாறு உறுதுணை புரிய முடியுமெனக் கலந்துரையாடுக.

2. இலங்கையில் சமூக மாற்றங்களின் ஊடாகக் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக.

(1) பாடசாலை அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்
(2) பாடவிதானத்தினத்திலும் கற்பித்தல் முறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள்.
(3) கல்வி நிருபாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

3. பாடசாலைக் கொத்தணி முறைமை, பாடசாலையோடிணைந்த சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் தாக்கம் விளைவித்த விதத்தை விபரிக்க.

4. சமூக மாற்றங்கள் கல்வியில் பிரதிகூலமான விதத்தில் தாக்கம் விளைவித்த சந்தர்ப்பங்களை விபரமாகச் சமர்ப்பிக்க.

5. சமூக மாற்றங்களுக்கு அமைவான கல்வி மாற்றங்களைப் பாடசாலையினுள் அமுற்படுத்தும் போது ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச்சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| 1. இசைவாக்கம் | - | Adaptation |
| 2. மனப்பாங்கு | - | Attitude |
| 3. கைத்தொழில்மயமாக்கல் | - | Industrialization |
| 4. திறன்கள் | - | Skills |
| 5. இயக்க | - | Dynamic |
| 6. நகரமயமாக்கம் | - | Urbanization |
| 7. தொழினுட்பம் | - | Technology |
| 8. அறிவு | - | Knowledge |
| 9. நியமங்கள் | - | Norms |
| 10. சமூக மாற்றங்கள் | - | Social Changes |
| 11. சமூகப் புரட்சி | - | Social Revolution |
| 12. எழுத்தறிவு | - | Literacy |
| 13. விழுமியங்கள் | - | Values |

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


1. King E. J. The Education and Social Change - 1969.
2. Musgrave. P. W. The Sociology of Education - 1983.
3. Kothari Report. Report of the Education - 1964 - 1966.
4. Ottaway. A. K. C. Education and Society. P 51.
5. Bant Olive. Sociology of Education B. T. Batsford Ltd. London First Edition 1968 . P. 201
6. இலங்கை ஐந்தாண்டுத்திட்டம் – 1972 – 76 திட்டமிடல் அமைச்சு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராம் அத்தியாயம்
# சமூகவியல் ஆராய்ச்சி முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பக்கம்


1.0 அறிமுகம் ........ 87

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 87

3.0 முற்சோதனை ........ 87

4.0 சமூகவியல் ஆராய்ச்சி முறைகள் ........ 88

4.1 விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சி முறையின் அடிப்படை இயல்புகள் ........ 88

4.2 விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சி முறையின் அடிப்படை நுட்பங்களும் அடிப்படைப் படிமுறைகளும் ........ 89

4.3 தரவு சேகரிக்கும் முறைகள் ........ 94

4.4 தனியாள் ஆய்வு முறை (Case Study) ........ 99

5.0 சாராம்சம் ........ 107

6.0 பிற்சோதனை ........ 107

7.0 விடைகள் ........ 108

8.0 ஒப்படைகள் ........ 108

9.0 கலைச்சொற்றொகுதி ........ 109

10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் ........ 109




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

இதுவரையில் உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அத்தியாயங்கள் மூலம் கல்வியில் தாக்கம் விளைவிக்கும் சமூக சந்தர்ப்பங்கள், சுற்றாடல்கள் ஆகிய பிரச்சினைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான சமூகவியல் சார்ந்த விடயங்களைக் கற்கையில் கையளாப்படும் பல்வேறு நுட்பங்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். ஏனைய விஞ்ஞானத்துறைகளைப் போன்றே சமூகவியலிலும் விடயங்களைக் கற்கும்போது குறித்த விஞ்ஞான பூர்வ பரிசோதனை முறையொன்று கையாளப்படுகின்றது. ஆய்வு செய்யப்படும் விடயங்களின் புறவயத் தன்மை (Obectivity)யைக் காத்து கோடலை (Bias)க் குறைப்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். விஞ்ஞான முறையின் மூலம், அறியப்படாதவற்றை ஆராய்ந்தறிவதற்காக சிட்டைகள் எதும் வழுங்கப்படுவதில்லை. விஞ்ஞான முறையின் சில பண்புகளே வழுங்கப்படுகின்றன, இவ்வத்தியாயத்தின் முதற் பகுதியில் விஞ்ஞான முறையின் அடிப்படை இயல்புகள் முன்வைக்கப்படுகின்றன. பின்னர் பல்வேறு ஆராய்ச்சி முறைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

* விஞ்ஞான முறையின் முக்கிய இயல்புகளை விளங்கிக் கொள்வர்.
* விஞ்ஞான பூர்வ அவதானிப்பு எனும் எண்ணக்கரு தொடர்பான, தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.
* கல்வி ரீதியிலும், சமூக ரீதியிலும் முக்கியத்துவம் பெறும் பிரச்சினையொன்றினை விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து, அதனை முறையாகத் தயார்ப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வர்.
* தகவல்களைச் சேகரிக்கையில், வினாக்கொத்தொன்றினைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் விதத்தை விளங்கிக் கொள்வர்.
* சோதனை முறையாக நேர்முகக் கலந்துரையாடல் முறையைப் பயன்படுத்துவதற்கான அளவு கோலொன்றினைத் தயார்ப்படுத்திக் கொள்வது தொடர்பான அடிப்படை அறிவைப் பெறுவர்.
* தனியாள் ஆய்வு நடத்துவது தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

# 3.0 முற்சோதனை

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. விஞ்ஞான முறை எனும் எண்ணக்கருவினால் நீங்கள் கருதுவது யாது எனக் குறிப்பிடுக.

2. பாடசாலை மாணவனொருவன் / ஒரு மாணவர் குழு / ஒரு சமூதாயம் தொடர்பாக யாதேனும் ஆய்வொன்றுக்குத் தேவையான தகவல்களை நீங்கள் சேகரித்துக் கொள்ளும் முறைகளைத் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீங்கள் கற்பிக்கும் யாதேனுமொரு வகுப்பு மாணவர்களின் சமூகப் பின்னணி பற்றிய வினாக்கொத்தொன்றினைத் தயாரிப்படுத்தும் போது, விசேடமாக நீங்கள் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்களைக் கோவைப்படுத்துக.

4. பாடசாலையின் யாதேனும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைச் சேர்க்க வேண்டிய தேவை ஏற்படின் வினாக்கொத்து நேர்முகக் கலந்துரையாடல் ஆகிய முறைகளுள் எதனை நீங்கள் தெரிவு செய்து கொள்வீர்கள்? உங்களது முடிவுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் யாவை?

# 4.0 சமூகவியல் ஆராய்ச்சி முறைகள்

## 4.1 விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சி முறையின் அடிப்படை இயல்புகள்

ஏறத்தாழ கடந்த மூன்று நூற்றாண்டு காலத்துள் விஞ்ஞான அறிவு இயற்கை உலகில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளது. அண்மைக் காலத்தில் விஞ்ஞானம் மனிதனின் சமூக உலகின் தகவல்களை வெளியிடுவ தொன்றாக அமைந்துள்ளது. தற்கால உலகில் காணப்படும் அறிவுப் பிரவாகம் மனிதன் விஞ்ஞான முறையைப் பிரயோகித்தமையால் ஏற்பட்ட தொன்றாகும் ......... விஞ்ஞான முறையின் முக்கியமான பண்புகள் யாவை என இனி நாம் கவனிப்போம்.

### 1. சரிபார்க்கக் கூடிய சான்று (Verifiable Evidence)

விஞ்ஞான அறிவு சரிபார்க்கக் கூடிய சான்று மீதே எப்போதும் தங்கியுள்ளது. உறுதியாக அவதானிக்கூடிய தோற்றங்களே இங்கு "சான்று" என்பதால் கருதப்படுவதாகும். இவ்வவதானிப்புக்களை அளப்பதற்கோ மீண்டும் போதிப்பதற்கோ ஏனைய அவதானிப்பாளர்களுக்கு அவகாசம் இருத்தல் வேண்டும். விஞ்ஞானம் பொதுவாக சரிபார்க்கக்கூடிய சான்றுகளின் மீதே தங்கியுள்ளமையினால், அவ்வாறான தகவல்களை வழங்கும் விடயங்கள் பற்றி மட்டுமே விஞ்ஞானத்தினால் ஆய்வு செய்ய முடியும். எனவே அவ்வாறான தகவல்களை வழங்க முடியாத பிரச்சினைகளை விஞ்ஞான பூர்வப் பிரச்சினைகளாக நாம் கருத முடியாது. உதாரணமாக, கடவுள் ஒருவர் இருக்கின்றாரா? யாதேனும் ஒரு பொருள் ஏன் அழகாக இருக்கின்றது? போன்ற வினாக்களுக்கு சரிபார்க்கக் கூடிய சான்றுகளைத் தேடியறிய முடியாது. அவை எமக்கு எவ்வளவு முக்கியமானவையாக இருப்பினும் விஞ்ஞான முறையில் அவ்வாறான வினாக்களுக்குத் தீர்வு காண்பதற்காக உபகரணங்கள் எவையுமில்லை. யாதேனும் மதம் அல்லது தத்துவம் மூலம் மட்டுமே அவ்வாறான பிரச்சினைகளை ஆய்வு செய்ய முடியும்.

### 2. முழுவுண்மையானது எதுவும் இல்லை (No absolute truths)

விஞ்ஞான பூர்வ முடிவுகளின் மூலம் பலபல தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் அவை தொடர்பான பலவகைப்பட்ட புத்தறிவு எதிர் காலத்தில் தோன்றுவதற்கான வாய்ப்பு பெருமளவுக்குக் காணப்படுகின்றது. எனவே விஞ்ஞானம் தொடர்பாகவும் முழுமை எதுவும் காணப்படுவதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கூறிவிட முடியாது. விஞ்ஞான பூர்வ உண்மைகள் தற்காலமாகக் கருதப்படுவனவாகும். அவை மிகப் புதிய தரவுகளின் அடிப்படையில் மீண்டும் திருத்தியமைக்கப்படுகின்றன. விஞ்ஞான முறைக்கு அமைய ஒவ்வொரு முடிவும் புதிதாகத் தோன்றும் தகவல்களுக்கு அமைய மீண்டும் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.

### 3. அறநெறிகளுக்கு தொடர்பான நடு நிலைமை (Ethical Neutrality)

விஞ்ஞானத்துக்கு சில வினாக்கள் தொடர்பான விடைகளை அளிக்க முடியுமெனினும் அறநெறிகள், விழுமியங்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிட அதனால் முடியாது. சில விழுமியங்கள் ஏனையவற்றை விட உயர்வானது அல்லது பொருத்தமானது என விஞ்ஞானத்தின் மூலம் எடுத்துக்காட்ட முடியாது. உதாரணமாக, விஞ்ஞானத் தகவல்களுக்கு அமைய அதிகளவு உணவை உட்கொள்ளுவதும், புகை பிடித்தலும் சுகத்துக்குக் கேடுவிளைவிக்கும் என்பதையும், அதன் மூலம் தனியாளின் ஆயுள் குறைவடையும் எனவும் எடுத்துக் காட்டலாம். எனினும் அவ்விஞ்ஞான அறிவுக்கு அமைய இது ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய ஒரு விழுமியமாகும் என எடுத்துக்காட்டுதலோ, கட்டாயப்படுத்துதலோ இதனால் கருதப்படுவதில்லை. உண்மைத் தகவல்களைத் தேடியறிவதே விஞ்ஞானத்தினால் மேற்கொள்ளப்படும் கருமமாகும். இவ்வறிவை எவ்வாறாகப் பயன்படுத்துதல் வேண்டும் எனும் முடிவு சமூக விழுமியங்களின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே சமூகவியற் பிரச்சினைகளை ஆய்வு செய்யும் ஆராய்ச்சிகளுக்காக விஞ்ஞான முறையைப் பயன்படுத்துகையில், பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சமூக எதிர்பார்ப்புக்கள் தரவுகளின் பால் தாக்கம் விளைவிக்க இடமுண்டாகையால், அவ்வாறான ஆராய்ச்சியாளர்களுக்கு உண்மைத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படலாம். எவ்வாறாயினும் விஞ்ஞான முறையினால் ஆய்வதற்குப் பொருத்தமாற்றவையெனக் கூறக்கூடிய பிரச்சினைகள் ஒன்றும் இல்லை. மெய்ப்பிக்கக் கூடிய சாட்சிகளைத் தேடிப்பெறக் கூடிய ஒவ்வொரு பிரச்சினை தொடர்பாகவும் விஞ்ஞான முறையைப் பிரயோகிக்க முடியும்.

## 4.2 விஞ்ஞான ஆராய்ச்சி முறையின் அடிப்படை நுட்பங்களும் அடிப்படைப் படிமுறைகளும்.

### விஞ்ஞான ஆராய்ச்சி முறையின் அடிப்படை நுட்பங்கள்

### 1. அவதானம் (Observation)

இது விஞ்ஞான ஆராய்ச்சி முறையின் அடிப்படை நுட்பமுறையாகும். விஞ்ஞான பூர்வ அவதானம் என்பது யாதேனுமொன்றினைப் பார்ப்பது மாத்திரமல்ல, அவதானத்தில் அடங்கும் பல முக்கிய அம்சங்கள் உள்ளன. அவ்வாதானம் திருத்தமானதாக இருத்தல், தனது அடிப்படை அவதானத்தை மீண்டும் மீண்டும் பரீட்சித்ததன் பின்னரே ஒருவரின் அவதானம் திருத்தமானதாக அமையும். இது தவிர்ந்தவிடத்து தமது அவதானத்தை நிச்சயமாகத் திருத்தமானதாகப் பெறுதலும் அவசியமாகும். எனவே விஞ்ஞான முறையைப் பயன்படுத்தும் போது தேவையற்ற அழகிய கட்டுரைப் பாங்குகளைக் கையாளுவது அவசியமற்றதாகும். திருத்தமான அவதானிப்புகளைப் பெறுவது தொடர்பாக மற்றுமொரு முக்கிய அம்சம் ஒழுங்கு முறையாகும். விஞ்ஞான முறைக்கு அமைய, முதலில் பிரச்சினையை அறிமுகஞ் செய்து பின்னர், அது தொடர்பான தரவுகளைச் சேகரிந்துக் கொள்வதற்கான திட்டமொன்றினை ஒழுங்கமைப்புச் செய்தல் வேண்டும். ஒழுங்கான திட்டமொன்றுக்கு அமைய அவதானிப்பதன் மூலமே தகவல்களைச் சரியான விதத்தில் சேகரித்துக் கொள்ளலாம். அவ்வாறின்றேல், சேகரிக்கும் தகவல்கள் பூரணமற்றவையாயும், நம்பகத்தன்மை குறைந்தவையாயும் காணப்படலாம். இவ்விடத்தில் விசேடமாக தனியாளின் ஞாபகசக்திக்கு அமையப் பெற்றுக் கொள்ளும் தகவல்கள் தாக்கம் விளைவிக்கக்கூடியதாகும். ஆராய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாளர் தாம் அவதானித்த தகவல்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது மற்றுமொரு முக்கிய விடயமாகும். ஆய்கூடப் பரிசோதனையொன்றில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானி தாம் ஈடுபட்டுள்ள பயிற்சியின் படிமுறையையும் பதிவு செய்து கொள்வார். ஒவ்வொரு தாக்கத்தையும், எதிர்த் தாக்கத்தையும் பதிவு செய்து கொள்வதன் மூலம், அவர் கையாண்ட வழிவகைகளையும் அவர் பெற்ற முடிவுகளையும் மற்றொரு விஞ்ஞானிக்கும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே அத்தகவல்களை பற்றி மேன்மேலும் ஆராய்ச்சி செய்வதற்கும் அவற்றின் செம்மைபற்றி ஆய்ந்தறிவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. மேலும் ஒழுங்கமைக்கப்படாத ஞாபக ரீதியிலான குறிப்புக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட முடிபுகள் நம்பகத்தன்மையற்றவையாகும். அவை அவதானிப்பாளரின் கோடல் தன்மையை எடுத்துக் காட்டும் தகவல்களாகவும் இருக்கக்கூடும். தனியான் ஞாபகம் பெரும்பாலும் பூரணமானதாகக் காணப்படமாட்டாது. பெரும்பாலானோர் தமக்குத் தேவையான விடயங்களை மாத்திரமே நினைவில் வைத்திருக்கக் கூடும். எனவே அவதானிப்பவற்றை உடனடியாகப் பதிவு செய்து கொள்ளல் விஞ்ஞான முறையின் முக்கியமானதொரு பண்பாகும்.

விஞ்ஞான அவதானிப்பின் மற்றுமொரு பண்பு அதன் புறவயத் தன்மையாகும் (Objective) அவதானிப்பவரின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், ஆர்வங்கள், விருப்பங்கள் என்பன அவதானிக்கப்படும் விடயங்களில் தாக்கம் விளைவிக்க இடமளிக்காமையே இதன் மூலம் கருதப்படுவதாகும். தாம் அவதானிக்கும் தகவல்களை உள்ளவாறாகவே விளங்கி ஏற்றுக்கொள்வதன் மூலமே புறவயத தன்மையைக் கற்றுக் கொள்ள முடிகின்றது. மாறாகத் தனது கருத்துக்களுக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் அமைய அவற்றைச் சேகரிப்பதால் அல்ல. விஞ்ஞான பூர்வ அவதானிப்புக்கள் பெருந்தொகையானவை சரியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பின், அவதானிப்பாளரின் விருப்புக்களோ, வெறுப்புக்களோ அவ்விடயங்களின் மூலம் வெளிக்காட்டப்படமாட்டாது எனக் குறிப்பிடலாம். புறவயத் தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகின்றது.

அவதானிப்பவர் எதிர்நோக்கும் கோடல் வாய்ப்புக்கள் தொடர்பான விளக்கத்தைப் பெறல், புறவயத் தன்மையினால் எதிர்பார்க்கப்படும் மற்றுமொரு விடயமாகும். அப்போது அவதானிப்பாளருக்கு இவ்வாறான நிலைமைகளில் தவிர்த்திருக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப் பெறுகின்றது. தனியாளது பழக்க வழக்கங்கள், பக்கச்சார்பான கருத்துக்கள், ஆர்வங்கள் என்பனவே புறவயத் தன்மையில் பெரிதும் தாக்கம் விளைவிக்கின்றன. விஞ்ஞான முறைகள் தொடர்பான போதிய பயிற்சி, ஆராய்ச்சி ரீதியான பரீட்சார்த்த நடவடிக்கைகளை நன்கு ஆய்வு செய்தல், தரவுகளை புறவயத் தன்மையுடனும் அகவயத் தன்மை அல்லாத விதத்திலும் பயன்படுத்தும் விதத்தை அவதானித்தல் ஆகியவற்றின் மூலம் இக் குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்ளலாம். தமது நடவடிக்கைகளை இடையறாது விமர்சன ரீதியான மதிப்பீடுகளுக்குட்படுத்துதல் விடயிக்குரிய தன்மையைக் காத்துக் கொள்ளக் கூடிய மற்றுமொரு முறையாகும்.

விஞ்ஞான அவதானிப்புக்களைப் பெறுவதில் பயிற்சி பெற்றோரே அவ்வாறான அவதானிப்புக்களைப் பெறல் வேண்டும். முறையற்ற, ஒழுங்கற்ற, அவதானிப்பாளர்கள், தாம் ஆய்ந்தறிய வேண்டிய விடயங்கள் பற்றிய விளக்கத்தை உணர்ந்திருக்க மாட்டார்கள். பயிற்சி பெற்ற அவதானிப்பாளர்களால் பெறப்படும் தகவல்கள் கூடிய விஞ்ஞான பூர்வ தன்மையைக் கொண்டதாகக் காணப்படும். தவறான அவதானிப்புக்கள் மூலம் ஏற்படக் கூடிய குறைபாடுகள், வழுக்கள் பற்றிய விளக்கத்தை அவர்கள் பெற்றுள்ளமையே இதற்கான காரணமாகும்.

### 2. பரிசோதனை

விஞ்ஞானப் பரிசோதனைகள் ஆளுகை நிபந்தனைக்கு அமையவே மேற்கொள்ளப்படும். ஒன்று தவிர்ந்த ஏனைய அனைத்து மாறிகளையும் மாறாது வைத்து அவ்வாறான ஆளப்பட்ட (கட்டுப்படுத்தப்பட்ட) மாறியை மாற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்குள்ளாக்கி ஆய்வு செய்வதன் மூலம் பரிட்சார்த்த விஞ்ஞான ஆய்வுகளை நடத்தலாம். ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட நிபந்தனைகளே இங்கு மாறி எனக் கருதப்படுவதாகும். ஒன்று தவிர்ந்த மற்றைய அனைத்து மாறிகளையும் ஆளாவிடின் பெறுபேற்றைப் பெற்றுத் தந்த மாறி எது என்பதை நாம் அறிய முடியாத நிலை ஏற்படும். உதாரணமாகத் தாவர வளர்ச்சியில் இரசாயனப் பதார்த்தமொன்று ஏற்படுத்தும் தாக்கம் பற்றி ஆய்ந்தறிய வேண்டியுள்ளது எனக் கொள்வோம். இங்கு தாவர வளர்ச்சியில் தாக்கம் விளைவிக்கும் வித்துவகை, நீர், சூரிய ஒளி, வெப்பநிலை, ஈரலிப்பு போன்ற ஒவ்வொரு காரணியும் மாதிரியில் அடங்கும் ஒவ்வொரு பாத்திக்கும் சம அளவில் கிடைக்க வகை செய்தல் வேண்டும். பின்னர் பரிசோதனைக்குள்ளாக்கப்படும் இரசாயனப் பதார்த்தத்தை மாத்தரம் வெவ்வேறு அளவுகளாகப் பரிசோதிப்பதன் மூலம் தாவர வளர்ச்சியில் அது தாக்கம் விளைவிக்கும் விதத்தை ஆய்ந்தறியலாம். ஒரு மாறியை மாத்திரம் மாற்றத்துக்குட்படுத்தி, மற்றைய அனைத்து மாறிகளையும் மாறாது வைத்துப் பரிசோதனையை நடத்துவது விஞ்ஞானப் பரிசோதனை முறையின் முக்கியமான ஒரு படிமுறையாகும். சில விஞ்ஞானப் பரிசோதனைகளில் இவ்வாறாக மாறிகளைச் சரியாக ஆளாமை காரணமாகப் பல வழுக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான பரிசோதனைகள் மூலம் மேற்கொள்ளப்படும் முடிவுகளின் திருத்தமானதன்மையில் குறைபாடுகள் அதாவது வழுக்கள் காணப்படுகின்றன.

**செயற்பாடு - 1**

1. விஞ்ஞான ஆராய்ச்சி நுட்பமுறைகளைப் பயன்படுத்தும் போது கல்விச் சமூகவியலாளர் என்றவகையில் பாடசாலையில் / வகுப்பில எதிர்நோக்க வேண்டிய கஷ்டங்களைப் பதிவு செய்து கொள்க.

2. உங்களது பாடசாலையில் யாதேனுமொரு பிரச்சினையை தெரிவு செய்து அது தொடர்பான விஞ்ஞான பூரவ அவதானிப்புக்களை மேற்கொள்க. அவ்வவதானிப்புக்களைத் திட்டமொன்றுக்கு அமைய ஒழுங்கமைத்துப் பதிவு செய்து கொள்க.

3. உங்கள் பாடசாலையில், பெருமளவுக்கு ஒத்த தன்மைகளைக் கொண்ட மாணவர்களடங்கிய வகுப்புக்கள் இரண்டை அல்லது மாணவர்கள் குழுக்கள் இரண்டைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். இம்மாணவர்களின் வயது, சமூக வகுப்பு, கற்கும் திறன், இனம், மதம் என்பன சமனானவையாக இருத்தல் வேண்டும். பின்னர் ஒரு குழுவுக்கு விரிவுரை முறை மூலமும் மற்றைய குழுவுக்கு செயற்றிட்டமொன்றின் மூலமும் ஒரே தலைப்புப் பற்றிக் கற்பிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, கற்பித்தல் முடிவடைந்ததன் பின்னர் மதிப்பீட்டு முறையொன்றின் மூலம் இக்குழுக்களைப் பரீட்சிக்க. நீங்கள் பெற்ற பெறுபேறுகளைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்க.

## விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சி முறையின் அடிப்படைப் படிமுறைகள்

அடுத்தாக நாம் மேலே குறிப்பிட்ட விடயங்கள் விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சிக்கு எவ்வாறு பொருத்தமுடையவையாக அமைகின்றன எனக் கவனிப்போம். விஞ்ஞான ஆராய்ச்சிகளில் இவ்வியல்புகள் அனைத்தும் காணப்படும் அதேவேளை அவற்றுக்கு மேலதிகமாக ஒன்றுடனொன்று தொடர்புடைய பல கருமத் தொடர்புகளும் அடங்குகின்றன. இக்கருமங்கள் ஒன்றிலிருந்தொன்று வேறுபடாதன. அவை பெரும் பாலும் ஒன்றுடனொன்று தொடர்புடையனவாகும். விஞ்ஞான முறையில் அடங்கியுள்ள இப்படிமுறைகள் ஒன்றுடனொன்று மிக நெருங்கிய தொடர்புடையன ஆகையால் மேற்கொள்ளப்படும் படிமுறை இறுதிப்படி முறையின் தன்மையைத் தீர்மானிப்பதாக அமையும். ஆராய்வுக்காக ஒரு தலைப்பை தெரிவு செய்து கொள்வதன் மூலமே ஆராய்ச்சிக் கருமத் தொடர் ஆரம்பிக்கின்றது. பின்னர் அது தொடர்பான தரவுகளைச் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்வு செய்து ஆராய்ச்சி அறிக்கை தயார்ப்படுத்தபட்டுச் சமர்ப்பிக்கப்படும். இவ்வறிக்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஆய்வுக்குட்பட்ட கருதுகோள்கள் உறுதிப்படுத்தப்படவோ, நிராகரிக்கப்படவோ, திருத்தம் செய்யப்படவோ இடமுண்டு. விஞ்ஞான முறையில் அடங்கியுள்ள பிரதானமான படிமுறைகள் தொடர்பான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**1. பிரச்சினையை ஒழுங்காகத் தயார்ப்படுத்திக் கொள்ளல்**

கல்விசார்ந்த அல்லது சமூகம் சார்ந்த அல்லது விஞ்ஞான பூர்வ முக்கியத்துவமுடைய பிரச்சினையொன்றினை ஆய்வுக்காகத் தெரிவு செய்து அதனைத் தெளிவாக அறிமுகம் செய்வதே இதன் மூலம் கருதப்படுவதாகும். தெரிவு செய்துகொள்ளும் பிரச்சினையைக்-கருதுகோளாகவும் சமர்ப்பிக்கலாம். உதாரணமாக, கீழ்ச் சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகள் உயர் சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளைவிடக்குறைவான புள்ளிகள் பெறுகின்றனர் என்பது ஆய்வுக்குட்படுத்தக் கூடிய ஒரு கருதுகோள் (Hypothesis) ஆகும் எனக் குறிப்பிடலாம். கருதுகோள் என்பது ஒரு தற்காலிகக் கருத்தாகும் அல்லது உண்மையெனத் தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு முடிபாகும். இதற்கான முடிபு தொடர்பான தகவல்களைச் சேகரித்து அம் முடிவு சரியானது தானா என நாம் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். நாம் தெரிவுசெய்து கொள்ளும் பிரச்சினைகள் யாவும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யக் கூடியவையாக அமைய வேண்டியது அவசியமாகும். பொதுவாக ஒரு பரிசோதனை தொடர்பாக ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பான நீண்ட ஆய்வு பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். எனவே ஆராய்ச்சியுடன் தொடர்புடைய ஆராய்ச்சி ஆக்கங்கள் அனைத்தையும் பகுப்பாய்வு ரீதியில் நுணுகி நோக்குவதன் மூலம் ஆய்வுக்குத் தேவையான நுணுகிய கண்ணோட்டத்தையும், கருதுகோள்களையும் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு வேண்டிய பின்னணி அறிவையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**2. ஆராய்ச்சித் திட்டத்தைத் (Research Design) தயார்படுத்துக் கொள்ளல்**

ஆராய்ச்சிக்குத் தேவையான தரவுகள் எவ்வாறாகச் சேகரிக்கப்படுகின்றன? அதற்குரிய நுட்பமுறைகளும், உபகரணங்களும் எவ்வாறு இருத்தல் வேண்டும்? அதன் மூலம் கண்டறியப்படும் தரவுகளை எவ்வாறு பகுத்தாய்தல் வேண்டும்? பயன்படுத்த வேண்டிய தற்கூறின் மாதிரியின் (Sample) அளவு யாதாக இருத்தல் வேண்டும்? எவ்வெவ்விடங்களில் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்? எவ்வளவு காலத்துக்கு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்? போன்றவற்றைத் தெளிவுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

**3. தகவல்களைச் சேகரித்தல்**

ஆராய்ச்சிக்காக மேற்படி உபகரணங்களைப் பயன்படுத்தித் தரவுகளைச் சேகரிப்பதும் அத்தரவுகளைக் குறித்து வைப்பதும், பதிவு செய்து கொள்வதும் இச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்களாகும்.

**4. பகுப்பாய்வு**

பெற்றுக் கொண்ட தரவுகளைப் பயன்படுத்திப் பகுப்பாய்தல் இப்படியில் அடங்கும். தரவுப் பகுப்பாய்வின் போது முக்கிய விடயங்கள், சிறப்பாக எடுத்துக்காட்டப்படும் கருதுகோள் உறுதிப்படுத்தப்பட்டதா என்பது இங்கு பரீட்சிக்கப்படும். சேகரிக்கப்பட்ட தரவுகளின் தன்மை பண்புரீதியானதா, அளவு ரீதியானதா என்பதற்கு அமையவும் ஆராய்ச்சியின் நோக்கங்களுக்கு அமையவும் வெவ்வேறு பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யலாம். உதாரணமாக, சதவீதங்களைப் பிரயோகித்தல், தொடர்புகளைக் காணல் போன்ற முறைகளைக் கையாளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. முடிவுகளை மேற்கொள்ளலும், பெறுபேறுகளைப் பதிவு செய்தலும்.**

தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தாம் ஏற்கனவே சமர்ப்பித்த கருதுகோள்கள் எந்த அளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன, அவை நீக்கப் பட வேண்டுமா, ஆராய்ச்சியின் மூலம் ஏற்பட்ட முடிவுகள் யாவை, அவற்றை எவ்வாறு விளக்கலாம் என்பது இப்படிமுறையின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும். அத்தோடு ஆராய்ச்சியாளரினால் பிரயோகிக்கப்பட்ட நுட்பமுறைகள், ஆராய்ச்சிக் கருமத்தொடர்பாக சேகரித்த தகவல்கள் என்பவற்றை அவ்வாய்வு தொடர்பாக ஆர்வம் காட்டும் ஏனைய ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்குதல் வேண்டும். இதற்காக ஆராய்ச்சியாளர்களால் பின்பற்றப்பட்ட படிமுறைகளையும், கண்டறிந்த தகவல்களையும், எய்திய முடிவுகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை மிகச் தெளிவாகவும், சுருக்கமாகவும் வெளியிட வேண்டியது ஆராய்ச்சியாளரின் பொறுப்பாகும். எவ்வாறெனினும் மேற்குறப்பிடப்பட்ட படிமுறைகள் எவ்வித நெகிழ்தன்மையின்றிக் கையாள வேண்டுமென எதிபார்க்கப்படுவதில்லை. சிலவேளைகளில் பின்னைய படிமுறைகளின் போது முன்னைய படிமுறைகளின் போது மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் ஏற்படலாம். உதாரணமாக, முன்னர் மேற்கொண்ட ஆராய்ச்சி ஆக்கங்களைப் பகுப்பாய்வு ரீதியில் கவனித்தன் பின்னர் ஆராய்ச்சியாளர் ஆரம்பத்தில் பிரச்சினையில் கவனம் செலுத்திய விதத்துக்கு அமைய கருதுகோளை மீண்டும் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். எனவே மேற்படி படி முறைகளில் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட நெகிழ்மையற்ற கருமங்கள் நிகழ்வதில்லை. இக்கருமங்கள் பெரும்பாலும் ஒன்றுடனொன்று தொடர்புடையவையாகும். இக்கருமத் தொடரைத் தெளிவாக விளக்கிக கொள்வதற்கு பின்வரும் உதாரணம் போதுமானதாகும்.

சமூகவியற் பாடத்தில் விஞ்ஞான முறை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் இதன் மூலம் காட்டப்பட்டுள்ளது. எமில் டர்க்ஹயிம் (Emile Durkhiem) எனும் சமூகவியலாளர் 'தற்கொலை புரிந்து கொள்ளல்' தொடர்பாக நடத்திய ஆராய்ச்சியொன்றில் சமூகப் பிரச்சினைகளில் விஞ்ஞான முறையைப் பிரயோகிக்கக் கூடிய முறையை எடுத்துக் காட்டியுள்ளார். சமூக ஏகத் தன்மை, அதாவது ஒன்றிப்புத் தன்மை, தற்கொலை புரிந்து கொள்ளலில் எந்தளவுக்குத் தாக்கம் விளைவிக்கின்றது என்பதை அறிவதே டர்க்ஹயிமின் நோக்கமாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தற்கொலை புரிந்து கொண்டோர் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை அவர் தமது ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தினார். அவர் கையாண்ட வழிமுறை விஞ்ஞான முறைக்கான ஒரு சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. யாதேனுமொரு பிரச்சினையை முன்வைத்து அது தொடர்பானகருதுகோளைக் கட்டியெழுப்பி, அக்கருதுகோளைப் பரிசோதனைக்குட்படுத்தி அவற்றைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் முடிவுகளை மேற்கொள்ளலே அவர் கையாண்ட வழிமுறையாகும்.

தற்கொலை புரிந்து கொள்ளல் தொடர்பாக டர்க்ஹயிம் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட கருதுகோள் 'சமூகத் தொடர்புகள் குறைவடைதலே தற்கொலை புரிந்து கொள்ளலுக்கான பொதுவான காரணமாக அமைகின்றது' என்பதாகும். வீட்டுத் தொடர்புகள் போன்ற ஏனைய விடயங்களும் இப் பிரச்சினையுடன் தொடர்புடையன என அவர் ஏற்றுக் கொண்டார். இம் மேலதிக விடயங்கள் தொடர்பாக அவர் பிற கருதுகோள்களையும் கட்டியெழுப்பினார். அதுவரையில் ஏனையோரால் சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒன்றுசேர்த்து அவற்றைப் பகுப்பாய்வு செய்ததன் மூலமே அவர் தனது கருதுகோள்களைக் கட்டியெழுப்பினார். பெருந்தொகையான தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர், டர்க்ஹயிம் தமது கருதுகோள்களின் குறைபாடுகள், செம்மை ஆகிய தொடர்பான முடிவுகளை மேற்கொண்டார். சமூக ஒருமைப்பாட்டுக் குறைபாடே பெருமளவுக்கு தற்கொலை புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும் காரணியாகும் என்பது அவரது ஆராய்ச்சியின் மூலம் தெளிவாகியது. ஆராய்ச்சிக் கருமத்தொடர் ஒன்றன்மீதொன்று தங்கியுள்ள பல படிமுறைகளைா கொண்டது என்பது தெளிவாகின்றது. யாதேனும் படிமுறை வெற்றிகரமானதாக அமைய வேண்டுமெனின் அதற்கு முந்திய படிமுறை பூரணத்துவமடைந்திருக்க வேண்டியது அவசியமாகும். உதாரணமாக, தரவுகளைக் சேகரிக்க முன்னர் அவற்றைப் பகுப்பாய்வு செய்ய முடியாது. அவ்வாறே தனது பாடப்பிரிவு தொடர்பாகவோ தரவுப் பகுப்பாய்வு தொடர்பாகவோ போதிய அறிவு அற்ற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர். போதிய அளவு கருது கோள்களைக் கட்டியெழுப்பிக் கொள்ள முடியாது. ஆரம்பப் படிமுறைகள் தொடர்பான போதிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆராய்ச்சிக் கருமத்தொடர் இடையீடின்றி நிகழுவதொன்றாகும். மேற்குறிப்பிட்ட படிமுறைகள் ஆராய்ச்சிக் கருமத் தொடரை முற்றுப் பெறச் செய்வதில்லை. விஞ்ஞான முறையின் மூலம் யாதேனும் முடிவோ, உண்மைநிலையோ காட்டப்படாமையே இதற்கான காரணமாகும். ஒவ்வொரு பரிசோதனையும் குறித்த வரையறைகளுள்ளயே நிகழுகின்றது. உதாரணமாக, டர்ஹயிம் அவரது ஆய்வுக்காகத் தற்கொலை செய்து கொள்ளல் தொடர்பாகக் காணப்பட்ட புள்ளிவிபரங்களைப் போதுமானவை என ஏற்றுக்கொண்டார். எனினும் இது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்த டக்ளஸ் (Jack Douglas) என்பவர் அக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது கருத்துக்கு அமைய எவரேனும் தனியாள் சமூகத்துடன் நன்கு பிணைப்புற்றுக் காணப்படின் அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் அந்நபரின் மரணத்தைப் பொதுவாகத் தற்கொலை எனக் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். எனவே தற்கொலை செய்து கொள்ளல் தொடர்பான புள்ளி விபரங்களை நாம் மிக மிகக் கவனமாக ஆய்வு செய்தல் வேண்டும் என அவர் எடுத்துக்காட்டுகின்றார்.

இதற்கு அமைய ஓர் ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொண்ட கருத்துக்களைக் குறித்து மற்றோர் ஆராய்ச்சியாளர் வினாவெழுப்பலாம். அவ்வாறே அவரது முடிவுகள் ஏனைய ஆராய்ச்சிப் பிரச்சினைகளுக்கோ கருதுகோள்களுக்கோ அடிப்படையாக அமையவும் கூடும். தற்கொலை செய்து கொள்ளல் தொடர்பாக டர்க்ஹயிம் சமர்ப்பித்த முடிபுகளின் மெய்ம்மை குறித்து டக்ளஸ் வினாவெழுப்பியுள்ளார். எனவே விஞ்ஞான முறை என்பது தொடர்ந்து நிலவுகின்ற ஒரு வட்டமாகும். ஓர் ஆய்வின் மூலம் தோன்றும் முடிவுகள் புதிய ஆய்வொன்றினது கருதுகோள்களுக்கான அடிப்படையாகும். யாதேனும் ஆய்வின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட முடிபுகள் தொடர்பாகப் பின்னைய ஆய்வுகளின் மூலம் எப்போதும் வினாவெழுப்பலாம்.

செயற்பாடு : 2

1. நீங்கள் கற்பிக்கும் பாடசாலை, வகுப்பறை, சமுதாயம் ஆகியவற்றுள் ஒன்று தொடர்பாக ஆய்வு செய்ய விரும்பும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து ஆராய்ச்சித்திட்டமொன்றினைத் தயாரிப்பீர்.

### 4.3 தரவு சேகரிக்கும் முறைகள்

சமூகவியலில் எப்போதும் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சித் தரவுவகைகள் இரண்டு. அளவறி முறைத் (Quantitative) தரவுகள், பண்பறிமுறைத் (Qualitative) தரவுகள் என்பனவே அவையாகும். அளவறிமுறைத் தரவுகள் பொதுவாக, புள்ளி விபரவியல் பகுப்பாய்வுகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான தரவுகளைச் சேகரிப்பதற்காகத் தரப்படுத்தப்பட்ட, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பகுப்பாய்வு முறைகளுக்கு அமைய உபகரணங்கள் தயார்படுத்தப்படும். அவ்வாறாகச் சேகரிக்கப்படும் துலங்களுக்காகப் புள்ளிவிபரவியல் பெறுமானங்களைப் பிரயோகித்துப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பண்பறிமுறையான தரவுகள் பொதுவாக, யாதேனும் சம்பவங்கள், நிபந்தனைகள், தனியாள்கள், அவர்களுக்கிடையிலான இடைத் தொடர்புகள், மனப்பாங்குகள், நம்பிக்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றை விரிவாக விபரிக்கும் தரவுகளாகும். இவை அளவறிமுறையான தரவுகள் போன்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்கும், உபகரணங்களுக்கும் பொருத்தமானவாறு சேகரிக்கப்படுதில்லை. பரிசோதனையை நடத்துபவர் தனியாள் துலங்கலை அவரவர் கூறும் விதத்திலேயே குறித்துக் கொள்வர். எனவே தகவல்களைச் சேகரிப்பதற்காக பிரயோகிக்கும் வினாக்கள் பெரும்பாலும் திறந்த' வினாக்களாகும். அவ்வாறே, ஆராய்ச்சிக்குள்ளாகும் தனியாள்களுக்கு இயன்ற அளவுக்கு அவர்களது கருத்துக்கள் மனப்பாங்குகள், அனுபவங்கள் பற்றிப் பேசுவதற்கு அவகாசமளிக்கப்படும். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைய பண்பு ரீதியான தரவுகள் ஆழமாயும், விரிவாயும் சேகரிக்கப்படும். தரவு சேகரிப்பதற்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில முறைகள் பற்றி அடுத்ததாக நோக்குவோம்.

**வினாக்கொத்து (Questionnaire)**

இரசாயனவியல் முறைகளின் மூலம் தமது ஆராய்ச்சிகளுடன் தொடர்பு டைய வினாக்களுக்கான விடைகள் கிடைக்கப் பெறுவதில்லை என்பதைக் கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பெரும்பாலான உளவியலாளர்கள் அறிந்து கொண்டனர். எனவே ஜீ. எல். ஹோல் (G.S. Hall) என்பவரும் அவரைப் பின்பற்றிய குழுவினரும் வினாக்கொத்து முறையைத் தரவுகள் சேகரிக்கும் ஊடகமாக வளர்க்க ஆரம்பித்தனர். வினாக்கொத்து முறையின் மூலம் ஒவ்வொரு வினாவுக்கும் துலங்கலைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடும் ஆய்வொன்றில் குறித்த நியமமொன்றினையும், விடைக்குரிய தன்மையையும் ஏற்றுக் கொள்ள வழி பிறக்கின்றது. வினாக்கொத்துக்களை, அமைப்பு (Structured) வினாக்கொத்துக்கள், திறந்த (Open) வினாக்கொத்துக்கள் என இருவகையாக வகுத்துக் காட்டலாம். அமைப்பு வினாக்கொத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வினாக்கள் அடங்கியிருக்கும். அவ்வாறான வினாக்கொத்துக்கள் மூலம் தனியாளிடத்தே ஒளிந்து மறைந்திருக்கும் எதிர்பார்ப்புக்கள், மனப்பாங்குகள், ஆர்வங்கள் போன்றவை யாவை எனக் கண்டறிந்து கொள்வது இலகுவானதாக அமையும்.

**வினாகொத்தொன்றினைத் தயார்ப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்**

வினாக்கொத்தொன்றினைத் தயார்ப்படுத்தும் போது நாம் முதன், முதலில் வினாக்களைத்திட்டமிடலில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். நாம் ஆராயும் தொனிப்பொருளை அதாவது தலைப்பைத் தெளிவாக வரை விலக்கணப்படுத்திக் கொண்டதன் பின்னர் அது தொடர்பாக வினாவ வேண்டுமென எதிர்பார்க்கும் வினாக்கள் யாவை என ஆராய்ச்சியாளர் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். வினாக்கொத்து தேவைக்கதிமாக நீண்டதாக அமையவும் கூடாது. தேவையான வினாக்கள் யாவை என்பதனை முன்னோடிப் பரீட்சையொன்றின் (Pilot Test) மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம். முன்னோடிப் பரிசோதனை என்பது வினாக்கொத்தில் அடங்கியிருக்க வேண்டிய வினாக்களைத் தீர்மானிப்பதற்காக வேண்டிய சிறிய குழுக்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் பரிசோதனையாகும். வினாக்கொத்தைச் சிறு குழுவொன்றுக்கு வழங்கிப் பொருத்தமான வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து கொள்வதே தேவையற்ற, பொருத்தமற்ற வினாக்களை நீக்குவதற்கான மிக உகந்த முறையாகும்.

அடுத்தாக நாம் வினாக்களில் அடங்கியிருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தல் வேண்டும். துலங்கலைக் காட்டுவோர் தம்மிடம் வினாவப்படும் வினாக்களுக்கு இலகுவாக விடையளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இங்கு சரியானதுலங்கலைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது தொடர்பாகவும் ஆராய்ச்சியாளர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வினாக்களை வினாவும் போது, துலங்கலைக் காட்டுவோரை விடையின் பால் ஈர்த்தல் கூடாது. அதாவது, ஆராய்ச்சியாளரின் பக்கச் சார்பு, கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள் போன்றவற்றுக்கு அமைய வினாக்கள் தயார்ப்படுத்தப்படலாகாது. எனவே வினாக்களுக்காகப் பிரயோகிக்கும் மொழி தொடர்பாக ஆராய்ச்சியாளர் கவனஞ் செலுத்தல் வேண்டும். இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக எளிய மொழி நடையைப் பிரயோகிப்பது ஏற்றதாகும். சிக்கலான ஒரு வினாவை வினாவுவதற்குப் பதிலாக, எளிதான சிறிய சில வினாக்களை வினாவுவது பொருத்தமானதாகும். பல பொருள்களைக் கொண்ட சொற்கள், தெளிவற்ற சொற்கள், நிச்சயமற்ற சொற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்கொத்தில் வினாக்களைப் பிரயோகிக்கும் விதம் தொடர்பாகவும் ஆராய்ச்சியாளர்கள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வினாகொத்தின் ஆரம்பத்தில் வினாவப்படும் வினாக்கள் இலகுவானவையாயும், சுவாரசியமானவையாயும் அமைதல் வேண்டும். அவை துலங்கலைக் காட்டுவோரிடத்தே உணர்வுகளை ஏற்படுத்துவனவாக அமையக் கூடாது. உணர்வுகளை ஏற்படுத்தும் வினாகக்ளை வினாவுவதாயின் அவற்றை வினாக்கொத்தின் இறுதிப் பகுதியில் சேர்த்துக் கொள்ளல் மிகப் பொருத்தமானதாகும். வினாக்களை வழங்கும் போது ஆரா ய்ச்சியாளர் இரு வழிவகைகளைப் பின்பற்றலாம். ஆரம்பத்தில் பரந்த வினாவொன்றினை வழங்கிப் பின்னர் படிப்படியாக, சிறப்பான விடயங்க ளின் பால், துலங்கலைத் காட்டுபவரை ஈர்க்க முடியும். அவ்வாறின்றேல் விசேடமான சிறப்பான விடயங்களிலிருந்து ஆரம்பித்து விரிவான - பரந்த வினாக்களின் பால் துலங்கலைக் காட்டுவோரை ஈர்க்க முடியும்.இவற்றுள் எம்முறையைப் பயன்படுத்திய போதிலும், வெற்றிகரமான வினாக்கொத்தொன்றினைத்தயாரிக்க வேண்டுமெனின் முன்னோடிப் பரீட்சையொன்றினை நடத்த வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறான முன்னோடிப்பரிசோதனைகளின் போதே சோதனைக்குரிய பல புது அம் சங்கள் வெளிக்கொணரப்படும்.

**வினாக்கொத்தின் பொருத்தப்பாடும் பொருத்தமின்மையும்.**

தரவு சேகரிக்கும் ஏனைய வழிவகைகளுடன் ஒப்பிடுகையில் வினாக் கொத்துக்குச் செலவாகும். நிதித்தொகை மிகக்குறைவானதாகும், அதனை அஞ்சல் மூலம் அனுப்பிவைத்துக் தரவுகளைச் சேகரித்துக் கொள்ளவும் முடியும். அத்தோடு நேர்முகச் சோதனை போன்று அதிகளவு நேரமும் பணமும் இதற்குத் தேவைப்படுதில்லை, அதனை இலகுவாகத் தனியாள்களுக்கு வழங்க முடியுமாகையால், அக்கருமத்துக்கென விசேடமான திறமைகள் தேவைப்படுதில்லை. பெருந்தொகையான தனியாள்கள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்கு மிக இலகுவாகப் பிரயோகிக்கக் கூடிய முறை வினாக்கொத்து முறையாகும் எனக் கொள்ளப்படுகின்றது.

மேலும், பெரும்பாலான மக்கள்தொகுதியினர் தொடர்பான பரிசோதனைகளின் சீரான தன்மையைப் பேணியவாறு தரவுகளைச் சேகரிக்க ஏற்ற முறையும் வினாக்கொத்து முறையாகும். நேர்முகப்பரிசோதனைகளின் போது இவ்வாறாக ஒருமைப்பாட்டுடன் தரவுகளைச் சேகரிப்பது சற்றுக் கடினமானதாகும். அது ஆராய்ச்சியாளருக்கு அமையவும், சந்தர்ப்பங்களுக்கு அமையவும் மாற்றமடைய இடமுண்டு என்பதே இதற்கான காரணமாகும்.

வினாக்கொத்தில் தமது பெயரைக் குறிப்பிடாத சந்தர்ப்பங்களில் துலங்கலைக் காட்டுவோர் குறிப்பிட்ட அளவுக்குத் தன்னம்பிக்கையுடன் அதனை நிரப்ப முனைவர். அவ்வாறே அதில் பெயர் குறிப்பிடப்படுவதில்லையாகையால். சுயாதீனமான துலங்கலைக் காட்டுவதில் தடையேதும் ஏற்படுவதில்லை. மேலும் வினாக்ககொத்தொன்றினை நிரப்பும் போது, துலங்கலைக் காட்டுபவரிடமிருந்து கணப்பொழுதில் விடை எதிர்பார்க்கப்படுவதில்லை. நேர்முகப் பரீட்சைகளின் போது, துலங்கலைக் காட்டுபவரிடமிருந்து கணப்பொழுதில் துலங்கல் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வினாக்கொத்துகளை வாசித்த பின்னர் அவ்வினாக்களுக்கான விடைகளை அளிக்க வாய்ப்புண்டு. துலங்கலைக் காட்டுபவர் வினாக்கொத்தை நிரப்புகையில், ஆராய்ச்சியாளரின் தவறான முடிவுகள் போன்றவை தரவுகளுடன் சேர்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதில்லை.

எளிதான, தெளிவான, இலகுவான விளங்கிக் கொள்ளக் கூடிய வினாக்கள் அடங்கியிருப்பின் மாத்திரமே பொதுவான வினாக்கொத்து முறையை வெற்றிகரமாகப் பிரயோகிக்கமுடியும், இங்கு எளிதான தன்மை என்பது குடித் தொகைக்கு அமையத் தீர்மானிக்கப்படுவதொன்றாகும் என்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். சிக்கலான விடயங்கள் தொடர்பான நீண்ட விபரங்களை அறிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் வினாக்களை இலகுவாக விளக்கிக் கொள்ளக் கூடிய மக்கட் பிரிவினரிடையே கூட வினாக்கொத்தை நிரப்புகையில் அது தொடர்பாக அவர்களது பூரண ஆர்வத்தை ஈர்த்து வைத்திருப்பது கடினமானதொரு விடயமாகும். எனவே தேவையான விடயங்களை மாத்திரம் வினாக்கொத்தில் உள்ளடக்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானதாகும். எவ்வாறாயினும் வினாக்கொத்துக்கு வழங்கப்படும் விடைகளை இறுதித் துலங்கல்களாகவே ஆராய்வாளர் ஏற்றுக்கொள்ள வேண்டியேற்படுகின்றது. நேர்முகப் பரீட்சைகளிற் போன்று ஆராய்வாளருக்கு அத்துலங்கல்களை ஆழமாத ஆய்ந்தறியவோ அவற்றின் செம்மையைப் பற்றி அறியவோ வாய்ப்புக்கிடைப்பதில்லை. மேலும், அவை துலங்கலைக் காட்டுவோரின் விடைகளை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன. உதாரணமாக துலங்கலைக் காட்டுவோரின் வீட்டுப் பின்னணி, சுற்றுப்புறம், முக்கியமாக தனியாளின் மனப்பாங்குக்கள் போன்றன மூலம் எழுத்துமூல வினாக்கொத்தை வளமூட்டிக்கொள்ள முடியாத நிலையே நிலவுகின்றது. வினைக்கொத்துக்கள் மூலம் விசேடமாக, அஞ்சல் தரவு சேகரிக்கும் வினாக்கொத்துக்கள் (Mail Questionnaire) மூலம் நூறுசத வீத துலங்கலைப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமானதாகும். துலங்கலைக் காட்டல் பெரும்பாலும் பல விடயங்களின் மீது தங்கியுள்ளது. வினாக்கொத்தின் மூலம் தனியாளுக்குக் கிடைக்கும் பயன்கள், அதன் சுவாரசியமான தன்மை, எளிமை, இலகுவாக நிரப்பக் கூடிய தன்மை அவற்றுள் முக்கியமானவையாகும்.

**செயற்பாடு : 3**

1. நீங்கள் கற்பிக்கும் வகுப்பொன்றைச் சேர்ந்த மாணவர்களின் வீட்டுச் சுற்றாடலை விளங்கிக் கொள்வதற்கு வினாக் கொத்தொன்றினைத் தயார்படுத்துக.
2. உங்களது பாடசாலையில் காணப்படும் (பௌதிக மனித வளங்கள் போன்ற) வசதிகள் தொடர்பான ஆய்வொன்றினை மேற்கொள்வதற்காக அமைப்பு வினாக்கொத்தொன்றினைத் தயார்ப்படுத்துக.

### நேர்முகப்பரீட்சைகள்

சிக்கலான தலைப்புக்கள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்கையில, பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள், வினாக்கொத்து முறையை விட, நேர்முப்பரீட்சை முறையேயே கையாள விரும்புகின்றனர். விசேடமாக, பல்வேறு குழுக்களை ஆய்வு செய்வதற்கும், வெவ்வேறுவித தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இம்முறையே பொருத்தமானது என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இது தவிர்ந்த விடத்து குறித்த கல்வி மட்டத்தை எய்தியுள்ள மக்கட்குழு வினரே வினாக்கொத்துக்களுக்கு விடையளிக்க முடியும். எனவே குடித்தொகையில் கல்வியறிவு குறைந்த அல்லது கல்வியறிவு பெறாத மக்கட் பிரிவினர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கும் போது இம்முறையே மிகப்பயனுடையதாக அமைகின்றது. நேர்முகக் கலந்துரையாடல் முறை தொடர்பாக போதிய பயிற்சி பெற்ற ஓர் ஆராய்ச்சியாளர் நன்கு தயார்ப்படுத்தப்பட்ட நேர்முகக் கலந்துரையாடலொன்றின் மூலம் தேவையான தரவுகளை வினாக்கொத்து முறையினை விடச் சிறப்பாகவும், இலகுவாகவும், சேகரித்துக் கொள்ள முடியும். விசேடமாக நீண்ட விபரங்கள் தேவைப்படும் போதும், மிக ஆழ்ந்த தரவுகளைத் தேடியறிய வேண்டிய நிலை ஏற்படும் போதும் இம்முறையைப் பயன்படுத்துவது மிக ஏற்றதாகும். மேலும், ஆய்வுக்குள்ளாகும் குடித்தொகையின் பின்னணித் தகவல்களை வினாக்கொத்தின் மூலம் பெறுவதை விட நம்பகுதன்மை ஆராய்ச்சியாளரின் அவதானிப்புக்கள் மூலம் பெற்றுக் கொள்ளல் ஆகும். மேலும், ஆய்வுக்குள்ளாகும் குடித்தொகையின் பின்னணித்தகவல்களை, வினாக்கொத்தின் மூலம் . பெற்றுக்கொள்வதைவிடச் செம்மையாயும், நம்பகுதன்மையுடனும், ஆராய்ச்சியாளரின் அவதானிப்புக்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

நேர்முகப் பரீட்சைகளையும், அமைப்பு (Structured) நேர்முகப் பரீட்சைகள் எனவும் அமைப்புசாராத (unstructured) அதாவது திறந்த நேர்முகப் பரீட்சைகள் எனவும் இரு பிரிவுகளா வகுக்கலாம். அமைப்பு நேர்முகப் பரீட்சை வினாக்களும் அவற்றுக்குப் பொருத்தமான விடைகளும் நேர்முகப் பரீட்சை வினாக்கோவையில் (Interview Schedule) அடங்கியிருக்கும். எனவே அவ்வாறான வினாக்கோவைகளைத் தயாரிக்கும் போது அவ்வினாக்களுக்கு வழங்கக்கூடிய துலங்கள் அனைத்தையும் அவ்வினாக் கோவைகளில் உள்ளடக்க வேண்டியது அவசியமாகும். அமைப்புச் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகப் பரீட்சைகளை நடத்துவது கடினமானதாக அமையமாட்டாது. அதனைப் பகுப்பாய்வு செய்வதும் சிக்கலானதாக அமையாது. எனினும் தனியாள் காட்டும் துலங்கல், வினாக்கோவையில் அடங்கியுள்ள துலங்கல்களுள் ஒன்றின் பால் ஈர்க்கப்படக் கூடிய தன்மை காணப்படல் இம்முறையில் காணப்படும் ஒரு குறைபாடாகும். சில வேளைகளில், தனியாளிடத்தே தெளிவான துலங்கல் காணப்படாதிருக்கக் கூடும். அவ்வாறான வேளைகளில் அவர் வினாக்கொத்தில் காணப்படும் துலங்கல்களுள் ஒன்றினைத் தெரிவு செய்ய முற்படுவார். அமைப்புச்சார்ந்ததல்லாத அதாவது திறந்த நேர்முகப்பரீட்சையின் போது, துலங்கலைக்காட்டுபவருக்குத் தமது கருத்துக்களையும், மனப்பாங்குகளையும் சுயாதீனமாக வெளிப்படுத்துவதற்காக வாய்ப்புக் கிடைக்கப் பெறுகின்றது. ஆராய்ச்சியாளர் வினாக்களை மாத்திரம் சமர்ப்பிக்கின்றமையால் துலங்கலைக் காட்டுபவர் தமது கருத்துக்களை எவ்வித தாக்கங்களுமின்றி வெளியிடுவதற்கான வாய்ப்புக்கிடைக்கின்றது. எவ்வாறாயினும் இவ்வாறான துலங்கலைப் பகுப்பாய்வு செய்தல் சற்றுக் கடினமானதொரு கருமமாகும்.

நேர்முகப்பரீட்சைக்கான வினாக் கோவையில் அடங்கும் வினாக்களை எவ்வாறு தயாரிக்கலாம் என்பது தொடர்பாகவே, அடுத்ததாக நாம் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வரையறைகுட்பட்ட நேரத்துள் வினவப்பட வேண்டிய பொருத்தமான வினாக்களைத் தெரிவு செய்து கொள்ளல், சற்றுக் கடினமானதொரு கருமமாகும். ஆராய்ச்சி முறைகள் தொடர்பான நூல்களை வாசிப்பதன் மூலம் வினாக்கள் வினவும் முறைகள் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளலாம். இது தொடர்பாகக் கவனஞ் செலுத்த வேண்டிய முக்கியமான சில விடயங்களை அடுத்ததாகக் கவனிப்போம். குறித்த மக்கட்பிரிவினர், குறித்த வினாக்களைச் சரியாக விளங்கிக் கொண்டு, சரியான துலங்கலைக் காட்டக் கூடியதாக இருப்பின் மட்டுமே நேர்முகப்பரீட்சை வினாக்கோவை பயனுடையதாக அமையும். வினாக்களின் எளிமை, அவற்றைப் பயன்படுத்தும் மக்கட்பிரிவினருக்கு அமைய வேறுபடுகின்றமையால், ஆராய்ச்சியாளர் தான் ஆய்வு செய்யவிருக்கும் மக்கட் பிரிவினரின் தன்மையை முன்கூட்டியே விளங்கிக் கொள்ளல் வேண்டும். பின்னர் அம்மக்கட் பிரிவினரை குடித்தொகையொன்றினை முன்னோடிப் பரீட்சைக்காகத் தெரிவு செய்து கொள்ளல் முடியும். உதாரணமாக, துலங்கலைக் காட்டுவோரால் அவ்வினாக்களை விளங்கிக் கொள்ள முடியுமா, வினாக்கள், சிக்கலானவையா, துலங்கலைக் காட்டுவோர் நேரடியாக விடையளிக்கத் தயங்கும் வினாக்கள் எவை போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இவ்வாறான முன்னோடிப் பரீட்சைகள் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

வினாக்கொத்தில் அடங்கியிருக்க வேண்டிய வினாக்களைத் தயாரிக்கையில் ஆராய்ச்சியாளர், முதன் முதலில் தாம் ஆய்வு செய்யவுள்ள ஆராய்ச்சிப் பிரச்சினையைத் தெளிவாக இனங்கண்டு கொள்ளல் வேண்டும். பின்னர் தாம் வினவ இருக்கும் வினாக்கள் யாவை எனத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். வினவும் வினா அளவுக்கதிகமாக நீண்டதாக இருக்கக்கூடாது என்பதை ஆராய்ச்சியாளர் மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும். எனவே தாம் வினவவிருக்கும் ஒவ்வொரு வினாவையும் கவனத்துடன் பரிசீலித்து ஆய்வின் நோக்கங்களுக்கு இயையாத வினாக்கள் இருப்பின் அவற்றை வினாக் கோவையிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும்.

வினாக்கொத்தைத் தயாரிக்கையில் நாம் வினாக்களின் உள்ளடக்கம் பற்றியும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஆராய்ச்சியாளர் வினவும் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான அறிவு துலங்கலைக் காட்டுபவருக்கு உண்டா என்பது பற்றியும் கவனிதத்ல் வேண்டும். விசேடமாக, நினைவில் நிலைத்திருக்கும் தகவல்கள் பற்றியும் ஆராய்ச்சியாளர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். அத்தோடு வினாக்கள் வினவும் போது சமூக நியமங்கள், விழுமியங்கள் போன்ற துலங்கலைக் காட்டுபவரில் தாக்கம் விளைவிக்க இடமுண்டாகையால் அவ்வாறான கருத்துக்களை மறைமுகமாகப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல் வேண்டும். பக்கச்சார்பை உணர்த்தும் வினாக்களை இயன்ற அளவுக்கு வினாக்கொத்திலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும். ஒரே பிரிவைச் சேர்ந்த வினாக்கள் வழங்கப்படுவதாக இருப்பின வினாக்கொத்தின் சமநிலை பேணப்படும் வகையில், ஏனைய அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கள் தொடர்பான சில வினாக்களையும் வினாக்கொத்தில் உள்ளடக்க வேண்டியது ஆராய்ச்சியாளரின் பொறுப்பாகும். நேர்முகப் பரீட்சை வினாக்கொத்தொன்றினைத் தயாரிக்கையில் வினவும் மொழிநடைமிக முக்கியமானதொன்றாகும். சிக்கலான சொற்களைப் பிரயோகித்தல், தெளிவற்ற ஐயப்பாடான வினாக்களை வினவுதல் போன்றன வினாக்கொத்தில் இடம் பெறக் கூடாத அம்சங்களாகும். மேலும் வினாக்களை வினவும் ஒழுங்கு முறையிலும் ஆராய்ச்சியாளர் தனது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். வினாக்களை வினவும் ஒழுங்கு முறைக்கு துலங்கலின் தன்மை வேறுபடக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையே இதற்கான காரணமாகும்.

வினாக்கொத்துக்கள் தொடர்பான முன்னர் நாம் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகவும் உங்களது கவனத்தை ஈர்த்தல் பயனுடையதாகும். இது வரையிற் கலந்துரையாடப்பட்ட அடிப்படை வழிகாட்டல் உரியவிதத்தில் வினாக்கொத்தில் இடம் பெற்றுள்ளதா என அறிவதற்காக முன்னோடிப் பரீட்சைகளை நடத்த வேண்டியது அவசியமாகும்.

**செயற்பாடு 4:**

1. நீங்கள் ஆய்வு செய்ய விரும்பும் சமூகப் பிரச்சினையொன்றினை தெரிவு செய்து கொள்க. அப்பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒத்த இயல்களைக் கொண்ட இரு (மாணவர் ஆசிரியர் பெற்றோர்) குழுக்களை தெரிவு செய்து கொள்ளுங்கள் பின்னர் அவர்களில் ஒரு குழுவினருக்கு அமைப்பு, நேர்முகப்பரீட்சை, வினாக்கொத்தையும் மற்றைய குழுவினருக்கு சிறந்த வினாக்கொத்தையும் வழங்கித் தகவல்களைச் சேகரிக்க இவற்றின் துணையுடன்,

2. இலகுவாகப் பகுப்பாய்வு செய்யக் கூடிய தகவல்கள் எம்முறையின் மூலம் கிடைக்கப் பெற்றன என அறிக.

3. மேற்குறித்த ஒவ்வொரு முறையினதும் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறித்துக் கொள்க.

## 4.4 தனியாள் ஆய்வு முறை அல்லது விடய ஆய்வுமுறை (Case Study Method)

சமூக ஆய்வுகளின் போது பெரும்பாலும், பலதனியாள்களைக் கொண்டதற்கூறொன்று அல்லது அவ்வாறான பல கூறுகள் அல்லது பாரிய மக்கட்பிரிவினரே ஆய்வுக்குட்படுத்தப்படுவதுண்டு. தனியாள் ஆய்வு முறையின் போது ஒரு தனியாள் அலகே ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. அதன் மூலம் ஒரு மாணவர் குழுவையோ, வகுப்பையோ சமூகத்தையோ ஆய்வு செய்யலாம். இங்கு ஆராய்ச்சியாளர் தாம் ஆய்வு செய்யும் தனியாளின் அல்லது தனியாள் அலகின் தற்போதைய நிலைமையின் பால் தாக்கம் விளைவிக்கும் ஒவ்வொருமாறியையும் தேடியறிவார். அத்தனியாள் அல்லது நிறுவனம் அவ்வாறாக செயற்படுவதேன், அந்நிலைமைகளின் மீதோ, நடத்தைகளின் மீதோ பங்களிப்புச் செய்துள்ள கடந்த காலத் தகவல்கள் யாவை, சுற்றாடலுக்கு ஏற்ப அத்தகவல்கள் மாற்றமடைகின்றனவா போன்ற விடயங்கள் தொடர்பாக மிக விரிவாயும் ஆழமாகவும் தகவல்களைச் சேகரிப்பது தொடர்பாகவே ஆராய்வாளார் கூடிய கவனஞ் செலுத்துவார். அவ்வாறான தகவல்களைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர், அத்தனியாளோ தனியாள் அலகோ உள்ளடங்கும் ஏனைய மக்கட் பிரிவினர் தொடர்பாக அத்தகவல்களைப் பொதுமையாக்கஞ் செய்தலே (Generalise) ஆராய்ச்சியாளரின் நோக்கமாகும். இவ்வாறான தகவல்களைச் சேகரிப்பதற்காக நீண்ட கால வரையறை தேவைப்படும் தனியாள் ஆய்வு மூலம் எவரேனுமொரு தனியாள் ஆய்வு செய்யப்படின், அவரது தற்போதைய நிலைமை, கடந்த கால அனுபவங்கள், அவரது சுற்றாடல் போன்றன மட்டுமன்றி இவ்வாறான மாறிகள் ஒன்றுடனொன்று தொடர்புறும் விதம் தொடர்பாகவும் ஆய்ந்தறிதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஆராய்ச்சிகளில் இம்முறை தற்போது பரவலாகப் பயன்படுத்தப்படு கின்றது. உதாரணமாக, பாலியக்குற்றவாளிகள், பாடசாலையை விட்டு விலகிச் செல்வோர், போதைப் பொருள்களைப் பயன்படுத்துவோர், பிரச்சினைப் பாடசாலைகள் போன்றன தொடர்பான விடயங்களை ஆழ்ந்து ஆய்வு செய்வதற்கு இம்முறையே பெரும்பாலும் கையாளப்படுகின்றது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகவே பெரும்பாலான தனியாள் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிக்மண்ட் ஃப்ரொய்ட் (Sigmond Freud) என்பவரின் பிரபல்யம் வாய்ந்த தனியாள் ஆய்வும் கூட அவரது உளவியல் சிகிச்சை நிலையத்துக்கு வருகைதந்த நோயாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் போதே ஆரம் பமாகியது. ஃப்ரொ யிட் தனது நோயாளிகளின் ஆளுமை தொடர்பாக ஆழ்ந்து ஆய்வு செய்ததால் ஆளுமைக்கும், சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும் அவர் ஆழமாக ஆய்வு செய்தார். இவ்வாறாகத் தகவல்களைச் சேகரிப்பதற் காகப் பிரயோகித்த நேர்முகப் பரீட்சைகள், அவதானிப்புக்கள் என்பன மட்டுமின்றி, நோயாளிகளின் கருத்துக்கள், விருப்பு, வெறுப்புக் கள், நடத்தைகள், அவர்கள் கண்ட கனவுகள், எதிர்பார்ப்புகள், அச்சம், ஐயம் போன்றவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் தரவு விளக்கங்கள் ஆகியன பற்றிய நீண்ட விபரங்களையும் வெளியிட்டார். இவ்வாறான பிரச்சினைகளைக் கொண்ட பிறதனியாள்கள் தொடர் பாகவும் இத்தகவல் களின் மூலம் மேற்கொண்ட முடிவுகளைப் பொதுமை யாக்கஞ் செய்யக் கூடியதாக இருக்கும் என அவர் சிந்தித்தார்.

தனியாள் அல்லது தனியாள் அலகு தொடர்பாக ஆழ்ந்து ஆய்வு செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கப் பெறல், தனியாள் ஆய்வு முறையின் பிரதான மானதொரு அனுகூலமாகும். குறித்த தனியாள் தொடர்பாக மேற்கொள்ளப் படும் தனியாள் ஆய்வின் போது அவரது தற்போதைய நடத்தைகளை மட் டுமன்றிக் கடந்தகாலத் தகவல்களையும், சுற்றாடல் சார்ந்த கருமங்களை யும், மனப்பாங்குகளையும் கூட மிக ஆழ்ந்து பகுப்பாய்வு செய்ய முடியும். தனியாள் ஆய்வில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்கு மனித நடத்தைகள் தொடர்பான அகக் காட்சிகளை (Insight) வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. மிக ஆழ்ந்த தகவல்களைத் தேடியறியும் நுட்ப முறை (Intensive Probing) தனியாள் ஆய்வின் சிறப்பான ஒரு பண்பாகும். மாறிகளுக்கிடையே நிலவுகின்ற, ஏற்கனவே கருதப்படாத தொடர்புகளை யும் கூட இம்முறையின் மூலம் கண்டறியலாம்.

எவ்வாறாயினும், இம்முறை மூலம் அறியப்படும் விடயங்களை மற்றைய முறைகளைப் போன்று ஏனைய தனியாள்களுக்காகவோ, நிறுவனங்களுக் காகவோ பொதுமையாக்கஞ் செய்ய முடியாது என்பதை ஆராய்ச்சி முறை நுட்பவியலாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஒரு குறித்த சிறப்பு நபர் அல்லது நிறுவகம் தொடர்பாக அறியப்பட்ட தகவல்களை பிற தனி யாள்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பாகப் பிரயோகிக்க முடியாது என்பது இப்பிரிவினரின் தருக்கமாகும். மேலும் ஆராய்ச்சியாளரின் தனிப் பட்ட கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள், முன் அபிப்பிராயங்கள் போன் றவை தாம் அவதானிக்கும் விடயங்களின் பால் தாக்கம் விளைவிக்க முடி யும் என்பதும் அதனால் பிற முக்கிய விடயங்கள் தவிர்க்கப்படக் கூடும் என்பதும் இம்முறையில் காணப்படும் குறைபாடுகள் என ஏற்றுக் கொள் ளப்பட்டுள்ளன.

இவ்வாய்வுகளின் மூலம் பொதுமையாக்கத்துக்கு அளப்பரிய சேவை ஆற் றப்படுகின்றமையால் பெரும்பாலும் இம்முறை கருதுகோளை வளர்ப்பதற் காக அன்றி அவற்றைச் சோதிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. அவ்வாறாக வளர்க்கப்பட்ட கருதுகோள்களைப் பின்னர் பிற பரிசோதனை முறைகள் மூலம் சோதிக்கலாம். உதாரணமாக, பியாஜே (Piaget) என்பவர் தனியாள் ஆய்வு மூலம் விவேக வளர்ச்சி தொடர்பாக மேற்கொண்ட முடிவுகள் வேறு முறைகளின் மூலம் பின்பு விடயங்களை ஆய்வு செய்வதற் கும் உறுதுணையாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பமுறைகள்

தனியாள் ஆய்வு முறை ஒரு நுட்பமுறைக்கு மாத்திரம் வரையறைப்பட்ட தல்ல. அவ்வாறான ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலும் பல்வகை முறைக ளையும் (Methods) தரவுகள் மூலாதாரங்கள் போன்றவற்றையும் தமது ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கா கப் பயன்படுத்துகின்றனர்.

எவ்வாறாயின் தனியாள் ஆய்வின் போது கட்டாயமாகப் பிரயோகிக்கப்ப டும் ஒரு முறை அவதானிப்பாகும். அவதானிப்பைப் பிரதானமாக இர ண்டு முறைகளின் கீழ் கவனிக்கலாம். பங்குகொண்டு அவதானித்தல் (Participant Observation) பங்கு கொள்ளாது அவதானித்தல் (Non. Participant Observation) என்பனவே அவையாகும்.

முதலாவது அவதானிப்பு முறையில் ஆராய்ச்சியாளர் தாம் ஆய்வு செய்யவு ள்ள குழுவினரின் கருமங்களுடன் ஏதேனுமொரு விதத்தில் தாமும் பங்கு கொண்டு அந்நடத்தைகளை அவதானிப்பார். உதாரணமாக, வகுப்பறையில் மாணவரது நடத்தைக் கோலங்களை அவதானித்தல் ஆராய்ச்சியாளரின் நோக்கமாகும். ஆசிரியர் என்ற வகையில் வகுப்பில் கற்பிக்கும் போதோ, பாடசாலையில் வேறேதும் கருமங்களின் போதோ மாணவரின் நடத்தையை அவதானிக்கலாம். அவ்வாறான வேளைகளில் தான் ஒரு வெளியாள் என் பது தொடர்பான உணர்வு சற்றேனும் ஏற்படுத்தப்படுவதில்லை. இளை ஞர் குழுக்கள் போன்ற குழு ஆய்வுகளை மேற்கொள்ளும் போது ஆராய்ச சியாளர் முதலில் அக்குழுக்களில் அங்கத்துவம் பெற்றுக் கொள்வார். குழுவினர் தம்மை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவர் அக்குழுவின் நட வடிக்கைகளில் ஈடுபட்டுத் தமது அவதானிப்புக் கருமங்களை மேற்கொள் வார்.

பங்குகொள்ளாத அவதானிப்புக்களின் போது ஆராய்ச்சியாளர் தாம் ஆய்வு செய்யும் குழுவினரின் நடத்தைகளுடன் தொடர்புறுவதில்லை. அவர் ஒரு வெளியார் என்ற வகையிலேயே தனது அவதானிப்புக் கருமங்களில் ஈடு படுவார். அவதானிப்பு முறைகள் தவிர்ந்த விடத்து ஆராய்ச்சியாளர், வினாக்கொத்துக்கள், நேர்முகப் பரீட்சைகள் போன்றன மூலமும் தகவல் களைச் சேகரித்துக் கொள்ள முடியும். தனியாள் ஆய்வு முறையின் போது மிக நுணுக்கமாகவும், ஆழ்ந்தும் விடயங்கள் தேடியறியப்படுகின்றமையால் ஆராய்ச்சியாளர் பிரயோகிக்கும் வினாக்கள் சிறந்த வினாவகையைச் சேர்ந் தவையாக இருத்தல் வேண்டும்.

மேலும், ஆய்வுத் தரவுகளின் நம்பகுதன்மை, வளம் என்பவற்றைப் பேணு வதற்காக தனியாள் ஆய்வு முறையைக் கையாளும் ஆராய்ச்சியாளர்கள் பல் வேறு வகைப்பட்ட தரவு மூலாதாரங்கள் பலவற்றைப் பயன்படுத்த முடி யும்.

கல்வித் துறையில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளோர் பயன்படுத்தக் கூடிய சில மூலாதாரங்கள் கீழே தரப்படுள்ளன.

1. செம்மை மிகு மூலாதாரங்கள்.
   1. நிருவாகச் சுற்று நிருபங்கள்.
   2. கொள்கைகள் தொடர்பான வெளியீடுகள்.
   3. சம்பவங்கள் தொடர்பான நாட்காட்டிகள்.
   4. செயற்குழு அறிக்கைகள்.
   5. மாணவர் / ஆசிரியர் குழு தொடர்பான தனிப்பட்ட அறிக்கைகள்.
   6. தினப்பதிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நடுத்தர செம்மையுடைய மூலாதாரங்கள்
   1. அகத்தே பரிமாறப்படும் கடிதங்கள் / செய்திகள்.
   2. மாணவர் ஒப்படைகள்.
   3. அன்றாட சம்பவங்கள் தொடர்பான கலந்துரையாடல்களும், உரையாடல்களும்
   4. எழுத்து மூல நாட்பதிவேடு / அன்றாடக் கருமப் பதிவேடுகள்.

3. செம்மை குறைவான மூலாதாரங்கள்
   1. பாடசாலைப் புதினத்தாள்கள்.
   2. அறிக்கைப் புத்தகங்கள்.
   3. மாணவர் கட்டுரைகள்.
   4. சுவர்களில் / மலசலகூடங்களில் எழுதப்படும் குறிப்புகள் / சுலோகங்கள்.

**செயற்பாடு : 5**

1. மாணவனொருவனைப் பற்றி ஆய்வு செய்வதற்கு வேண்டிய தரவுகளைச் சேகரிப்பதற்காகத் தயார்ப்படுத்தப்பட்ட திட்டமொன்றின் மாதிரி இங்கு தரப்பட்டுள்ளது.

**தனியாள் ஆய்வு அல்லது**

**விடய ஆய்வு**

**நோக்கங்கள்**

1. மிகத் திருப்திகரமான தனிப்பட்ட மாணவர் ஒன்றிணைப்புக்கு உதவும் பொருட்டுத் தகவல்களைச் சேகரித்தல்.
   1. மனவெழுச்சி சார்ந்த
   2. சமூகஞ் சார்ந்த
   3. தொழில் சார்ந்த
   4. கல்வி சார்ந்த

2. பின்வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான தரவுகளை (விடயங்களை) பெற்றுக் கொள்ளல்.
   1. மாணவர் ஒன்றிணைப்பு
   2. கற்றல் தொடர்பான கருமத் தொடர்
   3. பாடநெறி ஒழுங்கமைப்பு
   4. பாடநெறி நிருவாகம்

3. தனியாள் ஆய்வுக்குள்ளாகும் மாணவர் தொடர்பான பொதுவான விளக்கத்துக்காகப் பயன்படுத்தக் கூடிய அடிப்படை நோக்காகக் கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலும் பின்வரும் விடயங்களில் வளர்ச்சியில் உதவுதலும்.
   1. போதனை
   2. வழிகாட்டல்
   3. நிருவாகம்

**தரவு சேகரிக்கும் வழிவகைகள்**

1. ஆய்வுக்குள்ளாகும் மாணவருடன் நேர்முகப் பரீட்சை

2. சுற்றாடல் தொடர்பான ஆய்வு (அவதானிப்பு, நேர்முகப் பரீட்சை போன்றன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடசாலை அறிக்கைகள்
   1. திரட்டுக் குறிப்புகள்
   2. சுகாதார அறிக்கைகள்
   3. பரீட்சைகள்
   4. ஒழுக்கம் தொடர்பான அறிக்கைகள்
   5. வரவு தொடர்பான அறிக்கைகள்

4. மாணவர்கள் தொடர்பான முறைமையான தொடர்புகளைக் கொண்ட தனியாள்களின் அறிக்கைகள்
   1. (அ) பெற்றோர்
      (ஆ) சகோதர சகோதரிகள் (Siblings)
      (இ) ஏனையோர்
   2. ஆப்த நண்பர்கள்
   3. (அ) வழிகாட்டுவோரும், போதகர்களும்
      (ஆ) ஆசிரியர்கள்
      (இ) பாடசாலை நிருவாகிகள்
      (ஈ) பாடசாலைச் சுகாதார அதிகாரி
   4. ஏனைய முக்கிய தனியாள்கள்
      (அ) (நிறுவனத்துக்குப் பொறுப்பான) எசமானவர்கள்
      (ஆ) சமயக் கருமங்களை ஆற்றுவோர்
      (இ) பொழுதுபோக்கு நிறுவனங்களுக்குப் பொறுப்பான பணிப் பாளர்கள் அல்லது அவற்றின் பிரதிநிதிகள்
   5. இத்தனியாள்களின் அறிக்கைகள் பொதுவாக, நேர்முகப் பரீட் சைகள் மூலமே பெறப்படும். எனினும் இத்தனியாள்களை நேர் முகப் பரீட்சைகளுக்காகப் பெற்றுக் கொள்ள முடியாவிடின் அவ்வறிக்கைகளை முறைமையாகத் தயார்படுத்தப்பட்ட வினாக் கொத்துக்கள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.
      (அ) தனியாளுக்கும் சுற்றாடலுக்கும் இடையேயான முரண்பாட் டின் தன்மை தொடர்பான சுருக்கமான கூற்று.

**போதனைசார் பிரச்சினைகள்**

எஸ் (S) எனும் மாணவன் உயர் கணிதப் பாடத்தில் தனது உள்ளார்ந்த திறன்களின் மட்டத்தை விட குறைவான நிலையைக் காட்டுகின்றார். அள வறி திறன்கள் பாடத்தில் அவர் 95 வது சதவீத நிலையில் காணப்பட்ட போதிலும், உயர்கணிதம் தொடர்பான இறுதிப் பரீட்சையில் வகுப்பின் ஏனைய மாணவருடன் ஒப்பிடுகையில் அவன் 50 வது சதவீத நிலையைப் பெற்றுள்ளான்.

**வழிகாட்டல் தொடர்பான பிரச்சினைகள்**

1. தனது பிள்ளையிடம் வைத்தியத்துறையில் கற்கக் கூடிய அளவு திறமை யும், ஆர்வமும் காணப்படாத போதிலும் அவன் ஒரு வைத்தியராக மாறுவதைக் காணப்பெற்றோர் விரும்புகின்றனர். கலைப்பாடங்களில் வெற்றிபெறக் கூடிய வாய்ப்பைக் கொண்ட அவனுக்கு உகந்த பாட நெறியொன்றினைத் தெரிவு செய்து கொள்வதற்கான துணையே தேவைப்படுகின்றது. இவ்வாறான வேலைத்திட்டங்களுக்குப் பெற்றோ ரின் அனுமதியும் கிடைக்கப் பெறும்.

2. வை (Y) எனும் மாணவனுக்கு குறைந்தளவு தோழிகளே உள்ளனர் என்பது தெரிகின்றது. அங்கத்துவ ஒத்துழைப்பிலிருந்து விலகியிருப்ப தில் அவன் விருப்புக் காட்டுகிறான். அவனை ஒத்த மாணவர் குழு வொன்றினுள் இருக்கையில் ஏதேனும் கதைக்கவோ, ஏனையோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்களில் ஈடுபடவே விரும்புவதில்லை. அவன் அவர்களிலிருந்து விலகித் தனிமையாக இருக்கவே முனைகின்றான். வகுப்பில் யாதேனு மொன்றினை உரத்து வாசிக்கும் படி கட்டளையிடப்படும் வேளைகளில் குறித்த விடையை அவன் அறிந்து வைத்திருந்த போதிலும், கோழை யாக மாறுவது மட்டுமன்றி அழவும் தொடங்கிவிடுவான்.

## நிருவாகப் பிரச்சினைகள்

எட்டாம் ஆண்டில் கல்வி கற்கும் செற் (Z) எனும் மாணவன் வகுப்புத் தலைவனாவான். அவனைப் பின்பற்றும் அவ்வகுப்பு மாணவர்கள் பெரும் பிரச்சினையொன்றினை எதிர் நோக்கியுள்ளனர். அவன் கற்பதில் திறமை காட்டிய போதிலும் சில ஆசிரியர்கள் நிதமும் அவனைக் குறைகூறுவதே அதற்கான காரணமாகும். பொருத்தமற்ற விதத்தில் நடந்து கொள்ளும் அவன், ஏனைய மாணவருக்கும் அவ்வாறே நடந்துகொள்ளும்படி துண்டுத லாகின்றான். வகுப்பு வேலைகளை நிறைவு செய்யாதிருக்கும் படியும் ஏனைய மாணவர்களை எப்போதும் ஊக்குவிப்பான். அவனது நடத்தைப் பாங்கு காரணமாக வகுப்பில் நன்கு கற்கும் மாணவர்களும் தாழ்ந்த மட் டத்தில் காணப்படுகின்றனர்.

## பிரச்சினைகள் தொடர்பான விபரங்கள்

1. பாடசாலையைச் சேர்ந்த தொழில்சார் தனியாள்களின் அறிக்கைகள்.

2. பிரச்சினையின் அளவைக் காட்டக்கூடிய பரீட்சைப் புள்ளி / சோத னைப் புள்ளிகள் என்பன தொடர்பான சுருக்கம்.
   (அ) இவற்றைச் சதவீதமாகவோ யாதேனும் குறித்த அளவுகோல்க ளின் துணையுடனோ அறிக்கைப்படுத்தல் வேண்டும்.
   (ஆ) புள்ளிகளின் அளவுப் <u>பரிமாணம்</u> தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

3. மாணவரின் பிரச்சினைச் சந்தர்ப்பம் தொடர்பான தனியாள் ஆய்வு அவதானிப்பு அறிக்கை.

4. வினாவிற்கு மாணவரின் துலங்கல்கள் தொடர்பான சுருக்கம்.

## தனியாள் ஆய்வுகளின் போது கவனஞ் செலுத்தப்படும் காரணிகள்

**(அ) ஆய்வுக்குள்ளாகும் மாணவனைக் குறிப்பாக இனங்காணச் செய்தல்.**

(1) பெயர் (2) வயது (3) ஆண் / பெண்
(4) வசிப்பிடம் (5) பாடசாலை (6) வகுப்பு / தரம் / ஆண்டு

**(ஆ) உடல் சார்ந்த காரணிகள்**

(1) உயரம் (2) நிறை (3) பொதுவான தோற்றம்
(4) கண்பார்வை (5) காதுகேட்டல் (6) பேச்சு
(7) உடற் குறைபாடுகள் (8) பொதுவான வைத்திய அறிக்கைகள்

(அ) பொதுச் சுகம்
(ஆ) நோய்களும் அதன் பிறதாக்கங்களும்
(இ) தற்போதைய சுக நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(இ) வளர்ச்சிக் காரணிகள்**

1. பிறப்பு / தோற்றம்
2. உணவுட்கொள்ளல் தொடர்பான அறிக்கைகள்
3. உடல் இயைபாக்க அறிக்கைகள்
4. (அ) அமர்ந்திருத்தல்
   (ஆ) தவழுதல்
   (இ) நடத்தல்

**4. மொழி வளர்ச்சி**

(அ) சொற்கள் (ஆ) வாக்கியங்கள்

(இ) வாசித்தல்

(ஈ) உளக் காரணிகள்

1. பொதுவான உளத் திறன்கள்
2. உளக் குறைபாடுகள்
3. விசேட திறன்கள்
4. மனவெழுச்சி உறுதிப்பாடு

(அ) மன நிம்மதி

(ஆ) கட்டுப்பாடு

(இ) அங்கத்துவ பரஸ்பரத் தன்மைகள்
(1) ஆக்கிரமிப்பு (2) விடுவிப்பு

(ஈ) நோய்க்குணங்குறியியல்

**சமூகக் காரணிகள்**

1. குடும்பம்

(அ) பொருளாதார, சமூக மட்டம்

1. வீட்டு நிலைமை
2. நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
3. வீட்டு உபகரணங்கள்
4. வீட்டில் பயன்படுத்தப்படும் மொழி
5. குடும்ப வருமானம்

**(ஆ) தேசிய சமயப் பின்னணிகள்**

**(இ) குடும்ப அங்கத்தவர்களின் கல்வி மட்டம்**

**(ஈ) குடும்ப அங்கத்தவர்களது தொழில் நடவடிக்கைகள்**

**(உ) குடும்பத்தின் அமைப்பு**

1. பிறப்புத் தரம்
2. பெற்றோருடன் உறவுத் தொடர்புகள்
3. சகோதர சகோதரிகளுடன் உறவுத் தொடர்புகள்
4. குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய முக்கிய அங்கத்தவர்கள்

**(ஊ) ஆய்வுக்குள்ளாகும் மாணவர் அங்கத்துவம் வகிக்கும் குடும்பத்தின் பொறுப்புக்கள்**

**2. பிள்ளையின் பொதுவான சமூகத் தொடர்புக் கருவிகள்**

1. கேளிக்கைக் கொட்டகைகள்
2. குழுக்கள்
3. அங்கத்துவ ஒழுங்கமைப்புக்கள்
4. மத வழிபாட்டிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) பிரதானமான நண்பர்கள்
(ஆ) பிரதானமான பொழுது போக்குக் கருமங்களும், விளையாட்டுக் களும்.
(இ) பெண்களுடனான / ஆண்களுடனான தொடர்பு
(ஈ) தொழில் சார்ந்த வரலாறு
(உ) கல்விக் காரணிகள்

1. பாடசாலை சார்ந்த வளர்ச்சி
   (அ) நிகழ்வு வருடம்
   (ஆ) கடந்த வருடம்

2. பாடநெறிகள்

3. வகுப்பில் நிலைமை (சதவீதப்படி பெறுமிடம்)

4. கல்வித் திட்டங்கள்
   (அ) மாணவர் தொடர்பான
   (ஆ) மாணவருக்காகப் பெற்றோரால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள்

5. விசேட தடைகள்

6. விசேட விவேகம்

7. பாடசாலையின் பால் மாணவரிடத்தே காணப்படும் மனப்பாங்குகள்
   (அ) முன்மாதிரி சுருக்கம்

1. பிரச்சினைக்கு ஏதுவான விடயம் தொடர்பான காரணிகள்
   (அ) மாணவரிடத்தே
      1. உடற் காரணிகள்
      2. உளக் காரணிகள்

   (ஆ) குடும்பம் தொடர்பான

   (இ) அங்கத்துவச் சந்தர்ப்பங்கள் தொடர்பான

   (ஈ) பாடசாலை தொடர்பான

**முடிபுகளும் / சிபாரிசுகளும் / விதந்துரைப்புக்களும்.**

(அ) இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் காணப்படும் மூலாதாரங்களையும், காரணிகளையும் எவ்வாறாகப் பிரயோகிக்கலாம்?

(ஆ) பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எவ்வாறான புதிய காரணிகளைப் பிரயோகித்தல் வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்படும் விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சி முறை, சமூகவியற்றுறையிலும் பயன்படுத்தப்படுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சி முறையின் சிறப்பான இயல்புகள் உள்ளன.

1. மெய்ப்பிக்கக் கூடிய சாட்சிகள்
2. முழுமையான ஏதும் இன்மை
3. அறநெறிகள் தொடர்பாக நடுநிலைமை வகித்தல்
4. அவதானம்

என்பனவே அவ்விசேட இயல்பாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தும் ஆராய்ச்சியாளர், அடிப்படையாகக் கையாள வேண்டிய, ஏற்றுக் கொள்ளப்பட்ட சில படிமுறைகள் உள்ளன. தமது ஆராய்ச்சியை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ளல் வேண்டுமெனில், அவர் அப்படிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். அவை ஒன்றின் பின் ஒன்றாக ஒழுங்கு முறையில் கையாளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லையெனினும் அப்படிமுறைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றமையை ஆராய்ச்சியாளர் நினைவில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

ஆராய்ச்சியொன்றுக்காகத் தரவு சேகரிப்பதற்காக நுட்பமுறைகள் பல உள்ளன அவற்றுள்

1. வினாக்கொத்து
2. நேர்முகப் பரீட்சை என்பனவே அவற்றுள் முக்கியமானவையாகும். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றுமொரு முறை, தனியாள் ஆய்வாகும். இவை பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறைகளில் அனுகூலங்களும் உள்ளன பிரதிகூலங்களும் உள்ளன.

## 6.0 பிற்சோதனை

அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்றொடர்களின் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து பின்வரும் வாக்கியங்களின் இடைவெளிகளை நிரப்புக.

1. நிச்சயமாக அவதானிக்கக் கூடிய கோட்பாடுகள் விஞ்ஞான முறையில் ........................................ எனஅழைக்கப்படுகின்றன.

2. விஞ்ஞானத்தின் மூலம் பௌதீக ரீதியான வினாக்கள் தொடர்பாக விடையளிக்க முடியுமெனினும் ........................................ தொடர்பான கருத்துக்களைச் சமர்ப்பிக்க முடியாது.

3. ........................................ அடங்கியுள்ள படிமுறைகள் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையன வாகையால் முதலில் மேற்கொள்ளப்படும் படிமுறை அதற்கடுத்த படிமுறையின் தன்மையைத் தீர்மானிக்கும்.

4. ........................................ அதனைத் தெளிவாக அறிமுகஞ் செய்தலே விஞ்ஞான ஆராய்ச்சியின் ஆரம்பப் படிமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ........................................ பெரும் பாலும், சுயாதீனமான துலங்கலைக் காட்டக் கூடிய பரந்த ஆழ்ந்த வினாக்களே அடங்கியிருக்கும்.

(விஞ்ஞான முறையில், சரிபார்க்கக் கூடிய சான்று, திறந்த வினாக்கொத்துக்களில், அறநெறிகள் அல்லது விழுமியங்கள், பிரச்சினையைத் தெரிவு செய்து)

**பின்வரும் கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கு ஏற்ற சொற் பிரயோகத்தைத் தெரிவு செய்க.**

6. பரம்பொருளொன்று உள்ளது என்பதை விஞ்ஞானம் ஏற்றுக் கொள்கின்றது / ஏற்றுக் கொள்ளவில்லை.

7. சரியான திருத்தமான அவதானிப்பைப் பெறுவதற்காக அடிப்படை அவதானிப்பை மீண்டும் மீண்டும் சோதித்துப் பார்ப்பது அவசியமாகும் / அவசியமில்லை.

8. குறித்ததொரு பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ஆராய்ச்சியின் போது எடுக்கப்பட்ட முடிபுகளைப் புதிய ஆய்வுகளுக்கான அடிப்படையாகப் பயன்படுத்த முடியும் / முடியாது.

9. நேர்முகப் பரீட்சை முறை மூலம் யாதேனும் பிரச்சினை தொடர்பாக ஆழ்ந்த விதத்தில் தரவுகளைச் சேகரித்துக் கொள்ள முடியும் / முடியாது.

10. தனியாள் ஆய்வு மூலம் அறியப்பட்ட விடயங்களை ஏனைய தனியாள் தொடர்பாகவோ நிறுவனங்கள் தொடர்பாகவோ பொதுமையாக்கஞ் செய்ய முடியும் / முடியாது.

## 7.0 விடைகள்

1. சரி பார்க்கக்கூடிய சான்றுகள்
2. அறநெறிகள் அல்லது விழுமியங்கள்
3. விஞ்ஞான முறையில்
4. பிரச்சினையைத் தெரிவு செய்து
5. திறந்த வினாக் கொத்துக்களில்
6. ஏற்றுக் கொள்வதில்லை.
7. அவசியமாகும்.
8. முடியும்.
9. முடியும்.
10. முடியாது.

## 8.0 ஒப்படைகள்

1. கல்விச் சமூகவியலாளர் என்ற வகையில் நீங்கள் விஞ்ஞான ஆராய்ச்சி நடபமுறைகளைப் பயன்படுத்துகையில் உங்களது பாடசாலையில் வகுப்பறையில் எதிர்நோக்கக்கூடிய இடர்ப்பாடுகள் யாவை?

2. தரவுகளைச் சேகரிக்கும் ஒரு நுட்பமுறையான வினாக்கொத்தினைத் தயாரிக்கையில் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

3. பாடசாலைக்கு 'டிமிக்கு' கொடுக்கும் ஒரு மாணவன் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய நுட்பமுறைகள் யாவை? அவற்றுள் ஒரு நுட்பமுறையைக் கையாளும் விதம் தொடர்பான திட்டமொன்றினைத் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச் சொற்றொகுதி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒழுங்கமைக்கப்படாத | - | Unorganized |
| 2. | கருதுகோள் | - | Hyphothesis |
| 3. | பிரச்சினை | - | Problem |
| 4. | பண்பளவிலான | - | Qualitative |
| 5. | தரவுகள் | - | Data |
| 6. | அவதானம் | - | Observation |
| 7. | முன்னோடிச் சோதனை | - | Pilot test |
| 8. | மாதிரி / தற்கூறு | - | Sample |
| 9. | அளவறிமுறை | - | Quantitative |
| 10. | வினாக்கொத்து | - | Questionnaire |
| 11. | தனியாள் ஆய்வு / விடய ஆய்வு | - | Case Study |
| 12. | பலவகை முறைகள் | - | Multiple Method |
| 13. | விஞ்ஞான முறை | - | Scientific Method |
| 14. | பகுப்பாய்வு | - | Analysis |
| 15. | திறந்த | - | Open |
| 16. | அமைப்பு சார்ந்த | - | Structured |
| 17. | நேர்முகப் பரீட்சை | - | Interview |
| 18. | பங்கு கொண்டு அவதானித்தல் | - | Participant Observation |
| 19. | பொதுமையாக்கம் | - | Generalisation |
| 20. | நுட்ப முறைகள் | - | Techniques |

## 10.0 மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்


1. Ary, D. Jacobs L. C. Razavieh, **An Introduction to Re*search in Education.** Holtt Rinehart and Winston Inc. U. S. 1972.

2. Bogdan, R. C. Biklen, S. K. **Qualitative Research in Education. An Introduction** to Theory and Methods. Boston: Allgn and Bacon Inc. 1982.

3. Burgress, R. G. Strategies of Educational Research: Qualitative Methods. Former Press. London 1985.

4. Cohen, L and Manion L. **Research Methods in Education.** Croom Helm London 1980.

5. Denzin, N. **The Research Act in Sociology : A Theoretical Introducation to Sociological Methods.** The Butterworth Group London 1970.

6. Kerlinger, F. N. **Foundations of Behavioural Research.** Holt Rinehart and Winston, New York 1970.

7. Moser, C. A. and Calton, G. **Survey Methods in Social Investigation, London, Heinman, Education 1971.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடப்பட்டது:
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org